Registered as a Newspaper in Ceylon

★ ★

விலை சதம் 20




# ஈழநாடு

வாரமலர்

மலர் 12 | சாதாரண | ஆடி 24 | ஜமா. ஆகிர் 6 | (9-8-70) | ஞாயிற்றுக்கிழமை | இதழ் — 179

# சாதியை இழுத்துப் பேசினால் உடனடியாகக் கைதாவர்!

## வடபகுதி பொலிஸ் அதிபர் எடுத்துள்ள நடவடிக்கை

— பாமா ராஜகோபால் —

சாதியின் அடிப்படையில் சிறுசிறு அசம்பாவிதங்கள் நடைபெற்றால் அது சம்பந்தப்பட்டநபர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் அத்துடன் அவர்கள் பொலிஸாரிடம் மாட்டிக் கொள்ளநேரிடும்.

வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் உத்தரவொன்றைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ்நிலையங்களும்இந்த உஷார் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

யாழ்ப்பாணம் ரயில்நிலைய பயங்கர சம்பவத்தைத் தொடர்ந்து, மாவிட்டபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், மற்றும் சில இடங்களிலும் நடைபெறும் அசம்பாவிதங்களையடுத்து வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் இப்படியான அசம்பாவிதங்கள் தொடர்ந்து தலைதூக்காத முறையில் கடும்நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

### நடவடிக்கைகள்

பொலிஸார் எடுக்கவேண்டியநடவடிக்கைகள்குறித்து சுற்றறிக்கையொன்றசகல பொலிஸ் நிலையங்களுக்கும் அதிபர் அனுப்பிவைத்துள்ளார்.

0 சாதியின் பெயரால்சிறுசிறு சம்பவம் நடந்தாலும், சாதியை இழுத்து பேசினாலும், சம்பந்தப்பட்டவர்களை உடனடியாக கைதுசெய்யவேண்டும். 0 இப்படியான சம்பவங்களின்மீதுகைதுசெய்யப்பட்டு வழக்குத் தொடரும்போது, இருபகுதியினரும் சமரசத்துக்கு வந்தாலும் பொலிஸார்வழக்கைவாபஸ் பெறக்கூடாது. தொடர்ந்து வழக்கைநடாத்தவேண்டும்.

பொலிஸ் அதிபர் உத்தரவைத்தொடர்ந்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் வருமாறு.

0 ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் ஒரு பொலிஸ்காரர் கிராமங்களுக்குள் சென்று தகவல் சேகரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளார் அவர் சாதியின் பெயரால் சிறுசிறுசம்பவங்கள் நடந்தாலும், திட்டமிடப்பட்டாலும் தகவல்களை சேகரித்துக் கொண்டு வருவார்.

இப்படியான வன்சம்பவங்கள் நடைபெறும் பகுதிகளிலுள்ள பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிகள் இரவு பகல் கிராமங்களுக்குள் சென்று நிலைமையைக்கண்காணிக்கவேண்டும்

யாழ்ப்பாணம் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு வரக்கொட தலைமையில் திடீர் பரிசோதனைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழு யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள

(16ம் பக்கம் பார்க்க)

## கும்பலொன்றின் திட்டமிட்ட விஷமச் செயலாம்!

ஏதாவது ஒரு பிரச்னையைகிளறி கிளர்ச்சிநடத்த வேண்டுமென்ற நோக்குடன் இயங்கும் ஒரு கும்பலின் திட்டமிட்டவிஷமச்செயலேயாழ். ரயில் நிலையப்பயங்கரச் சம்பவமென பொலிசார் நடாத்திய புலன்விசாரணையில் தெரியவந்துள்ளதாம்.

சாதிப்பிரச்னையைவைத்து இப்போது ஏதாவது ஒரு கிளர்ச்சியை நடாத்தலாமென இந்தக் கோஷ்டி இப்போது திட்டமிட்டுச்செயலாற்றுவதாக பொலிஸ்விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

திட்டமிட்டே இந்தக் கோஷ்டி செயல்படுவதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தம்வசம் ஆயுதங்களைப் பதுக்கிவைத்து மேலும் அசம்பாவிதங்களை நடாத்தாதவாறு பொலிஸ் கடும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

## மாவை தேர்களைத்திருத்த ரூபா 20,000 தேவையாம்

மாவிட்டபுரம் நிருபர்)

மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்தில் எரிந்த தேரின் சேதங்களை நேற்று பொலிசார் கணக்கிட்டனர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் சண்டேசுவரர், ஆறுமுகசுவாமி தேர்கள் எரிந்ததால் ஏற்பட்ட சேதங்களை கணக்கிட உயர்தர பொலிஸ் அதிகாரி நேற்று மாவிட்டபுரத்திற்கு வந்து ஆலய ஆதீன கர்த்தா பிரமஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

பிரமஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள், சண்டேசுவரர் தேரில் முழுதும் எரிந்துவிட்டதால் அதைப்பூரணமாகத் திருத்துவதற்கு15,000ரூபா தேவையென்றும் ஆறுமுகசாமி தேர் ஒருபகுதி சேதம் அடைந்ததால் அதைச் செப்பனிட 5 ஆயிரம் ரூபாவும் செலவிட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

## சுந்தரருக்கு பொலிஸ் பாதுகாப்பு!

(மாவிட்டபுரம் நிருபர்)

மாவை ஆலய நிர்வாகி திரு. ஸி. சுந்தரலிங்கத்தின் கீரிமலையிலுள்ள வீட்டில் மூன்று பொலிசார் காவல் செய்துவருகின்றனர். அவர் செல்லும் இடமெல்லாம் பாதுகாப்பு அளிக்க அவருடன் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் உயர் அதிகாரிகளின் கட்டளைப்படி இரண்டு கிழமைகள் இப்படியாக பொலிஸ் பாதுகாப்பு அளிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## "விஞ்ஞான அபிவிருத்தி மூலமே பிரச்னையை தீர்க்கலாம்"

பருத்தித்துறை, சனி

"இன்றைய அரசாங்கம் விஞ்ஞானவளர்ச்சிக்கு உதவ முன்வந்துளது. விஞ்ஞான அபிவிருத்திமூலமே பெருகிவரும் சனத்தொகையையும் உணவுப் பிரச்னையையும் சமாளிக்கமுடியுமென்பதைக் கல்விப்பகுதி உணர்ந்து கடமையாற்றவிருககிறது."

இவ்வாறு நேற்று முன்தினம் வளலாய் விருந்தினர் விடுதியில்நடைபெற்ற பாடசாலை விஞ்ஞான வெளிவேலை நிலையத் தலைவர் திரு. தோமஸ் ஈப்பென் மேற்படி நிலைய வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிப் பேசும்போது குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் விஞ்ஞான ஆசிரியர் பலர் சமூகமளித்திருந்தனர்.

தொடர்ந்து பேசிய திரு. தோமஸ் ஈப்பென் கூறியதாவது:-

"தொண்டைமானாற்றில் அமைந்துள்ள எமது நிலையம் ஆசியாவிலேயே முதலாவதும், தனித்தன்மை வாய்ந்ததுமாகும் விஞ்ஞானம் வகுப்பறையின்நான்கு சுவர்களுக்குமிடையில் அடங்கியிராது. அதனால் நாடு பலவித பயன்களுமடையவேண்டுமாயின், வெளிவேலை நிலையங்ள் அவசியம். ஐரோப்பிய நாடுகளில் இதுபோன்ற வெளிவேலை நிலையங்கள் மூலம் மக்கள் பெரிதும் பயனடைந்துவருகின்றனர். வெளிநாடுகளிலிருந்து மீண்டும் தமது தாயகம் திரும்பும் விஞ்ஞானிகளின் சேவைகளையும் இந்நிலையம் பயன்படுத்தும்."

## கார்ச்சாரதி பிணையில்

(மாவிட்டபுரம் நிருபர்)

மாவை தேர் எரிப்பு குறித்து கைதான கார்சாரதி 500 ரூபா பிணையில் விடப்பட்டார்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் சண்டேசுவரர், ஆறுமுகசாமி தேர்கள் தீக்கிரையாக்கப்பட்டது குறித்து காங்கேசன்துறைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட மட்டுவிலைச் சேர்ந்த பொன்னர் இராசையா என்ற கார்ச்சாரதி நேற்று மல்லாகம் நீதிபதி திரு. எஸ் ஆனந்தக்குமாரசாமி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்,

சூயஸ் கால்வாய் பகுதியில்

## இஸ்ரேல் எகிப்து யுத்த நிறுத்தம்

லண்டன், ஆகஸ்ட் 8

இஸ்ரேலிலும் எகிப்திலும் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சூயஸ்கால்வாய் பகுதியில் யுத்த நிறுத்தம் நடக்கிறது.

நேற்று வாஷிங்டனிலும் டெல்அவீவிலும் இந்த அறிவிப்பு ஒரேநேரத்தில் வெளியானது.

மத்திய கிழக்குப்பகுதியில் யுத்தநிறுத்தம் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்படுவது குறித்து டெலிவிஷன்மூலம் இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டா மெயர் அறிவித்தார்.

3 மாதகாலம்வரை மத்திய கிழக்குப்பகுதியில் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும், அதன் பின்னர் இருநாடுகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை மேற்கொண்டு இப்பிரச்னைக்கு தீர்வுகாணலாமென்றும் அமெரிக்கா தெரிவித்திருந்த யோசனையை ஏற்றுக்கொண்ட இரு தரப்பினரும் இன்றுமுதல் யுத்த நிறுத்தம் செய்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் அரங்கு

# புதிய அரசியல் அமைப்பில் செனேட் சபைக்குப் புத்துயிர்?

## இலங்கை - இந்திய பிரதமர்கள் அடுத்த மாதம் சந்திப்பு

**பராசரன்**

புதிய அரசியல் அமைப்பிலே செனேட்சபை நீடித்திருக்கவேண்டுமா, வேண்டாமா? அதுதேவையற்றது, வீண்செலவு என்று கருதியவர்களிலும் பலர் அச்சபை அவசியம்தேவைதான்என்று மனம் மாறும்படியான ஒரு காரியம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த ஒரு எம். பி. ஏற்கெனவே ஏதோஒருகுற்றத்துக்காக சிறைத்தண்டனை பெற்றிருந்தார். இப்போது இருந்துவரும் அரசியல் அமைப்புச் சட்டப்படி, அவ்வித சிறைத்தண்டனைபெற்றவர்கள்எம். பி. ஆக இருக்க முடியாதென்கின்றது. குறிப்பிட்ட அந்த எம். பி. ஒழுக்கத்துக்கு மாறாக எவ்விதகுற்றமும் செய்யவில்லைஎன்றும், ஆகவே ஒழுக்கத்துக்கு மாறுபட்ட குற்றத்துக்கான தண்டனைபெற்றவர்கள்மட்டுமே எம். பி. யாக இருக்கத்தகுதியற்றவர் என்று அரசியல் சட்டத்தை அவசரமாகத் திருத்த அரசாங்கம் முற்பட்டது. பார்லிமெண்ட் சபையில் இந்த மசோதா நிறைவேறியது. ஐக்கியதேசியக் கட்சியும் இதை எதிர்க்கவில்லை.

ஆனல் செனேற் சபையில் இம்மசோதா விவாதத்துக்கு வந்தபோது இதிலுள்ளகுறைகளை செனேட்டர்கள்





கே. எம். பி. ராஜரத்னவும், நடேசனும் எடுத்து விளக்கி, இவ்விதமான ஒரு திருத்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்ததை வன்மையாகக்கண்டித்தனர். தங்கள் கட்சியைச் சேர்ந்தஒரு எம். பி. யைக் காப்பதற்காக அரசாங்கம் எடுத்த முயற்சிக்கு ஒரு பெரிய முட்டுக்கட்டை ஏற்பட்டது. கொலை, முதலிய பஞ்சமா பாதகம் செய்தவர்களும் கூட எம். பி. யாக இருக்கலாமென்று புதிய சட்டப்படி ஏற்படுமென்றும், "ஒழுக்கத்துக்கு மாருன குற்றம்" என்பதன் கருத்து தெளிவற்றதென்றும் மேற்குறித்த இரு செனேட்டர்களும் விளாசித் தள்ளினர். இந்தவாதத்தைக் கேட்டதும், அரசாங்கக்கட்சியின் நிலை ஆட்டங்கண்டது. செனேட்சபையில் அரசாங்கத்துக்கு மெஜாரிட்டி பலமில்லை. அது ஒருபுறம் இருக்க, அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் திருத்தச் சட்டவாசகமும் சரி இல்லை அதனுல். இதைப்பற்றி யோசிக்க அவகாசம்வேண்டுமென்று, அரசாங்கக்கட்சியின் சார்பாகக் கேட்கப்பட்டது. அரசாங்கம்பிடிவாதம் காட்டி இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டிருந்தால், ஒன்று, அது செனேட்டில் நிறைவேறியிருக்கமுடியாது. மற்றது, ஒரு கேலிக்கூத்தான, பரிகசிக்கத்தக்க சட்டத்தை நிறைவேற்றிய அவக்கியாதி அரசாங்கத்துக்கு ஏற்படும். இந்த நிலையை உணர்ந்தேஅரசாங்கம் வெற்றிகரமாகப் பின்வாங்க வேண்டியதாயிற்று. செனேட்சபை இந்தப் பெரும்குறையை எடுத்து விளக்கி ஒரு முட்டுக்கட்டை போடாமலிருந்திருப்பின், இத்திருத்தச்சட்டம் நிறைவேறியிருக்கலாம். அந்தப் பெரியதவறு ஏற்படாமல் தடுத்த பெருமை செனேட் சபைக்கே சேரும். அவசரத்திலே இவ்விதமான தவறுகளை பார்லிமெண்ட் சபை செய்தால், அதைத்தடுத்து நிறுத்துவதற்கே செனேட் சபை ஏற்படுத்தப்பட்டது. ஆகவேஇச்சபையை நீடித்து இருக்கவிட வேண்டும். அவசரப்பட்டு இச்சபையைக் கலைத்துவிட்டால், அதிகதவறுகள் ஏற்படஇடமேற்படும்.

ஆகவே புதிய அரசியல் அமைப்பிலே செனேட் சபை நீடித்திருக்க வேண்டுமென்றயோசனை இப்போது அதிக ஆதரவு கிடைப்பதாக இருக்கும்.

இது அரசாங்கத்துக்கு ஒரு தோல்விதான். அத்துடன் செனேட் சபையில் தன் கட்சிப் பலத்தை அதிகரித்துக்கொள்ள அரசாங்கம் இனி கூடிய முயற்சியும் செய்யலாம். எப்படி இந்தப் பெரிய தவறைச் சுட்டிக்காட்டி காப்பாற்றியதற்காக, செனேட் சபைக்கும், சிறப்பாக மேற்குறித்த இரு செனேட்டர்களுக்கும் அரசாங்கம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

0 0 0

வருகிற செப்டம்பர் மாதம் ஜாம்பியாவைச் சேர்ந்த லூஸாகாவில், கூட்டுச் சேரா நாடுகளின் உச்சி மகாநாட்டுக்குப் பிரதமர் ஸ்ரீமாவோ செல்லுகின்ருர். அம்மகாநாட்டில் இந்தியப் பிரதமர் இந்திராவும் கலந்து கொள்வதால், இரு பெண் பிரதமர்களும் முதல் முதல் சந்தித்து பல முக்கிய விஷயங்களைப்பற்றிப் பேச அது நல்ல வாய்ப்பாக இருக்கும்.

அச்சமயத்திலே ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை


(15-ம் பக்கம் பார்க்க)


நீங்கள் வீடு கட்டும் பொழுது

**ஒட்டுப் பலகை கதவுகளை** பாவித்து

விலையை 40% குறைக்கவும்

விலை ரூபா 60/. தொடக்கம் ரூபா 156/- வரையாகும்.



☐ ஒட்டுப் பலகை கதவுகள் பாரம் குறைந்தவை, நீண்ட காலம் பாவிக்கக் கூடியவை எழில் மிக்கவை. இலகுவில் பொருத்த கூடியவை. [illegible] உற்பத்தி செய்யப்பட்டவை. கிரிகம்பலிகை, [illegible] சாதாரண கடைகளிலும் கிடைக்கும்.

☐ கதவுகள் பின் குறிப்பிட்ட அளவுகளில் விநியோகிக்கப்படும்:

உயரம் : 6' 9"
அகலம் : 2' 3", 2' 9", 3' 6"
கனம் : 1¼"

☐ வீட்டுத்திற்கு உபயோகிக்கப்படுகிற மரம் நீண்டகால உழைப்பிற்கா சிறந்த முறையில் பதப்படுத்தப்பட்டவையாகும்.

உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்ட பசை ஈரத் தன்மையை எதிர்க்கும் வன்மையுடையது.

**இக்கதவுகள் பாவனையாளருக்கு உடனடியாக விற்பனைக்கு கிடைக்கும்**

இலங்கை
ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
நிர்: 18, பலாலி வீதிச் சந்தி,
சூரியகுளம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 508.

இலங்கை
ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
420, பௌத்தலோக மாவத்தை
கொழும்பு 7.
தொலைபேசி : 95846, 92906.

THUNDERFLASH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உள்ளத்துக்கனைய உயர்வுபெற வள்ளி மணுளனை உள்ளுவோம்"



## சீ. வே. சிவஞானப்பிரகாசம்

முருகன் தமிழ்க்கடவுள். தெள்ளுதமிழ்க் காவலன்! தமிழ் வேறு முருகன் வேறல்ல! முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் முருகன்! தேவர் குறை தீர்த்த செல்வன்! 'திருமுருகா' என்று ஒருதரம் ஓத திருமுருகாற்றுப் படைதனில் வரும் சேவகன்! இன்னும் சிறப்பாகச் சொன்னுல் தமிழர்களின் அன்பு உள்ளங்களையே கோயிலாகக்கொண்டுள்ள அருளாளன். தன் மெய்யன்பர்களின் தேனூறும் மொழிகளைக்கேட்க வாயூறி நின்ற பிரான் "சொல்லச் சொல்லத் தித்திக்கும் சுந்தரனின் நாமரசம்'' என்ற திருப்புகழும் எம்மனத்துக்குத் தித்திப்பை அதிகரிக்கிறது. "முருகன், குமரன், குகன் என்று மொழிந்து உருகும் செயல் தந்து உணர்வு என்றருள்வாய்'' என்ற கந்தரனுபூதி வேண்டுகோளும் என்மனதில் இயல்பாக உதிக்கிறது. அந்த அழகே உருவானவனின் பூரண எழிலைக்கண்டு, கண்டு உள்ளம் குளிர, கண்குளிர "நாலாயிரம் கண்படைத்திலனே அந்த நான்முகனே'' என்ற மனக்குறைவும் அவன் மெய்யடியார்கட்கு ஏற்பட்டதில் வியப்பில்லையே!

ஆழித் துரும்புபோல் வாழ்க்கையில் அலைக்கப்படுவோர், கதிர்காமம் தேடிச் சென்றனர், அவன் கருணைதனை வேண்டுதற்கு "மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் மரகதமயூரப் பெருமானை'' ஒருமுறை தரித்துவிட்டாலே போதும்' தம் துன்பங்கள் யாவும் அகன்றுவிடும் என்ற தீவிர பக்தி கொண்டனர். அதனுல் அங்கு சூழ்ந்தனர், அங்ஙனம் அப்புண்ணிய ஸ்தலத்தைச் சென்றடைந்தவர்கள் "முத்துமுத்தாகச் சித்தர்கள் சூட்டும் முத்தமிழ்மாலை மொய்த்த'' பொன்னழகனை தம் பாமாலைகளாலும் மேலும்அலங்கரிக்கின்றனர். அவனின் கண்கொள்ளா எழிலில், கருணையில் தம் மனங்களையும், ஏன் தம்மையுமே இழந்த நலத்தில் நெஞ்சக் கனகல்லுப்நெகிழ்ந்துருகக் கசிந்து கண்ணீர் மல்கிப் பிரார்த்திக்கின்றனர். தாம் அவனிடம் வேண்ட வந்த சிறு வரங்களைக்கூட அப்போது மறந்துவிடுகின்றனர். அப்போது அவர்கள் மனதில் எவ்வித பிரார்த்தனை மேலோங்கி நிற்கின்றது?'' முருகா! உன்னுடைய அருளைப்பெறுவாரே பெரியார் என்பதை உணர்ந்தோம். ஆதலால் உன்பால் நாங்கள் கேட்பது,

பொருள் அன்று! பொன் அன்று! போகமும் அன்று! நின்னுடைய அருள் ஒன்றே வேண்டும்!

அந்த ஈடில்லா அருளைப் பெற்று ஆருயிர்களிடத்து அன்பு பூணவேண்டும். அவ்வித அன்புள்ளத்தால் அறநெறியில் வழுவாதிருக்க வேண்டும்.''

எம்பெருமானின் அருளைப் பிரத்தியட்சமாய் நல்கும் அந்த ஸ்தலத்தில் ஓர் பெரும் உண்மையைக் கிரகிக்க எவர் மனமும் தவறுவதில்லை. அங்குகாணப்படும் தனிச்சிறப்பை யாம் நுகர. திரு. வி க. அவர்களின் அரிய பாடல் ஒன்றை யாம் இங்கு நினைவுகூர்வதும் பொருத்தமாகும்.

' சாதிமதப்பிணக்கின்றிச்
சமரசமா(ய்)
எல்லோருஞ் சார்ந்து
சென்றே
ஆதியந்த(ம்) இல்லாத
அறுமுகனே
என்றுன்னை
அரற்றுகின்றார்
சோதி, நின(து) அருள்
அவர்க்குத் துணைபுரிதல்
இயல்பன்றோ சொல்ல
வொண்ணுக்
காதலன்பு கரைகடந்த
கதிரைவேற்
பெருமானே!
கருணைத் தேவே''

இவ்வித புண்ணிய ஸ்தலங்களில் அந்த முருகன் கருணை பெற்றுவிட்டுத் தம் ஊர் திரும்பும் மெய்யன்பர்கள் மீண்டும் அதேவிதமான அமைதியை, நல்லின்பத்தை "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற முறையில், தம் ஊர் ஆலயங்களிலும் அந்த அப்பன் அருளை வெளிப்படையாய் பரிமளிக்கச் செய்வதே அவர்களின் தலையாய கடனன்றோ?

"சாதிநோய் பேய்மதம்
சார்தரு கோயிலுள்
சண்முகநின்
சோதி விளங்குமோ
சூர்தடிந்தாண்ட
சுடர்மணியே
நீதியே என்று
நினையடியார்கள்
நினைந்துநின்று
பாதமே போற்றும்பழமுதிர்
சோலைப் பரம்பரனே''

என்று திரு. வி. க. பெரியார் தம் உள்ளத்தில் கண்ட தெய்வீக உள்ளொளியை திருமுருகன்தான் எம்மனத்துள்ளுங் காட்ட வேண்டும் என்று பிரார்த்திப்போமாக.

"வெள்ளத்து அனையமலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு'' என்ற தமிழ்மறை உணர்வும் எம்மனதிற் பதிவதில்லை!

எனவே தற்போது கதிர்காம உற்சவம் நடைபெறும் இப்புனித பூண்டியில் பலர் அதையொட்டி விரதம் அனுஷ்டித்தும், யாத்திரை சென்றும் வருகின்ற இப்புண்ணிய காலத்தில், அந்த ஞானவடிவேலனே எம் அறியாமையை உள்ளத்து இருளை அகற்றி எங்கும் தன் ஞானஒளியையும் அன்பையும், அஹிம்சையையும், எல்லாவற்றிலும் மேல் நிலையான மனஅமைதி இன்பத்தையும் நல்கி, தன் சந்நிதானத்தில் அனைவரும்

(14-ம் பக்கம் பார்க்க)

# தேயிலை பற்றிய விளக்கம்

# உள்நாட்டு உற்பத்தி, வெளிநாட்டு நிலை இரண்டையும் இலங்கை ஆராய வேண்டும்

## ஈழப் பொருளாதாரமும் வெளி வர்த்தகமும் - 3

## — மு. சின்னத்துரை —

தேயிலை வர்த்தகத்தில் ஏற்படும் வீழ்ச்சியானது தேசிய வருமானத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தி வருகின்றது. சென்றவருடத்தேயிலை வர்த்தக வீழ்ச்சியானது 1000 லட்சம் ரூபாவாகும்,

இலங்கை மக்களின் உணவிற்காக ஆண்டுக்கு 8000 லட்சம் ரூபாவிற்கு சற்று அதிகமான உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றது. தொடர்ந்து வரும் வெளிநாட்டு வர்த்தகத்தின் வீழ்ச்சி, உணவுக்காக அதிக அந்நியச் செலாவணி தேவைப்படும் நிலை என்பதினை மனதில்கொண்டு கடந்தகாலத்தில் திரு. டட்லி செனநாயகாவின் அரசாங்கம் பல நடவடிக்கையை எடுத்தது.

உடனடியாக அந்நியச் செலாவணி பற்றிய பிரச்சனைக்கு தற்காலிகமான தீர்வுகாண பங்கீட்டரிசியை வெட்டி 4000 லட்சம்ரூபா மீதப்படுத்தும் நடவடிக்கையையும் முந்திய அரசுமேற்கொண்டது.

### கடந்த அரசு எடுத்த நடவடிக்கை

இந்தியாவுடன் தேயிலை சம்பந்தமாக ஒப்பந்தம் செய்தும், தேயிலைப்பிரகார சபையை அமைத்தும் இன்னும் பல நடவடிக்கையை முந்திய அரசு எடுத்தது. அதேநேரம் அந்நியச் செலவாணியைச் சேமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்தகைய நடவடிக்கை அடுத்த ஆண்டில் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் வந்ததினுல் கிடைத்த வருமானம் 6லட்சம் ரூபா. இலங்கையிலிருந்து முக்கியமாக மந்திரிமார் வெளிநாடு சென்றதினுல் ஏற்பட்ட செலவு (அதே ஆண்டில்) 15 லட்சம் ரூபாவாகும். இவற்றினை விரிவாக விமர்சனம் செய்ய இக்கட்டுரை பொருத்தமானதொன்றல்ல. எனினும் வெளிநாட்டு வர்த்தகத்தை ஒட்டி சீர்செய்ய எடுத்த நம்பிக்கையற்ற நடவடிக்கைகள் என்பதினைச் சுட்டிக்காட்டினுல் மட்டும் இங்கு போதுமானது.

### தற்போது ஏற்பட்டுள்ள நிலை

முந்திய அரசாங்கம் வெட்டிய பங்கீட்டரிசியை மீண்டும் வழங்கவிருக்கும் இவ்வேளையில் இஸ்ரேல் அரசாங்கத்துடனை இராஜீக உறவைத் துண்டித்ததினுல் யூதர்கள் ஆதிக்கம் செலுத்தும் லண்டன் தேயிலைச் சந்தையில் இலங்கையின் தேயிலை பகிஷ்கரிப்பதற்கான சூழ்நிலை உருவாகி வருகின்றது.

கடந்தவருடம் உற்பத்தியாகிய 4840 லட்சம் ருத்தல் தேயிலை முந்திய வருடத்தைக்காட்டிலும்120லட்சம் ருத்தல் குறைவானதாகும். ஏற்றுமதியும் வாறேயுள்ளது. கடந்தவருடம் ஏற்றுமதியாகிய 4450 லட்சம் ருத்தல் தேயிலை முந்திய வருடத்திலும் பார்க்க 150 லட்சம்ருத்தலால்குறைந்துள்ளது. உற்பத்தியைப் பொறுத்தும் ஏக்கருக்கு 3 ருத்தல் வீதம் குறைந்துள்ளது. ஆகவே தேயிலை வர்த்தகத்தைப் பொறுத்து வெளிநாட்டு நிலைமை மட்டுமல்ல, உள்நாட்டு உற்பத்தி முறைகளையும் ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். முதலில் வெளிநாட்டுச் சந்தையுடனுன பிரச்சனைகள், நிலைமைகள்ஆகியவற்றை ஆராய்வோம்.

### வெளிநாட்டுச் சந்தை

முப்பதிற்கும் மேற்பட்ட நாடுகளில் தேயிலை விளைவிக்கப்பட்டபோதிலும்இந்தியா இலங்கை ஆகிய இருநாடுகளுமே முக்கிய இடம் வகிப்பன. தேயிலையானது அந்நியரால் தமது தேவைக்காகத் தமது குடியேற்ற நாடுகளில் புதியதாக பயிரிடப்பட்டதனுல் அந்நிய சந்தையையே நாம் நோக்க வேண்டியுள்ளது. இலங்கையின் தேயிலையை வாங்கும்நாடுகளில் இங்கிலாந்தே பிரதானமானது. பெருந் [...] வாங்கி பைகளில் அடைத்து திரும்பவும் ஏற்றுமதி செய்கின்றது.

1969-ல் இலங்கைத் தேயிலையை இறக்குமதி செய்த நாடுகள்:

| | |
|---|---|
| பெரியபிரித்தானியா | - 131·3 |
| அமெரிக்கா | - 45·4 |
| அவுஸ்திரேலியா | -34·0 |
| ஈராக் | - 33·2 |
| தென்ஆபிரிக்கா | - 27 3 |
| ஏனைய நாடுகள் | - 174·0 |
| மொத்தம் | - 445·2 |

(மில்லியன் ருத்தல்)

கடந்த வருடத்தில் இங்கிலாந்து இறக்குமதிசெய்த இலங்கைத்தேயிலை ஏறக்குறைய 6% வீழ்ச்சியைக் காட்டினுலும் உள்நாட்டு நுகர்வில் மாற்றம் ஏற்படவில்லை. பிரித்தானிய மக்களே தேயிலையை அதிகம் விரும்பி நுகர்கின்றுர்கள். பின்வரும் புள்ளி விபரங்கள் தலைக்குரிய நுகர்வை எடுத்துக் காட்டுகின்றன.

| | |
|---|---|
| பெரியபிரித்தானியா | - 9·6 ருத் |
| அவுஸ்திரேலியா | -6 ,, |
| நியூசிலந்து | -6 ,, |
| ஜப்பான் | -1·6 ,, |
| இலங்கை | -1·4 ,, |
| நெதர்லந்து | -1·6 ,, |
| இந்தியா | - ·6 ,, |
| பாகிஸ்தான் | - ·4 ,, |

### என். எம். பெரேரா ஏற்படுத்திய ஏலச்சந்தை

கலாநிதி பெரேரா சென்ற முறை நிதி அமைச்சராக இருந்தபோதுதேயிலைவர்த்தகத்தில் இருந்துவரும் சிலகம்பனிகளின் தனி உரிமையை உடைக்கக் கொழும்பில் ஏலவிற்பனையை ஏற்படுத்தினுர். அதே காலப்பகுதியில் இந்தியாவும் தனது தேயிலையை கல்கற்றுவில் ஏலத்திற்குவிட்டது. இவற்றிற்கு அந்நிய ஸ்ரேலிங் கம்பனிகள் பெரும் முட்டுக்கட்டையாக இருந்தன. இலங்கையின் தேயிலைச்சந்தையைப் பொறுத்து ஐரோப்பிய சந்தை, மத்திய கிழக்குச் சந்தை என மேலெழுந்தவாரியாகப் பிரித்துக் கூறலாம்.

ஐரோப்பிய சந்தையைப் பொறுத்து உயர்தரத் தேயிலை முக்கிய இடம்பெறுகின்றது. மத்திய கிழக்குச் சந்தையில் மத்திமமான குறித்த சில (Flowery tea. Strong tea) தேயிலைவகைகள் இடம் பெறுகின்றன.

இலங்கையில் விளையும் உயர்பிரதேசத்தேயிலை லண்டன் சந்தைக்கு அனுப்பப்படுகின்றது. இலங்கையில் விளையும் தேயிலையில் 38 7 வீத உயர்பிரதேசத் தேயிலையும் 35·3 வீத மத்திய

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரத நாட்டின் தேசியப் போராட்டமே பாஞ்சாலி சபதத்தின் உட்பொருள்

க. கணேசு பி. ஏ.

பாரதியாரால் பாடப்பட்ட பாஞ்சாலி சபதம் என்னும் காப்பியம் அரசியல் சூழ்நிலையைக் காட்டுவதாக அமைந்திருப்பதனைக் காணலாம். பாழ்பட்டு நின்ற பாரத நாட்டை வாழ்விக்க முற்பட்டவரே பாரதி பாரதநாட்டின் அன்றைய காலத்திய நிலையும் நோக்கும் அவர்தம் பாடல்களில் அமைந்திருப்பதில் வியப்பொன்றுமில்லை.

செல்வப்பெருக்குடன் சிறப்புற்றுச் சிறந்த ஆட்சியையும் பெற்று மக்கள் வளமாக வாழவதனையும் வர்த்தக நோக்குடன் வந்த ஆங்கிலேயர்கள் கண்டனர். செல்வத்தைக் கவர்வதுடன் ஆட்சியைக் கைப்பற்றியும் சூழ்ச்சிகள் புரிந்தனர். சூழ்ச்சிகளில் வெற்றியும் அடைந்தனர், இதனைப் பாரதியார் துரியோதனன் பாண்டவரின் இமாசசூய யாகத்தினைப் பார்த்துச் சென்று இந்திரப் பிரஸ்தம் அடைந்தபின் சகுனிக்குச் சொல்வதில் புலப்படுத்துகின்றார்

'யாது நேரினும் எவ்வகையாயினும், யாது போயினும் பாண்டவர் வாழ்வைத் தீதுசெய்து மடித்திட எண்ணிச் சகுனியின் உதவியுடன் சூதாடத் திட்டம் வகுக்கின்றான்.

சூதாட்டத்துக்குத் தருமன் இணங்கிய சந்தர்ப்பம் வரை பாரதியார் பல இடங்களில் விதியை வற்புறுத்துகின்றார். காரணம்? அன்றைய கீழைத்தேய மக்கள் விதியிற் பெருநம்பிக்கை கொண்டிருந்தமையே. அதனாலேயே, அவர்கள் பெருமளவில் வீழச்சியடையக் காரணமாக இருந்தது விதியைப் பாரதி கூறும் இடங்களிலெல்லாம் பலவீனங்களைச் சுட்டிக்காட்டி வீழ்ச்சிக்கு அவையே காரணம் என்பதை வலியுறுத்துகின்றார்.

கேள்விக்கொரு மிதிலாதிபனை ஒத்த திரிதராட்டிரன் சகுனிக்கும் மகன் துரியோதனனுக்கும் அடுக்கடுக்காக எத்தனையோ புத்திமதிகளைச் சொல்கின்றான். கடைசியில் துரியோதனன் 'நானிங்காவி இறுத்திடுவேன்' என்று கூறியதும் திரிதராட்டிரன் புத்திரபாசத்தினால் நெஞ்சுடைகின்றான். விதி எனப் பாரதியார் இந்த இடத்தில் காட்டியபொழுதிலும், இவனுடைய பலவீனம்தான் அழிவுக்குக் காரணம் என்பதைக் காட்டத் தவறவில்லை. அதேபோன்று தருமன் வீழ்ச்சியடைந்தமைக்குக் காரணம் அவனின் உள்ளக் கலக்கமும் மூடநம்பிக்கையும் என்பதைப் பலப்படுத்தத் தவறவில்லை.

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பெலவீனமுண்டு. அதுவே வீழ்ச்சிக்கு அடிப்படையென்கிறான் பாரதி. வெள்ளையர்கள் இந்தியர்களிடமுள்ள பலவீனங்களைப் பயன்படுத்தி வெற்றிகண்டனர் என்பதை ஆக்கிரோசத்துடன் வெளிப்படுத்துகிறார். அமைச்சர் பதவிக்கும் அரசாங்க உத்தியோகத்திற்கும் எத்தனையோபேர் தம் இனத்தையும் உரிமையையும் விற்றிருப்பதையும் வரலாறு நமக்குப் புகட்டுகின்றதல்லவா?

சூதாடும் சமயத்தில் தருமன் நாட்டை வைத்து ஆடுகிறான். அந்த நேரத்தில் பாரதியார் உணர்ச்சிவசப்பட்டுக் கூறுகின்றார், முதலில் ஆங்கிலேயர் கைப்பற்றிய முறையினைக் கூறியவர். இப்பொழுது அவர்கள் ஆட்சியினைக் கூறுகின்றார்.

'நாட்டுமாந்தரெல்லாம் -
தம்போல்
நரர்கள் என்று கருதார்;
ஆட்டு மந்தையாமென் -
றுலகை
அரச ரெண்ணி
விட்டார்'

என்று கூறுகின்றார்.

அக்காலத்தில் போர்வீரர்கள்தான் இந்தியாவில்ஆட்சி நடத்திவந்தனர். இந்திய மக்களின் உணர்ச்சியை அறிந்து அதற்கேற்ப ஆட்சிநடத்தாது தமது இலாபத்துக்கு என்னென்ன செய்யமுடியுமோ அவைகளையெல்லாம் செய்துவந்தனர். கேசன் போன்றவர்களின் ஆட்சிவரலாற்றினைப் படித்துப் பார்த்தால் இந்திய மக்களை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தினர் என்பது நன்கு வெளிப்படும். இந்த அக்கிரமங்களையெல்லாம் கண்மூடி மௌனியாகப் பலர் பார்த்திருந்தனர். ஒருசிலர் அதனை எதிர்த்தனர். விதுரனும் விகர்ணனும் சபையில் எதிர்த்து எத்தனையோ வாதங்களைச் செய்கின்றனர். இவர்கள் எல்லாம் அதிகாரவர்க்கத்திலுள்ள துரியோதனன் கர்ணன் என்போரில் அடக்கப்படுகின்றனர். இதேபோன்றுதான் அன்னிய ஆட்சியின் அக்கிரமங்களைப் பொறுக்க முடியாது சிலர் எதிர்த்தனர். 1858-ம் ஆண்டு நடந்த சிப்பாய்க்கலகம் போன்றவற்றினை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

பாஞ்சாலி சூதிற் தோற்கடிக்கப்பட்டாள், துச்சாதனன் அவள் கூந்தலைப்பற்றி இழுத்துக் கொண்டு வருகின்றான். இக்கட்டத்தில் வீதிவழியே மக்கள் நின்று அக்கிரமம்என்று சொல்கிறார்கள். ஆனால் எதிர்ப்பார் எவருமில்லை, அதனைப் பார்த்தபாரதி,

'வீரமில்லா நாய்கள்
விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத்
தராதலத்திற் போக்கியே
பொன்னையவள் அந்தப்
புரந்தனிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென
நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல்
பிறர்க்குத் துணையாமோ?'

என்று கூறுகின்றார். இதனை ஆட்சியிலுள்ளசிலரேஎதிர்த்தார்கள். மக்கள் எதிர்க்கவில்லை. மக்கள் இயக்கமாகச் சுதந்திர இயக்கம் மாறவில்லை என்றதை இந்நிகழ்ச்சிமூலம் மக்களுக்கு உணர்ச்சியூட்டவே அதனை ஆழமாகப் பாடியுள்ளார்.

பாஞ்சாலி சபையில் நிறுத்தப்பட்டதும் அவள் நீதி கேட்கின்றாள். கணவர்கள் கண்மூடி மௌனியாக இருக்கின்றனர். துச்சாதனன் துகில் உரிகின்றான்; இந்நிலையைப் பாரதியார் தெளிவாகக் காட்டுகின்றார்.

பாஞ்சாலியின் துகிலை துச்சாதனன் உரிவதை விளக்குவதினால் பாரதமாதா உலக அரங்கில் அவமானமடைந்திருக்கின்றாள் என்பதையே தெளிவுபடுத்தினார்.

இறுதியில் வீமன் அருச்சுனன் பாஞ்சாலி என்போர் கூறும் சபதங்கள் சுதந்திர இயக்கத்தின் உச்சத்தையும் வெற்றியையும் குறிப்பதாக அமைந்துள்ளது. உண்மையில் உற்றுணர்ந்த கற்போர் பாஞ்சாலி சபதம் என்ற காவியம் அன்றைய இந்தியாவில் அன்னியர் கைப்பற்றிய தொடக்கம் சுதந்திரத்துக்காக மக்கள் போராடியதையே மறைமுகமாக நமக்குப் புலப்படுத்துகிறதைமறுக்க முடியாது.

# சுவாசக் குழாய்த் தாபிதம் எப்படி உண்டாகிறது?




வைத்திய கலாநிதி
க. மருது
(டி. ஐ. எம் எஸ், விசேஷம்)

மேசையிலிருந்த அழைப்புமணியை டாக்டர் அழுத்தினார். 'கொல்கொல்' என்று வெண்கலஓசையுடன் கூடிய இருமலைப் பலமுறை உதிர்த்துக்கொண்டு இக்பால் ஆலோசனை அறைக்குள் நுழைந்தான்.' தொண்டையை அரித்து அரித்து ஒரே இருமலாய் இருக்கிறது'' இதுதான் இக்பாலின் முறைப்பாடு. இந்த முறைப்பாட்டைக் கூறிக்கொண்டிருக்கும் போதே இக்பாலின் சோக இளைப்பையும், இருமலின் தன்மையையும் டாக்டர் அவதானிக்கத்தவறவில்லை. டாக்டர் கேள்விக்கணைகளை அடுத்தடுத்துத் தொடுத்தார். எவ்வளவு நாளாக இருமல் இருக்கிறது? இருமல் ஏற்படுமுன் தொண்டைநோவு, சாடையான உடற்சூடு, கண்எரிவு, காதுமூக்குத்துவாரங்களால் அனல்காற்றுவெளியேறுவது போன்ற உணர்வுஆகியவை ஏற்பட்டதா? என்ற கேள்விகளுக்கு நோயாளி ''ஆம்'' என்ற பதிலையளித்தது டாக்டருக்குத் திருப்தியாகஇருந்தது. ஏனெனில் இருமல் நோய் வேறு அடிப்படை ரோகங்களால் ஏற்பட இடமுண்டு. நோயாளியின் பதிலோடு டாக்டர் திருப்தியடைந்தாலும் தனது 'ஸ்தெதஸ்கோப்'பின் உதவியை நாடாமலிருக்கமுடியவில்லை. நோயாளியின் இருதயம் நல்ல நிலையிலிருந்தது. ஆனால் சுவாசப்பையில் மட்டும் சிலஒழுங்கீனங்கள்இருந்தன. அவை மேலும் டாக்டரின் நிதானத்துக்குப் பெரிதும் உதவியாயிருந்தது. அப்படியவர் அறிந்ததை யாருக்குத்தான் கூறமுடியும். ஆனால் அவர் தனது குறிப்புக்காகிதத்தில்கீழ்வருமாறு குறித்தார்.

சுவாசப்பை: வலதுஇடது பக்கங்களில் கூவல் சப்தம் கேட்கின்றது, வெளிச்சுவாசம் சற்று நீண்டதாக இருக்கின்றது. இத்தனையும் குறித்துக் கொண்ட டாக்டர் இக்பாலைப்பார்த்து ஒருபுன்முறுவலுடன் நல்லவேளையாகக் கிருமிகள் சுவாசப்பையின் அடிப்பாகத்தைத் தாக்குவதற்கு முன்பே இங்கு சிகிச்சைக்கு வந்த உம்மைப் பாராட்டாமலிருக்கமுடியாது. இந்நோயை மேலும் சில நாட்களுக்குப்பாராமுகமாயிருந்திருப்பீரானால் சுவாசசன்னி ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகிறது என்று ஒரு சிறிய எச்சரிக்கையையும் டாக்டர் ஊடேகூறிவைத்தார். கிருமிகளின் சுவாசப்பையின் அடிப்பாகத்தை அடைந்தால் கூவல்சத்தம் அதி உக்கிரமாகக் கேட்கும். அத்தோடு சளி கட்டிய நிலையேற்பட்டு ஒரு கரகரத்த சத்தமும் கேட்கும். இந்த இரண்டும் இக்பாலுக்கு இருக்கவில்லை என்பதே டாக்டரின் முடிவு போலும். இத்துடன் டாக்டர் திருப்திப்பட்டு விடவில்லை. மேலும் இக்பாலின் முதுகைத் தட்டிப்பார்த்தார். எவ்வித ஒழுங்கீனமும் இல்லை என்ற முடிவுக்கு வந்த டாக்டர் மேலும் தனது இலக்கைச் சரிவர அடைவதற்கு நோயாளியைத் துளைத்துக் கேட்டார். 'ஏது கைவிரல் மஞ்சளாயிருக்கே? ஏதும் காயத்துக்கு மருந்து போட்டீர்களா?' 'இல்லை, நான் சிகரட் பாவிப்பதால் அதன் கறள் அப்படி விரல்களில் பதிந்துவிட்டது.' 'பூசினிக்காய் கள்ளனைத் தோளில் தெரியும்' என்ற பழமொழியைக்கூறி நோயாளியையும் பரவசப்படுத்தினார் டாக்டர். என்ன தொழில் பார்க்கிறீர்' என்று கேட்டதற்கு றெயில்வேயில் என்றான் இக்பால். டாக்டர் அனுயாசமாகத் தலையசைத்துத் தனதுஇலக்கை நோக்கி முன்னேறினார். றெயில்வே என்றதும் தலையசைத்ததின் அர்த்தம் அவர் ஊகித்த நோய்க்குத் தூசிகள், புகை ஆகியவை சாதாரணமாக இருந்தபடியால்தான் என்பது நோயாளிக்குப் புரியாது. மழையில் நனைந்தீரா? அல்லது குளிர்படக் கூடியதாக அண்மையில் நடந்து கொண்டீரா? என்று டாக்டர் தொடர்ந்தார்.

'அன்று இரண்டாம் படம் பார்த்துவிட்டு வரும்போது நல்லபனி பெய்துகொண்டிருந்தது,'

'நீரும் நல்ல குளிரென்று ஆறு ஏழு சிகரட்டையும் ஊதித்தள்ளினீராக்கும்'

'இந்தநோய் ஆரம்பிக்கு முன் தொண்டை அரிப்பும் இருமலும் இருந்ததாகக் கூறினீர். பிறகு படிப்படியாக உமக்கு ஏற்பட்ட அசௌகரியங்களையும் கூற முடியுமா?' என்று டாக்டர் வினவினார். நெஞ்சரிப்பும் நெஞ்சுநோவும் ஏற்பட்டு அடிக்கடி இருமும், ஆனால் சளி வருவது சொற்பம். நெஞ்சை இறுக்குவது போன்ற உணர்ச்சி, சில தினத்தின்பின் சளியோடு சிறிது இரத்தமும்கலந்துவந்தது, சளியும்தொடர்ந்துமஞ்சள் நிறத்துடன் அதாவது பழுத்த சளியென்பார்களே அதுவும் வரத்தொடங்கியது. காய்ச்சலும் சிறிது காணப்பட்டது. ஆயினும் நான் பொருட்படுத்தவில்லை மூச்சுக்கஷ்டம் இப்பொழுதும் இருக்கிறது' என்று கூறிமுடித்தான் இளைஞன் இக்பால். இவ்வளவையும் மூச்சுவிடாமல் கூறிய இக்பால் 'என்ன டாக்டர் இது கசமாயிருக்குமோ' என்று நான் ஐயப்படும்போது எனது நண்பன் வேறு ஏதாவது நோயாக அதாவது சுவாசப்பையில் இருக்கலாம் என்று பயங்காட்டுகிறான் என்றான்.

'அதெல்லாம் ஒன்றுமில்லை ஊரார் சொல்வதையெல்லாம் கேட்டால் உனக்கு உலகத்திலுள்ள நோயெல்லாம் இருப்பதுபோலவேயிருக்கும். அந்தக் கதைகளுக்குக் காது கொடுத்துக் குட்டிச்சுவராகிய பேர்வழிகள் ஏராளம்' என்று பெருமூச்சுவிட்டார் டாக்டர்.

'இக்பால், உனக்கு ஒருவிதமான பாரதூரமான நோயும் கிடையாது. கிருமிகளின் தாக்கத்தாலும் உமது வேலைநிலைமை காரணமாயும் 'செக்கன்ட்ஷோ' காரணத்தாலும் தாபிதப்பட்ட காற்றுக்குழாய் வீக்கங்கொண்டு

(15ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!

கடந்த 25 வருடங்களுக்குமேல் உங்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு, உங்கள் நகைகள் வைரத் தேவைகளை நம்பிக்கையாக செய்து, உங்களின் அன்பையும், அபிமானத்தையும் பெற்றவர்கள், புதியதோர் ஸ்தாபனத்தை நிறுவி உங்களுக்கு தொடர்ந்து சேவை செய்ய முன்வந்திருக்கிறார்கள்.

ஆரம்ப நன்னாளை எதிர்பாருங்கள்!

எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்

நகைகள்—வைர வியாபாரிகள்.

கன்னாதிட்டி, (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பூஜாக்கிரகம்

பொழுது போகாவிட்டால் கணேசுவிடம் போங்கள் என்று நமது கிராமத்தவர்கள்சொல்வார்கள். எனக்குக்கூட ஒருநாள் இந்தப் பொழுதுபோக மறுக்கவே கணேசுவிடம் போனேன்.

கதையோடு கதையாக இதேது ஒரு சுவாமியறை உள்ளே ஒரு பெண்ணின் படம் என்று கேட்டுவைததேன்.

கணேசு தொடங்கி விட்டார்.

உலகம் உருண்டு கொண்டு தான் இருக்கிறது. இரவும் பகலும் ஒன்றையொன்று துரத்திக்கொண்டிருக்கின்றது.

பொழுது விடிகிறது. ஆனால் எத்தனையெத்தனை குடும்பங்கள் விடிவை நோக்கிக் கொண்டிருக்கின்றன என்பது அந்தச் சூரியனுக்கே வெளிச்சமோ என்னவோ.

எதிர்காலமாவது இனிமை படர்ந்ததாக அமைந்து விடாமலா போகப்போகிறதென்ற நப்பாசையே ஏணியாக நம்பி வாழ்ந்த குடும்பம் ஒன்று நமது கிராமத்தில் இருந்தது.

பெரியோர் வாழ்த்தியது போல் பெற்றுப் பெருகி வாழாவிட்டாலும் ஆசை தீரக் கொஞ்சிமகிழ ஆணுஞ்சொன்று அவர்கள் வறுமையிற் பங்கு கொள்ள வந்து பிறந்தது.

பிச்சைக்காரக் குடும்பம் என்று புறத்தவர் பேசிக் கொண்டாலும் அரைக் காசுக்கும் யாரிடமாவது கைநீட்டியறியாத மானமுள்ள குடும்பம் அது.

ஒருகாலத்திற் கொடிகட்டிப் பறந்த குடும்பத்தில் வந்தவர்தான் கதிர்காமு குடும்பமே சீரழிந்து தொல்லை மற் தொல்லை வந்தபிறகு உறவுமுறை சொல்லக்கூட நாதியற்ற கதிர்கமு கொஞ்சம் மனத்தைரியமிருந்தபடியால் துறவறத்தை நாடாமல் அயலூரை நாடினார்.

'கதை கொஞ்சம் குளறுபடியாசக் கிடக்கிறதென்றேன்' நான்.

'இடையிலே பேசக் கூடாது' கணேசுவின் கண்டிப்பு.

'சரி சொல்லுங்கள் என்றேன்.

கதிர்காமு, சிங்கப்பூர்ச் செல்லப்பாவீட்டுக்குப்போக நேர்ந்தது அவரது அதிர்ஷ்டமென்று சொல்ல வேண்டும். செல்லப்பாவின் நிலபுலன்களை மேற்பார்வை செய்து வயிற்றை நிரப்பிக் கொண்டதல்லாமல் ஊதியமென்று ஒன்றை அவர் கொடுக்கவுமில்லை. இவர் கேட்கவுமில்லை.

சில ஆண்டுகள் உருண்டோடியபின் கதிர்காமு அவரைவிட்டு விலகவேண்டி வந்தது. வெறுங்கையோடல்ல; புண்ணியவான் கொடுத்த ஒரு ஏக்கர் நிலத்தோடும் ஆயிரம் ரூபா பணத்தோடும்தான்.

சொந்த நிலத்தில் வேலை செய்கிறோமென்ற திருப்தியேயல்லாமல் சுகம் காணவில்லை இந்நிலையில் காமாட்சியம்மா என்ற கன்னிப் பெண் கதிர்காமுவின் வாழ்விற் குறுக்கிட்டாள்

இனம் இனத்தைச்சாரும். அனாதை அனாதையைச் சார்ந்தாள். காமாட்சிக்குக் கூடப்பெற்ற தாய்க்கிழவியைத் தவிர யாரும் இலர், கையிலும் ஏதும் கிடையாது. ஒருத்தன் கையில் ஒப்படைக்கக் காத்திருந்த உயிர்போல கிழவியும் சில நாளில் வந்த இடத்துக்கு வழி கொண்டாள்

நெருங்கிப் பழகக் கிடைத்தசந்தர்ப்பம்சம்பந்தத்தில் முடிந்ததே என்று எண்ணிய கதிர்காமுவும் காமாட்சியும் குடும்பவாழ்வின் இரண்டரை வருடமுடிவில் ஐந்தொகை பார்த்த போது தான் மிஞ்சியது ஐந்நூறு ரூபாக்கடனும் ஆண் குஞ்சொன்றும் என்று கண்டு கொண்டார்கள்.

கமவேலை கைநட்டக்கணக்கைக் காட்டவே காமாட்சியம்மா பலகாரம் தேடிவிற்பதால் ஈடுகொடுக்க முடியும் என நம்பினாள்; துணிந்து செயலிலும் இறங்கினாள்.

மின்னலும் மழையும் முன்னேறிக்கொண்டு வந்ததால் வேலையைத் தொடர முடியாத கதிர்காமு வயலைவிட்டுப் பனங்காணிக்குள் தஞ்சம் புகுந்தார்.

தஞ்சம் புகுந்தவரைத் தாக்குவது மனித குலத்துக்கு மட்டும் தனி முத்திரையல்ல என்பதை நிலைநிறுத்த எண்ணிய பனை, தன் மேல் விழுந்த இடியைக்கதிர்காமுவுக்கும் பகிர்ந்தளித்தது. இடி கதிர்காமுவின் தலையில் மட்டுமா விழுந்தது அவரது குடும்பத்திலும் தான்;

சவ அடக்கம் நாலுபேர் நையாண்டி பண்ணும் முறையில் நடந்ததென்றால் அதிலென்ன அதிசயம் என்பீர்களாக்கும், போகட்டும் ஒப்புக்குச் சொல்லி வைத்தேன் அப்பால்........

அப்பாலென்ன? வேதனையான கதையோட்டத்தினிடையே ஒரு நகைச்சுவையையும் அனுபவிக்கவேண்டியிருக்கிறது. கதையின் ரசத்தைக் கெடுத்தாலும் கெடுக்கட்டும்.

சாஸ்திரி ஒருவர் 'இன்னும் மூன்று வருடம் மிகக் கஷ்டகாலம். மெத்த வருத்தப் போகிறது' என்றார்.

ஜாதகன் 'சரி, சரி அதற்கப்புறம்' என்றான். சாஸ்திரி அமைதியாக, 'அது பழக்கப்பட்டு விடும்' என்றாரும்.

இந்த மாதிரித்தான் காமாட்சி குடும்பநிலை! கதிர்காமு மாண்டதால் அவர்கள் வாழ்வு இருண்டுவிடும்என்று நாம் சொன்னால் அவர்கள் அதற்குமுன் என்ன வெளிச்சத்திலா வாழ்ந்தார்கள் என்ற கேள்விமலரும் ஏதோ பிரிவுத் துன்பம் கூடுதலாகச் சேர்ந்து கொண்டது என்று மட்டும் சொல்லிக் கொள்ளலாம்.

இருட்டு கும்மிருட்டானது. தற்கொலை செய்யாவிட்டாலும் வேதனையின் துக்கத்தாலும் தாக்கத்தாலும் இரத்தாசயம் வெடித்துச் செத்திருக்க வேண்டியவள் சாகாமல் வாழ்வது தன் வயிற்றிற் பிறந்த குஞ்சுக்காகவோ!

சட்டிசுட்டது. தோசை அப்பம் விலைபோனது. தன்னை ஒறுத்தாள். தான் பெற்ற மூளை நல்லமூளையாகவளரட்டும், வாழட்டும் என்று தியாகம் செய்தாள்.

வாழ்வில் மின்றற்கீற்று போன்ற ஓர் ஒளியைக் கண்டாள்.

ஆலையிலே பஞ்சுபடாப்பாடு என்பார்கள், அது எனக்குத்தெரியாது. ஆனாற் காமாட்சியம்மா பட்டபாடு எனக்குத்தெரியும். அதுதுன்பச்சுரங்கம். சோகத்தின் பாசறை.

ஒன்றா இரண்டா? இருபது ஆண்டுகள் வேதனையின் சாயலிலே, வேறொருவரின் துணையை ஏற்காது, வஞ்சகர்களின் வசவுநாக்குகளின் வீண்அபவாத வாக்குகளுக்குத் தாக்குக்கொடுத்து வைரம் பாய்ந்துவிட்ட மனம்தந்த உறுதியுடன் கைலாசத்தை- தான்பெற்ற தவக்கொழுந்தை -வளர்க்கலானாள்.

வாயை வயிற்றைக்கட்டி, வளர்த்த குழந்தை கைலாசம் இன்று 'கிளார்க்' உத்தியோகம் பார்க்கமட்டக்களப்புக்குப் புறப்படப்போகிறான். தம்பி பரதனை நீ காடுபோ என்று சொன்ன வார்த்தையைக் கேட்ட இராமனின்முகம் 'அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா' என்று கம்பர் சொன்னாரே அந்தப்பொலிவு இன்று காமாட்சி அம்மாவிடம் காணும் பொலிவுக்கு உறைபோடக் காணுமோ ''இருக்காது'' என்றால் 'கம்பரஸிகர்கள்' சும்மா இருக்கார்களே. அதனால் அப்படியேவிடுவோம்.

அப்போதப்போது. பழஞ்சேலைத்தலைப்புகளில்முடிந்து வைத்த சில்லறைகள் இன்று அவிழ்க்கப்பட்டு, பயணம் போகும் புத்திரபாக்கியத்துக்கான பொருட்களாக மாற்றப்படுகின்றன.

அளவுகடந்த மகிழ்ச்சியினால் நினைவு தட்டுக்கெட்டு, கடைக்குப் பத்துத்தரம் சாமான்வாங்க ஓடினாள். பிள்ளைக்குச் சொன்ன புத்திமதிகள் ஒரு கோடி. 'உடம்பு பத்திரம். கதவைப்பூட்டி நித்திரைக்குப்போ சம்பளம் மிஞ்சினாற் தபாற்கந்தோரில்போடு' இப்படிஆயிரம்..

போனாலும் போனான். பிறகு ஊர்ப்பக்கமே திரும்பிப் பார்க்கவில்லை ஆரம்பத்தில் லீவு எடுத்தால் அதிகாரிகள் சினப்பார்களே என்று எண்ணிய தாய் ஐந்துவருடமாயும், பணம் மட்டும் அனுப்பிவிட்டு ஊருக்கே திரும்பாதிருப்பதால் சஞ்சலப்பட்டாள்.

அவளுக்குப்பணமா வேண்டும்? மகனின் பரிவுதானே அவள் எதிர்பார்த்தது? மகன் அனுப்பியபணம் ஒன்றாகச் சேர்ந்தது. தனக்கு 'சட்டி' தந்த செல்வம் போதுமென்றிருந்தாள். நம்பிக்கை தகர்ந்து போகவே ஊருக்கு வந்து போகும்படி கடிதம் போட்டாள். பதில்தான் வந்தபாடில்லை.

ஒருநாள், உத்தியோக உயர்வுக்காகப்படிக்க இருப்பதால் ஊர் வருவது முடியாது என்று இரத்தினச் சுருக்கமாக மகன் எழுதிய அந்த இரண்டு வரிகளையும் இருபதுமுறை படித்திருப்பாள் இந்த நேரத்தில் ஏரூரில் கடைவைத்திருக்கும் பெரியவர் ஒருவர் 'தம்பி' இனி யாழ்ப்பாணம்வரமாட்டான் அங்கே......என்று இழுத்தார்.

'சொல்லுங்கோ பெரியவர்' என்றுகாமாட்சியம்மா மன்றாடவே, பெரிய இடத்துப் பெண் ஒருத்தியைக்கல்யாணம் செய்யப் போகிறானோ, செய்து விட்டானோ தெரியவில்லை. அநேகமாக அந்த வீட்டிலேயே தங்கி இருக்கிறான்' என்றுசொல்லி வைத்தார்.

'சரி சரி கல்யாணம் செய்தாற்கூடக் காரியமில்லை. கௌரவமான இடமாயிருந்து கண்ணிறைந்தவாழ்வு வாழ்ந்தால் அதுவே போதும். இங்கே மட்டும் நமக்கென்ன சொந்தபந்தமா கொட்டிக்கிடக்கு. எதுக்கும் என்னையும் கூப்பிட்டு இதைச் செய்திருக்கலாமே' என்ற ஒரு சிறு தாங்கல் அடிமனதை உறுத்த, முணுமுணுத்தாள்.

தாயென்றால் பிள்ளையின் தவறை மறப்பவள்தானே' என்றேன் நான்.

'அதுசரி கதையைக்கேள்' என்றான் கணேசு.

பதரும் நெல்லும் கலந்து கிடக்கின்றன. பாவமும் புண்ணியமும் சேர்ந்து வளர்கின்றன. மற்ற உயிர்களை இம்சிக்காதே என்ற மகாத்துமாவின் உயிரையே பறித்த விநாயகநாதுராம் கோட்சேயையும் அங்கே தானே கண்டோம்.

நமது கைலாசம், மற்றவர்கள் காறியுமிழும் அளவுக்கு மாறிவிட்டான். மேற்கத்திய நாகரீக வாரிசான ஷீலாவுக்கு தன்னை மாற்றினான் தன்னுடைய அந்தஸ்துக்கு மேற்பட்ட இடம் தன்னை ஏற்க முன்வந்த போது, தாயைக்கூட இறந்து விட்டாள் என்று பொய் சொல்லவேண்டியது அவனுக்குச் சரியாகப்பட்டது.

எந்த இரத்தத்தில் உருவானானோ அவனை அதே இரத்தத்தைப் பிழிந்து உருவாகி, உயர்வாக்கிக் காணத்துடித்த தாய் இன்றைய நாகரிக வாழ்வுக்கு — அந்தச்சூழலுக்குத் தகுதியானவள் அல்ல, வேறுவிதமாகச்சொன்னால் தாயை தனது மனைவி சந்திக்க நேர்ந்தால் தன்னையே வெறுக்கக்கூடுமென எண்ணினான்.

(12-ம் பக்கம் பார்க்க)

– நா. பரமகுருநாதன் –

சின்னஞ் சிறு கதை

# நெஞ்சமிரண்டும் சங்கமம்

"நீலா"

மென்மையும் தண்மையும் நிறைந்த தளிர்கரங்கள் பின்னிருந்து என் கண்மலர்களை மெல்லத் தனக்குள் சிறைகொண்டன. நான் புத்தகத்தை மூடிவிட்டு பொத்திய கரங்களை மெல்ல விலக்கி, கரங்களுக்குடையவளை முன்னால் இழுத்தேன். கிண்கிணிச் சிரிப்பு மலர்க் கன்னத்தைத் தாமரையாக்க, அவள் நாணம் பொங்க, என் மடியில் வீழ்ந்தாள்.

'ராணி படிப்பை இப்படித்தான் குழப்புவதா?' நான் பொய்க் கோபமுடன் வினவுகிறேன்.

அவள் முகத்தைச் சுருக்கி, உதட்டை நெளித்து எனக்கு அழகு காட்டுகிறாள்.

'ஏ...கழுதை! நெளிக்கிறாயா?'

நான் செல்லமாகக் கோபித்தபடி தொலக் தொங்கிய அவள் காதைப்பற்றி முறுக்கியபோது, அவளின் சிவந்த காது மேலும் கன்றிச் சிவந்து விடுகின்றது. கயல்விழிகள் கலங்கி விடுகின்றன,

'உன்னோடு இனிமேல் பேசவே மாட்டேன்!'

ஆத்திரத்துடன் கூறிவிட்டு கால்சதங்கை ஓசையெழுப்ப அவள் ஓடியபோது, நான் அவளைப் பிடித்துவிடும் ஆவலுடன் [பின் தொடர்கிறேன்

இரண்டே எட்டில் அவளையடைந்து, அவள் முகம் பற்றி, பட்டுக் கன்னத்தில் இதழ் பதிக்கிறேன்.

'என்ன, பேசவே மாட்டாயா?'

நான் கேட்டு வாய் மூடுமுன்—

பட்டென்று தன் தளிர் விரல்களை என் கன்னத்தில் பதிக்கிறாள் ராணி.

நான் தடுமாறிவிட்ட கன்னத்தைத் தடவியவாறு ஒரு மூலையில் போய்உட்காருகிறேன்.

நூற்றிருபது விநாடிகள் மெல்லெனக் கழிகின்றன.

அவள் ஓசையெழாப் பதுமையாக நடந்து அருகே வருகிறாள். என்னருகே தரையில் அமர்ந்து என் முகத்தைத் திருட்டுத்தனமாக நோக்குகிறாள்.

'கோபமா...?'

'..........'... நான் மௌனம் சாதிக்கிறேன்.

அவள் தவறுணர்ந்தாற்போல் என்னைக் குற்ற உணர்வுடன் நோக்குகிறாள்.

'இனிமேல் அடிக்க மாட்டேன்!'

'........................'

என் மௌனம் அவள் மெல்லிய இதயத்தை நோகவைக்கிறது. அவள் மௌனமாகத் தள்ளி அமர்கிறாள்.

அடுத்து நடக்கப் போவது எனக்குப் புரிகிறது. ஆபத்தை முன் கூட்டியே உள்ளுணர்வு எச்சரிக்கிறது.

எனவே—

சட்டென எழுந்து அவளைப்பற்றி 'லபக்' கென்று தூக்கித் தலைக்குமேல் எறிந்து பிடிக்கிறேன்.

அவள் இமைகள் பட்டுப் பூச்சியாகச் சிறகடிக்கின்றன.

அழ ஆரம்பித்த அவள், அழுகையடங்கிய கணீர்க் குரலில் கலகலவென்று நகையெழுப்புகிறாள். அவள் இதழ்கள் என் அடித்த கன்னத்தில் பதிகின்றன.

'அம்மா, என் நல்ல அம்மா!

'ராணி, என் நல்ல ராணி!'

அவள் மறுபடியும் மணியாகக் குலுங்குகிறாள்.

நானும் நாலே வயதான அவள் சிரிப்புடன் சேர்ந்து குலுங்கிச் சிரிக்கிறேன்.

அச்சிரிப்பிலே இரண்டு நெஞ்சமும் சங்கமமாகின்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சங்கமத்துறை

— கங்காபுத்திரன் —

## குட்டைப் பென்சிலும் காந்திஜீயும்

மாந்தருக்குள் தெய்வமாக மிளிர்ந்தவர் மகாத்மா காந்தி; வாழ்க்கையில் எளிமையும் சிக்கனமும் அவர் கைக்கொண்ட இலட்சிய சின்னங்களுள் சிலவாகும்.

ஒருமுறை மகாத்மாஜியைக் காணுவதற்காக நண்பர் ஒருவர் வந்தார். அந்தவேளை காந்திஜி பரபரப்பாக எதையோ தேடிக்கொண்டிருந்தார். அப்போது நண்பர் காந்திஜீயைப் பார்த்து எதைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்? என்று விசாரித்தார். காந்திஜீ பென்சில் ஒன்றைத் தேடிக்கொண்டிருக்கிறேன் என்ருர். நண்பரும் தேடிஞர். அது இலகுவில் கிடைப்பதாகவில்லை. இப்படி வெகுநேரமாகத் தேடுகிறீர்களே கிடைக்கவில்லையானுல் விடுங்கள். உங்களுக்கு நல்ல பென்சில் ஒன்றை யான் வாங்கித் தருகிறேன் என்று நண்பர் கூறிஞர். காந்திஜி அதை ஏற்றுக்கொள்ள மறுத்து மீண்டும் மீண்டும் பென்சிலைத் தேடிக்கொண்டிருந்தார். காந்திஜியின் பிடிவாதத்தைப் புரிந்துகொண்ட அந்த நண்பரும் அவருடன் சேர்ந்து தேடலாஞர். முடிவில் காந்திஜி தான் தேடிக்கொண்டிருந்த பென்சிலைக் கண்டுபிடித்துவிட்டார். நண்பர் அந்தப் பென்சிலைப் பார்த்தார் அதன் நீளம் ஒரேஒரு அங்குலந்தான் நண்பர் வாயடைத்துவிட்டது. காந்திஜியின் பொக்கு வாயிலே அப்போதுதான் பூரணப்புன்னகை பூத்தது. காந்திஜீயின் உண்மையான இலட்சியங்களான சகிப்புத் தன்மை, சிககனம், எளிமை இவற்றிற்கு இந்த நிகழ்ச்சியும் ஒரு சான்றல்லவா!

## நம்மவரின் பண்டைக்கால வணிகம் :—

இன்றைய உலகில் பெருக்கமடைந்துள்ள தொழில்களுள் வணிகம் ஒன்ருகும். சாதாரண மனிதனின் அத்தியாவசியப் பொருட்கள் யாவும், வணிகர் மூலமே கிடைக்கின்றன. பண்டுதொட்டு வர்ணுச்சிரம முறைப்படி பகுக்கப்பட்டவர்களுள் வணிகத்தைச் செய்கின்ற வைசியர்கள் மூன்ருவது இடத்தைப் பெறுகின்றனர். நாட்டின் இலக்கணத்தை ... ...

'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு".

என்று வள்ளுவர் உழவருக்கு தாழ்விலாச் செல்வரும் என்று குறிப்பிடுகிருர் தாழ்விலாச் செல்வரே வணிகர். நாட்டின் முக்கியபிரிவினர்கள்அவர்களே. அவர்கள்திரைக்கடலில் கலஞ்செலுத்திதம்நாட்டுப்பொருளைப்பிறநாட்டினர்க்கு விற்றும். பிறநாட்டுப்பொருளை இறக்குமதி செய்தும் பண்டத் தட்டுப்பாடு வராமல் காக்கின்ற பெருந்தொண்டு புரிந்தனர். இது உலக உதவியாகவே அன்றும் இன்றும் இருகின்றது. ஆனல் அன்றைய வணிகர்கள் அறந்தவருப் பண்புடையவராகவிருந்தனர். நடுநிலை தவருத நேர்மையும் அவர்கள் உயிராக ஒளிர்ந்தது. பண்டைய வணிகனின் நிலையை

'நடுவுநின்ற நன்நெஞ்சினேர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும்பிறவும் ஒப்பநாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை'

என்றுபட்டினப்பாலை என்னும்நூல் பகர்கின்றது, அவர்கள் பொருளீட்டுதலைமட்டும் நோக்கமாகக் கொள்ளவில்லை. தமக்கும் பிறருக்கும்ஒப்ப பொருளைக் கொள்முதல் கொண்டனர்' கொள்விலையை அதிகம் கொடுக்கவில்லை. அதேவேளை கொடுப்பதையும் பொதுமக்கள் குறைகூறும்படி கொடுக்கவில்லை. இலட்சியம்வணிகத்திலிருந்தது. நாணயம் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டில் தமது சேவை தேவையென்கின்ற தொண்டுள்ளம்கொண்டு வாழ்ந்தனர்.

## "நீயே கதி!" என்ருல் இறைவன் தோன்றுவான்

பாண்டவர் சூதாட்டத்திஞல் தமது நாடு நகர் அனைத்தையும் இழந்தனர். தாமும் துரியனுக்கு அடிமைப்பட்டனர். இந்த நிலையில் திரோபதியை துச்சாதனன் இழுத்துவந்து அவையிலே அவளின் துயிலை உரியமுற்பட்டான். அறமாகிய கடல் உள்ளூரக்குமுறிக்கொண்டுவரம்பிகந்து போகாதவாறு மனக்குமுறலுடன் இருக்கின்றனர் பாண்டவர். பல மேதாவிகளும் தருமத்தை உணர்ந்தவரும் அந்த அக்கிரமத்தைத்தடுக்கும் சக்தி இழந்து அவையிலே கட்டுண்டு இருந்தனர். துச்சாதனன் துயிலை உரியத்தொடங்குகிருன். திரோபதி தனது இரு கைகளிலும் அதைத்தடுக்க முற்பட்டாள். கடவுளே என்று கதறி இரு கைகளிஞல் முதலில் தடுத்தவள ஒரு கையிஞல் தடுத்தாள். அதுவும் முடியவில்லை. கைகளில்பலமில்லை என்பதை உணர்ந்தாள். தன்மானத்தைக் காக்கவேண்டுமென்று இரு கைகளையும் தலையில் வைத்துக்கொண்டு ''மாதவா! கேசவா! கோபாலா'' என்று கதறத்தொடங்கியபோது இறைவன் அருளால் துயில் வளரத் தொடங்கியது.

இதிலிருந்து யாம் எதை அறிகின்ருேம். நமக்கு அப்பாற்பட்ட சக்தியாகிய இறைவனை நாம் எமது பிரயத்தனங்களை விடுத்து முற்றும் 'நீயே கதி' என்று நம்புகின்றபோதுதான் அவன் கடைக்கண் நோக்குவான் என்பதாகும்.

# 'ஏரினும் நன்ருல் எரு இடுதல்'

## செயற்கை உரங்களும் இயற்கை உரங்களும்




மனிதர்களும் மிருகங்களும் மற்றும் ஜீவராசிகளும் உயிர் வாழ்வதற்கும் வளருவதற்கும் உணவு எவ்வளவு அவசியமோ அதுபோலத் தாவரங்கள் வாழ்வதற்கும் வளர்வதற்கும் உணவு அல்லது பசளை அவசியமானது

இயற்கையாகவே செழிப்பான மண்ணில் இந்த உணவுகாணப்படுகிறது. அது இல்லாத பூமியில் அல்லது தொடர்ச்சியாகப் பயிர் செய்யப்படும் பூமியில் இந்த உணவை பசளை அல்லது உரத்தின்மூலம் செலுத்த வேண்டும்.

தாவரங்களின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானவை பிராணவாயு, ஜல வாயு. கார்பன் (கரி), நைட்ரஜன் (காலகம்), பொஸ்பரஸ். பொட்டாசியம், கால்சியம் என்ற தனிமங்களாகும். இவற்றைத் தனித்தனியே ஊட்டுவது முடியாத காரியமாதலால் அவை கலந்திருக்கும் இயற்கைப் பொருட்களையும் செயற்கைப் பொருட்களையும் உணவாக ஊட்ட வேண்டும்.

பசளை அல்லது உரம் இரண்டு வகைப்படும் இயற்கை உரமும் செயற்கை உரமும் தழைஉரம் (பச்சை இலை, குழை. முதலியன), தொழு உரம், மாடு, ஆடுகளின்எரு, கழிவுநீர் முதலியன), எலும் புத்தூள், பிண்ணுக்கு ஆகியவை இயற்கையான உரங்கள். தாவர வளர்ச்சிக்குத் தேவையான எல்லாப் பொருட்களும் இவ்வியற்கை உரங்களிலேயே இருக்கின்றன. நாம் அவற்றை கவனமாகவும் அளவோடும் உபயோகிப்பதில்லையாகையாலும், சில இடங்களில் எல்லாக் காலத்திலும் கிடைப்பதில்லையாகையாலும் செயற்கை உரங்களைச் சேர்க்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

எங்கள் நிலங்களின் வாசிக்கு அதிகமாகத் தேவைப்படும் செயற்கை உரங்களாவன. அமோனியம் சல்பேட், அமோனியம் பொஸ்பேட் அமோனியப் நைட்றேட், யூரியா, கல்சியம், சைனமைட், சுப்பர் பொஸ்பேட், கைப்பர் பொஸ்பேற் பொட்டாஸ் ஆகியவையாம்.

### தொழுஉரம்

நாம் வளர்க்கின்ற ஆடு, மாடு. எருமை முதலிய கால்நடைகளின் எருவும் சிறுநீரும் மிகச்சிறந்த பசளைகளாகும். எருவைத்தான் கமக்காரரில் பலர் அக்கறையுடன் சேர்க்கிருர்களேயன்றி சிறுநீரில் அதிக கவனம் செலுத்துவதில்லை. இதற்குப் பதிலாகத்தான் யூரியா என்னும் செயற்கை உரத்தை உபயோகிக்கிருர்கள். மாட்டுத் தொழுவங்களில் சீமேந்துத் தரை இருக்குமாஞல் சிறுநீரைப் பத்திரமாகச் சேகரிக்கலாம் சாதாரண தரையில் கால்நடைகள் விடும் புல், வைக்கோல் கூழத்துடன் சேர்த்து சிறுநீரையும் அள்ளலாம்.

பண்ணை எருவில் பொஸ்பரஸ் தவிர்ந்த ஏனைய தனிமப் பொருட்கள் யாவும் பெரும்பாலும் அடங்கியுள்ளன. ஆகையால் ஒரு தொன் பண்ணை எருவுடன் அரை அந்தர் சுப்பர் பொஸ்பேட் அல்லது ஹைப்பர் பொஸ்பேட் கலந்து விட்டால் அது மிகச் சிறந்த பசளையாகும்.

### தழை உரம்

எல்லாவிதமான பயிர் நிலங்களுக்கும் அவற்றின் வளப்பத்தையும் பண்புகளையும் பாதுகாப்பதற்கும் நீடித்து நிலைக்கச் செய்வதற்கும் நிலத்திலே கரிசல் அல்லது மட்கு இருக்கவேண்டியது இன்றியமையாதது. எந்தவிதமான பச்சைக் குழையையும் நிலத்தில் தாட்டு உழுதால் அதன் கரிசனப்பகுதி பெருகும். நிலத்தின் பண்பு கெடாது நெடுங்காலம் நீடிக்கும். பலவித காரணங்களிஞல் நம் நாட்டில் தழை உரத்தை நெல் வயல்களுக்கு பயன்படுத்துபவர்கள் மிகக்குறைவு. தழை உரம் பயிருக்கு வேண்டிய காலகத்தையும தாராளமாகக் கொடுக்கிறது. பல இடங்களில் தழை உரத்துக்கென்றே மரங்களையும் செடிகளையும் வளர்த்து பின் நிலத்தில் தாழ்க்கிருர்கள்

இந்தியாவிலும் பிறநாடுகளிலும் கடலைப் பிண்ணுக்கு, ஆமணக்கம் பிண்ணுக்கு, வேப்பம் பிண்ணுக்கு, புங்கம் பிண்ணுக்கு, எலும்புத்தூள், மீன் கருவாட்டுத்தூள் முதலியன சிறந்த பசளைகளாகக் கருதப்பட்டு உபயோகப்படுகின்றன.

### செயற்கை உரம்

ரசாயன முறையில் யந்திரங்களால் தயாரிக்கப்படுபவை செயற்கை உரங்கள். இவை விட்டமின் குளிகைகள்போல பயிர்வகைக

( 14 ம் பக்கம் பார்க்க )




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக விமர்சனம்:

# 45 நாடகங்களுக்குள் முதற் பரிசை தட்டிய............... மகனே, ...... கண்!

பிரமாண்டமான நாடகப்போட்டியொன்று வல்வை உதயசூரியன் உல்லாசத் திடலில் நடைபெற்றது.

உதயசூரியன் கழகத்தாரின் 8-வது ஆண்டுவிழாவின்போதே இந்நாடகப் போட்டி இடம்பெற்றது.

வடமாகாணத்திலுள்ள நாடகமன்றங்களுக்கிடையே நடைபெற்ற இந் நாடகப் போட்டியில் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடக மன்றங்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. அவற்றுள் போட்டிக்குரியனவாக 8 நாடகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆண்டு விழாவொன்று அரங்கேற்றம் செய்யப்பட்டன.

இந்நாடகப் போட்டியில் வல்வை கலாலயம் அளித்த ''மகனே......கண்'' முதலாவது இடத்தையும், வதிரி 'மதிஸ் புரடக்ஷன்ஸ்' அளித்த 'அன்றொருநாள்' தெல்லிப்பளை கலைப்பெருமன்றம் அளித்த 'மனச்சாட்சி'' ஆகிய சமூக நாடகங்கள் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டன.

இந்நாடகப் போட்டியில் முதற்பரிசைப் பெற்றுக் கொண்ட வல்வை கலாலயத்தினரின் 'மகனே...... கண்'' என்ற நாடகத்தை இங்கு விமர்சனத்துக்கு எடுத்துக்கொள்கின்றேன்.

45 நிமிட நேரத்திற்குள் ஒரு முழுவரலாற்றையே கண்டுகளிக்க முடிந்தது.

காசியப்பனாக வந்த யோகரத்தினம், மீகாரனாகத் தோன்றிய பா. குகன், முகலனாகமாறிய என். ரி. நாகேஸ்வரன், தாதுசேனனாகப் பாத்திரமேற்ற வ. ஆ. அதிரூபசிங்கம் ஆகியோருட்பட மற்றும் நாடகத்தில் தோன்றிய அனைவருமே மிக நன்றாக நடித்தார்கள்.

குமாரஹாமியாகத் தோன்றிய சிவாஜியின் நடிப்பும், வேஷப்பொருத்தமும் நன்றாக இருந்தது.

மகாநாமதேரோவாகத் தோன்றிய வ ஆ. தங்கவேலாயுதம் பாத்திரமாகவே மாறிவிட்டிருந்தார். நாம் நேரில் காணக்கூடிய ஒரு புத்த பிக்குவை இவர் ஞாபகப்படுத்தினார்.

அதிரூபனின் வசனங்களுக்கும் நாடகத்தின் வெற்றியில் பெரும் பங்குண்டு.

காலவீவாக் குளம், ஓவியங்கள் இடம்பெறும் சிகிரியா அரண்மனை என்பன ரசிகர்களின் ரசனைக்கும் பெருவிருந்தாக அமைந்தன. காலவீவாக் குளக்காட்சி இடம் பெற்றபோது பதிவு நாடாவின் உதவியோடு தண்ணீர் அலைகளின் ஓசை பின்னணியில் ஒலித்துக்கொண்டிருந்தமை, ஒரு குளக்கரையில் இருப்பது போன்றதோர் உணர்வை எமக்கு ஏற்படுத்தியது. இரட்டையர் குழுவினரின் பின்னணி இசை நன்றாக ஒலித்தது.

மொத்தத்தில் இந்நாட்டு வரலாற்றுச் சம்பவம் ஒன்றை நமக்குப் படம் பிடித்துக் காட்டிம் ''மகனே...... கண்'' பரிசுக்குரிய நாடகம்தான். இந் நாடகத்தைத் தயாரித்துத் தந்த வல்வை இளைஞர்களுக்கு ஒளிமயமான எதிர்காலமுண்டு.

இந்நாடகத்தை ஒரு முழு நாடகமாகத் தயாரித்து ஈழத்தின் பல பாகங்களிலும் அரங்கேற்றம் செய்வதே, தமிழ் நாடகக் கலைக்கு வல்வை கலாலயாவினர் செய்யக்கூடிய பெருந் தொண்டாகும்.

—''சந்திரிகா''




# கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவிகளின் இராவணேஸ்வரன்!

கடந்தவாரம் கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலை மாணவர்களால் இராவணேஸ்வரன் என்னும் நாடகம் அவர்களது கல்லூரியின் ஆறுவது கலைவிழாவின்போது மேடையேற்றப்பட்டது. இறைவனை ஒரு உத்தமனாகவும், சிவபக்தனாகவும் காட்ட எழுந்த இந்த நாடகத்தை, முதன் அமைப்பாளரும், இயக்குநருமாகிய அக்கல்லூரி விரிவுரையாளர் செல்வி கந்தப்பு அவர்கள் வெற்றிகரமாக மேடையேற்றியுள்ளார். கிருஷ்ணையின் சபதம். தேரோட்டி மகன்போன்ற நாடகங்களை மேடையேற்றி அகில இலங்கை ரீதியில் வெற்றியீட்டிய பெருமையும் உடைய இக்கல்லூரி மாணவிகளிடையே நடிப்புப் பஞ்சம் இல்லையென்பதை, நாடகம் எடுத்துக்காட்டியது, இறைவனாக நடித்தவர் அப்பாத்திரமாகவே மாறிவிட்டார். புத்திரபாசத்தால் துடிதுடிக்கும்போதும், ஆத்திரம் பொங்கியெழுந்து, தனது சகோதரர்களையும், மனைவியையும் சினக்கும்போதும், அவர் நடிப்பின் சிகரத்தையே தொட்டுவிட்டார் எனலாம். நாடகத்துக்குத் தலைமைவகித்த கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் ஆண்களே இந்தப் பாத்திரத்தை இவ்வளவு தத்ரூபமாக இவரைப்போன்று நடிப்பார்களென்று சொல்லமுடியாது என்று புகழ்ந்தமை இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

மண்டோதரியின் சோக நடிப்பும், சீதையின் எளிய தோற்றமும், கூனியின் வஞ்சகச் சபதமும், நினைவில்நிற்கக்கூடியவை. சிங்கள சிங்கி என்னும் கற்பனைப் பாத்திரங்கள். நகைச்சுவையை வாரிவழங்கின.

இராமராக நடித்தவர் நன்றாக நடித்தவராயினும் தோற்றப் பொலிவு போதாது. கும்பகர்ணனாக நடித்தவரிடம் கும்பகர்னனுக்குரிய வீரத் தோற்றம் இருக்கவில்லை. ஆயினும் இவர்கள் குறிப்பிட்ட சில காட்சிகளிலேயே தோன்றியமையால் நாடகத்தின் உயர்வு குன்றவில்லை.

வயதுவந்த ஆசிரிய மாணவிகளை இவ்வாறு பயிற்றி ஓர் உயர்ந்த நாடகத்தைத் தயாரிப்பதென்பது, மிகவும் கஷ்டமானகாரியம். ஆகவே இதைத்தயாரித்த கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக்கல்லூரியினர் போற்றப்படவேண்டியவர்கள். இந்த உதாரணத்தை ஏனைய ஆசிரிய கல்லூரிகளும் பின்பற்றுவார்களாயின், நாடகக்கலை ஈழத்தில் மேலும் வளர வாய்ப் பேற்படும் என்பதில் ஐயமில்லை.

செ. சு.

# நாகேஷ் மீண்டும் கதாநாயகன்!

நாலைந்து கல்லூரி மாணவிகள். எல்லோருமே அழகில் ரதிகள். லீவுநாட்களில் இயற்கை அழகுசிந்தும் இடங்களுக்குப் போய் ஆனந்தமாக பொழுதுபோக்குவதே அவர்களின் வேலை.

இவர்கள் செங்கல்பட்டு நகரை அடுத்து உள்ள மலைச்சரிவு ஒன்றில் உட்கார்ந்து சிரித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்,

அழகிகளைக் கண்டதும் அந்த வழியாக வந்த சில வாலிபர்களுக்குக் குறும்பு செய்யத் தோன்றியது. விசில் அடித்தார்கள். கேலி செய்தார்கள்.

அழகி ஒருத்திக்கு ஆத்திரம் வந்தது. வாலிபர்கள் வைத்திருந்த ஒரு சைக்கிளின் சக்கரத்தில் உள்ள காற்றைப் பிடுங்கி விட்டாள். வர்லிபர்கள் என்ன இளைத்தவர்களா? அதில் ஒரு வம்புக்கார வாலிபன் அழகிகளின் தலைவியான விஜயலலிதாவின் காரைப் 'பஞ்சர்' ஆக்கினான்.

இதை அந்த வழியாக வந்த நாகேஷ் பார்த்தார். கல்லூரி மாணவிகளுக்காக பரிந்து வாலிபர்களிடம் சண்டைக்குக் கிளம்பினார். அவர்களை ஓடஓட விரட்டி அடித்தார்.

இது சித்திரமகாலின் 'தேன் கிண்ணம்' என்ற படத்திற்காக படம் ஆக்கப்பட்ட வெளிப்புறக் காட்சி. நாகேஷ்- விஜயலலிதா கதாநாயகன் கதாநாயகியாக நடிக்கிறார்கள்.

சுருளிராஜன், ஐ. எஸ். ஆர்., விஜயசந்திரிகா ஆகியோரும் படப்பிடிப்பில் கலந்து கொண்டார்கள்.

தயாரிப்பாளர் கே. கிருஷ்ணமூர்த்தி டைரக்ட் செய்கிறார். ச. ஐயாப்பிள்ளை கதை வசனம் எழுத சங்கர் கணேஷ் இசையமைக்கிறார்கள்.

# வயலின் பேசுகிறது!

வித்துவான் சர்வேஸ்வர சர்மாவுடன் ஒரு பேட்டி!

''இசை இறைவனுடன் நம்மை இரண்டறக் கலக்கச் செய்யவல்ல சிறந்த வஸ்த்து. இசையிலே பற்பல வாத்தியங்கள் அடங்கும். முக்கியமாக வயலின் வாத்தியம் இப்போது முக்கிய இடம் வகிக்கிறது. இது மேல்நாட்டு இசைக்கருவியாக இருந்தபோதும்கூட கர்நாடக சங்கீத உலகில் சிறப்புடன் திகழ்கின்றது.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னிருந்த, வித்வான் தஞ்சை வடிவேற்பிள்ளை கர்நாடக சங்கீதத்தின் சுவை, இலக்கிய நயம் இலக்கணங்கள் அமைய வயலின் வாசித்துக்காட்டியமைக்காக சமஸ்தானத்தினரால் கௌரவிக்கப்பட்டுப் பாராட்டுக்களைப் பெற்றதோடு தங்கத்தாலான வயலின் ஒன்றையும் பரிசாகப் பெற்றார். முதன்முதலில் வயலினை தமிழிசைக் கர்நாடக உலகில் புகுத்திய பெருமையையும் உடையவர் அவரே. மற்றும் திருக்கோடிக்காவல், கிருஷ்ணய்யர், சீகாழி, நாரணயசாமிப்பிள்ளை திருச்சி கோவிந்தசாமிப்பிள்ளை ஆகியோரும் குறைந்த ஆண்டுகளில் நிறைந்த செல்வமாகிய இவ்வினிய சிறந்த வாத்யத்தை தென்னாட்டில் மட்டுமல்லாமல் வடநாட்டிலும்பிரபலமடையச்செய்தார்கள்.''

யாழ்ப்பாணம் தட்டாதெருவில் வசித்துவரும் கரணவாயைச் சேர்ந்தவயலின் வித்வான் இசைமணி பிரம்மஸ்ரீ எஸ். சர்வேஸ்வரசர்மா மேற்கண்டவாறு என்னிடம் கூறினார்.

அன்புள்ளமும் அமைதியான சுபாவமுமுடைய 41 வயது நிறைந்த இவர் இசைஞானம்மிக்கவரென்பது பார்வையில் இருந்து தெரிகின்றது. சிறந்த வயலின் வித்வானாகத் திகழும் இவர் ''இசையைத் தன் தொழிலாக, வருமானத்திற்காக மட்டுமல்லாமல் ஆத்மீக வளர்ச்சிக்காகப் பயன்படுத்திவருவதாகவும்'' கூறினார். அவரிடம் நான் கேட்ட கேள்விகளும், அவர் அளித்த பதில்கள் இதோ:-

## ஆர்வம் பிறந்தது


கே: வயலின்வாத்தியத்தை நீங்கள் கற்றுக்கொள்ள எப்படி ஆர்வம் பிறந்தது?

ப: நான் முதன்முதலில் 8 வயதிலேயே இந்தியாவிற்குச்செல்லக்கூடிய வாய்ப்புக்கிடைத்தது. அங்கேயே எனது பள்ளிப் படிப்பையும் ஆரம்பித்தேன். ஓய்வுநேரங்களில் வயலினையும் வாசித்துப் பழகினேன். ஆனல் சரியானமுறை தெரியாதபடியால் தத்தளித்தேன். பல பெரிய வித்வான்களுடைய கச்சேரிகளைக் கேட்கும் போதும் யானும் இப்படியொரு வயலின் வித்வானாக வரமுடியாதா? என்ற எண்ணம் பிறந்தது. ஆர்வத்திற்கு ஊக்கமளித்தவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு பெரியார்.

## பயிற்சி

கே: யாரிடம் கற்றீர்கள்?

ப. முதலில் சிதம்பரத்தைச் சேர்ந்த வித்வான் பிரம்மஸ்ரீ நாகராஜராவிடம்



ஆரம்பித்து, தஞ்சாவூர் பிரம்மஸ்ரீ என். ஜி கோபாலகிருஷ்ணய்யரிடம் முறையாகக் கற்றேன். அதன் பின்னர் மிருதங்கவித்வான் தஞ்சை ராமதாஸ்ராவ் அவர்களின் தமையனார் கஜபதிராவிடம் சில காலம் பயிற்சி பெற்றேன்.

பேட்டி கண்டவர்:
இ. திருஞானசம்பந்தன்

கே: இந்தியாவில் இருந்து எப்போது இலங்கை திரும்பினீர்கள்?

ப: சுமார் 20 வருடங்களுக்கு மேலாகின்றது.

கே: தாங்கள் இந்தியாவில் இருந்தசமயம் இசை நிகழ்ச்சிகளில் பங்குபற்றியதுண்டா?

ப: பல இசை நிகழ்ச்சிகளில் கலந்து வயலின் வாசித்துள்ளேன். 'நாதஸ்வர வித்துவமேதை'' சிதம்பரம் கோவிந்தசாமிப்பிள்ளையினுடைய புதல்வியின்கச்சேரிக்கு வாசித்துப் பல இந்திய வித்வான்களுடைய பாராட்டுக்களையும் பெற்றேன்.

கே: நீங்கள் தற்போது எந்த அளவில் இசைப்பணி புரிகிறீர்கள்?

ப: இசை நிகழ்ச்சிகளுக்குப் பங்குபற்றிப் பக்கவாத்தியம் வாசித்து வருவதோடு மட்டுமல்லாமல் பல மாணவ மாணவிகளுக்கும் வயலின் வாத்தியம் கற்பித்துவருகின்றேன். யாழ்ப்பாணம் ரசிகரஞ்சன சபாவிலும் வயலின் ஆசிரியராகவும் பணியாற்றி வருகின்றேன்.

கே: நீங்கள் வெளிநாடு சென்றதுண்டா? அங்கு

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை

## தீராத நோய் தீர்த்தருளும் மருந்து

அதிகமான நோய்களை நம்பிக்கையால் மாற்ற வேண்டியுள்ளது சிறிதுவீதம் மாத்திரம் மருத்துவஉதவி அவதானிப்பு தேவைப்படுகிறது. சிக்கல் ஏற்படாத நிமோனியா, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் தாமாகவே உரியநேரத்தில் மாறிவிடுகின்றன. சிறு காய்ச்சலும் இப்படியே மாறுகிறது. ஆனால் கடுமையான காய்ச்சல் ஒருவருக்கு ஏற்பட்டால் ஒரு பயம், கவலை, அல்லது மரணமே விளைகிறது.

இப்படியான எண்ணங்கள் நோயாளி, உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரின் உள்ளத்திலே உண்டாகிறது.

இதை நன்றாக உணர்ந்த டாக்டர் இவர்களுடைய உள்ளுணர்வுகளை சமாதானப்படுத்த முயல்கிறார் அதற்குப்பின் டாக்டருடைய சக்திக்கும் ஒரு முடிவு உண்டு அந்தச்சக்தி நோயாளியின் துன்பத்தை சிறிது ஆற்றுகிறது. டாக்டரின் ஆதரவு கணிசமான ...றுதலைக் கொடுக்கிறது.

### டாக்டரில் நம்பிக்கை குணம் தரும்

நோயாளிக்குத் தம்மேல் நம்பிக்கையை ஊட்டுவதன் மூலம் எத்தனையோ நோயாளிகளை குணப்படுத்தியுள்ளார்கள். எத்தனையோ சந்தர்ப்பங்களில் மருந்து கொடுக்க ஆரம்பிக்குமுன் டாக்டரின் வருகை மாத்திரமே நோயாளியைக் குணப்படுத்தியுள்ளது. நான் சொல்வதற்கு உதாரணமாக இரண்டு சம்பவங்களை இங்கு தருகிறேன்,

வங்கியில் வேலை பார்க்கும் எழுதுவினைஞர் ஒருவர் என்னை வந்து பார்ப்பார். அவருக்கு ஆஸ்த்மா நோய் பீடித்திருந்தது. நான் ஒரு மாத்திரை எழுதிக்கொடுத்தேன் அது அவருக்கு சுகத்தைக் கொடுத்தது. அதனால் அந்த மாத்திரையில் அவருக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அபூர்வமாக அந்த மாத்திரையை அவர் பாவித்தாலும் அந்த மாத்திரையை எந்தச் சமயத்திலும் வைத்துக்கொள்ளும்போது அவருக்கு ஆஸ்த்மா பீடிப்பு ஏற்பட்டதில்லை.

ஒருநாள் கந்தோருக்கு அவர் 'கோர்ட்' சட்டையை மாற்றி அணிந்து சென்றுவிட்டார். அதனால் மாத்திரையை உடன் எடுத்துச் செல்ல மறந்து விட்டார்.

கந்தோரில் வேலைசெய்துகொண்டிருக்கும்போது சட்டைப்பையில் மாத்திரை இல்லாதது நினைவுக்கு வந்தது உடனே அவருக்கு ஆஸ்த்மா பீடிப்பு ஆரம்பித்துவிட்டது. அவர் வேலை செய்வதை நிறுத்தி என்னைவந்து காண்பதற்கு கந்தோரிலுள்ள மருத்துவ ஊழியரிடம் லீவு கேட்டார், அவர் லீவு கொடுக்க மறுத்ததுடன் அவருடைய நோயைக் குணப்படுத்தத் தாமே முன்வந்தார். ஆனால் நோயாளர் அவருடைய உதவியை உதறித்தள்ளிவிட்டு என்னிடம் வந்து மாத்திரையைப் பற்றிப் பிரஸ்தாபித்தார்.

**நோய்களைக் குணப்படுத்துவதில் மருந்துகளிலும் பார்க்கக் கூடியசக்தி வாய்ந்தது நம்பிக்கை. நம்பிக்கையால் தீராத வியாதிகள் பல தீர்ந்துள்ளதை உதாரணங்கள்மூலம் மிகத் தெளிவாக விளக்குகிறார் அனுபவமும் ஆற்றலுமுடைய டாக்டர் சுப்பிரமணியம்.**

நான் மாத்திரையைப் பற்றிய பெயரை எழுதினேன். அதைப் பார்த்த உடனேயே அவருடைய முகத்தில் நல்ல தெளிவு ஏற்பட்டது. அந்த வாசகமே அவருக்கு நோய் படியச்செய்து நல்ல குணத்தை அளித்தது. அவருடைய நிலைமையில் நல்ல முன்னேற்றம் காணக்கூடியதாகவும் இருந்தது

இன்னொருவர் கடுமையான வருத்தத்தினால் வேதனைப்படும்போது அந்தநிலைமையில் அவர் மருந்து எடுப்பதில்லை, பதிலாக நம்பக்கூடிய சாத்தியக்கூறுயமைந்த வைத்திய முறையைக் கையில் வைத்திருப்பார். அவ்வளவிலேயே மருந்து சாப்பிட்டது போன்றகுணம் அவரிலே காணப்படும். இவருக்கு சுமார் 70 வயது.

பன்னிரண்டு வருடங்களுக்குமுன், இவருடைய இரு புத்திரர்கள் இவரை என்னிடம் கொண்டு வந்தார்கள். இவர் 'நியூமெ

**சென்னை வைத்திய கல்லூரி**

**பேராசிரியர்**

**டாக்டர் சுப்பிரமணியம்**

னியா' நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் அப்போது. நான் இவருக்கு வைத்தியம் செய்தேன். இரவும் பகலும் கண்விழித்து 4 மணித்தியாலத்துக்கு ஒருமுறையாக குளுக்கோஸ்ஊசிமூலம் இவருடம்பில் செலுத்தி வைத்தியம் செய்தேன். இந்த நிகழ்ச்சியை நான் முற்றாக மறந்துவிட்டேன். முன்பு நான் தனக்கு வைத்தியம் செய்ததை அவரே எனக்கு ஞாபகப் படுத்தினார். என்மேலுள்ள நம்பிக்கையினால்தான் திரும்பவும் வைத்தியம் செய்ய என்னிடம் வந்தார். 'இவரிடம் கொண்டுவந்து விட்டீர்கள். இனி எனக்குக் குணமாகிவிடும்' என்று தனது புத்திரர்களிடம் கூறி அவர்களை வீட்டுக்குச்செல்ல அனுமதித்தார். அவர் குண[illegible] [illegible] அவ்வளவாக நம்பிக்கையில்லை. ஏனெனில் வயதுபோன நேரத்தில் நியூமோனியா வந்திருக்கிறது. முதுமை மரணத்துக்குக் காரணமாகவும் இருக்கலாம் ஒஸ்லர் சொன்னார், 'நியூமோனியா வயதுபோனவர்களின் நண்பன்' என்று அந்தக்காலத்தில் 'சல்பர்', 'பென்ஸிலின்' ஆகியன அறிமுகமாகுமுன் எதிர்பாரகத விதத்தில் நோயில் உழலாமல் வயதுபோனவர்களைக் கொன்றுவிடுகிறது. இந்தத் திடீர் மரணம் உற்றார் உறவினருக்கு மனவேதனையைக் கொடுத்தாலும் நோயாளிக்கு நிம்மதியான மரணமாக அமைகிறது. இதை மனதில் வைத்துக்கொண்டு அவருடைய புத்திரர்களை வீட்டுக்குத் திருப்பி அனுப்ப மனமில்லாமல் அவர்களை ஆஸ்பத்திரியில் தங்கும்படி கூறினேன். ஆனால் அவருடைய நிலைமை விசித்திரமாக இருந்தது அவர் தனது புத்திரர்கள் அங்கு தாமதித்து நிற்பதைக் கண்டு கோபமடைந்தார். 'டாக்டர் என்னைக் கவனிக்க இருக்கும்போது இன்னமும் ஏன் நிற்கிறீர்கள்' என்று ஏசி அவர்களைத் துரத்திவிட்டார். எனக்கு அவருடைய குணத்தில் இன்னமும் நம்பிக்கை ஏற்படாததனால் அவர்காணாதவகையில்வெளியில் காத்துநிற்கும்படி அவர்களிடம் கூறினேன்.

இப்படியான ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் நோயாளியைக் கொண்டுவந்து சேர்ப்பித்த தினத்தில் மருந்து வந்துசேர ஒருசில மணித்தியாலங்கள் செல்லும். மாலை நான்குமணிவரையும் மேற்குறிப்பிட்ட வயதுபோன நோயாளிக்கு எதுவித மருந்தும் கொடுக்கப்படவில்லை. ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் அவருக்கு காய்ச்சல் இறங்கியதுதான். இரவு நான் 'வார்ட்'டைச் சுற்றிப் பார்க்கும்போதும் அவர் சுகமாயிருப்பதைக் கவனித்தேன். முதல்முறை கொடுக்கவேண்டிய மருந்து கொடுபடாமலிருக்க முன்னமேயே நோய்படிந்து குணம் ஏற்பட்டது.

மேற்கூறிய இரு உதாரணங்களும் நம்பிக்கை எவ்வளவுதூரம் நோயைக் குணப்படுத்தமுடியும் என்பதைக் காட்டுகிறது.

### தெய்வ நம்பிக்கை

...ரிலே நம்பிக்கை வைப்பதனாலேயே இவ்வளவுதூரம் குணமடைகிறதென்றால், எந்த எல்லைக்கும் கட்டுப்படாத சர்வவல்லமை படைத்த இறைவன்மேல் நம்பிக்கையை வைப்பதில் பெருநலன் ஏற்படுவதில் சிறிதும் ஆச்சரியமில்லை. நான் சொல்வதை உணர்ந்துகொள்ள வைத்தீஸ்வரன் கோவில், திருப்பதி, பழனி ஆகிய கோயில்களுக்கு யாத்திரைசெய்து பார்க்கவேண்டும். நூற்றுக்கணக்கான மக்கள் மாத்திரமல்ல, ஆயிரக்கணக்கான மக்கள் நோயிலிருந்து குணமானவர்கள் தங்கள் நேர்த்திக்கடனை முடித்துச் செல்லுகிறார்கள்.

### பிரான்ஸில்

புராதனகாலம் தொடக்கம் மக்கள் பலவகையான நோய்களையும் வழிபாட்டினாலும், ஆலயங்களுக்குச் செல்வதனாலும் குணப்படுத்தியிருக்கிறார்கள். எந்தச் சமயத்திலும். தெய்வவழிபாட்டினால நோயை மாற்றுவது விசித்திரமானதல்ல. இது எல்லாச் சமயங்களிலும்

(12ம் பக்கம் பார்க்க)

---

# இல்லறம்

**திமிலைக்கண்ணன்**

இயற்கையோ டிணைந்ததே வாழ்வு - இரண்டில்
எதுஉனக்கு முதல்த் தேர்வு
இயற்கையால் நிலைபெறும் வையம் - இணைந்
தின்பம் பெற்றால்நிலை உண்டு.

இல்லற ஞானம் எளிது - அதில்
இருந்தே பெறலாம்நாம் முத்தி
செல்லரித்த கொள்கை வைத்து - துறவ
செல்வதெல்லாம் விழலப் புத்தி.

கையையும் காலையும் வைத்து - நாம்
கைநீட்டி இரப்ப திழிவு
வையத்தோ ரெல்லாம் துறந்தால் - மனித
வாழ்வு நிலைக்குமோ சொல்நீ!

அகந்தையைச் செருக்கை அழிக்கும் - காதல்
அன்புபோல் நல்லன்பும் உண்டோ?
அகத்தினைப் பண்படச் செய்யும் - நல்
லாற்ற லுடையதில் வாழ்வு

அடக்கம் பொறுமை மிகுந்தால் - நல்ல
அறிவுக் குழந்தை பெறலாம்
நடக்கும் முறையை அறிந்தால் - நல்ல
ஞானக் குழந்தை பெறலாம்.

இல்லறம் போல்நல் லறத்தை - இங்கு
எங்கும் நாம்காண்ப தரிது
சொல்லாற் செயலால் மனத்தால் அறம்
செய்தால்ப் பெறலாம் உயர்வு

எல்லோர்க்கும் நல்ல துணைவன் - இல்லத்
திருந்தறம் செய்யும் முதல்வன்,
அல்லலகற்றி நற் பண்பால் - அவன்
அறம்செய் யலாம் உலகுக்கும்.

வள்ளுவன் சொல்லி லறம்போல் - வாழ்வு
வாழ்ந்தால்த் துறவும் எதற்கு?
உள்ளத்தால் மாந்த ருயர்ந்தால் - இங்கு
உயர்வின்றித் தாழ்வுதா னேது

வாழ்வாங்கு வாழத் தெரிந்தால் - மண்ணில்
வறுமை துயர் பிணியேது?
வாழ்வாங்கு வாழ்ந்து முடிந்தால் - தெய்வம்
வாவென் றழைத்து முன்னிற்கும்.

வீட்டி லிருந்து முயன்றால் - வான்
வீட்டைப் பிடிக்க முடியும்,
நாட்டின் உயர்வைக் கருதி - இங்கு
நாம்செய் யலாம்உயிர்த் தொண்டு

இல்லத் தறம்செய் துயர்வோம் - நல்
லியற்கையைப் போற்றித் தொழுவோம்
செல்வத்தை நேர்மையாற் சேர்ப்போம் - உடல்
செத்தாலும் நம்முயிர் வாழும்.

வெல்லும்சொல் தந்துயர் வூட்டி - நாம்
விரும்பிநல் லில்லறம் செய்ய,
வல்லமை தாபரா சக்தி - என்று
வாணி பதத்தைத் துதிப்போம்.

---

மூன்றுவது அ...
கத் தமிழாராய்ச்சி ...
நாடு தமிழ் அல்லாத...
நிய மொழி பேசும் ...
வாழ்கின்ற பாரிஸ் ...
அடக்கமாக அ...
நடந்தேறியது. இந்...
நாட்டிற்காக ஆல...
எடுக்கவில்லைத்தான்.
கொட்டவில்...
படாடோபமாக ...
வேடிக்கை, ஊர்வல...
த்தவில்லைத்தான்.
எடுத்துக்கொண்ட ...
கத்தைப் பூரணமா...
த்தி செய்யக்கூடியவ...
அமைதியாக இனிது ...
இந்த மகாநாடு ...
பிடித்தவர்கள் ...
மற்றெல்லோருக்கும் ...
சியைக் கொடுக்க...
தாக இருந்தது.

"திறமான பு...
னில் வெளிநாட்டா...
வணக்கஞ் செய்...
டும்" என்றான் பார...
தியின் கனவு நி...
கின்ற யுகம் பிறந்து...
சேமமுற வேண்...
மேலாசை உலகெங்கு...
கச் செய்யும் அனை...
தமிழ் ஆராய்ச்சி...
நாட்டை நடாத்த ...
நகரைத் தெரிவு ...
சாலப் பொருத்தமா...

பரந்த இந்தி...
ஆண்... ஆங்கி...
சளைக்காத அ...
மேலான தமிழு...
ஈடுபாட்டை பாண்...
காரைக்கால் ஆகி...
பகுதியை ஆண்...
யர் கொண்ட...
இருக்கின்றார்கள்.
மொழிகள் ஆகிய...
மீது பிரான்சியர் ...
ஆர்வம் குறிப்பிட...
...

பார் அப் புகை...

# திணையத்தனை ...

## ப...

மனிதன் மனிதன்போல இராமல் ஏன் புகையூதியாக மாறுகிறான்? புகைக்கும்படி அவனுடைய உடல் தூண்டுகிறதா, மனம் தூண்டுகிறதா? பசிக்கிறது, சாப்பிடுகிறான், விடாய்க்கிறது தண்ணீர் குடிக்கிறான்; குளிருகிறது, போர்த்துக்கொள்ளுகிறான்' புகையை இழு என்று சொல்லி அவனுடைய உடலிலுள்ள எந்த நரம்பு கேட்கிறது? பசி, தாகம், குளிர் முதலியவற்றைப்போல புகைத்தலும் தணிக்கப்பட வேண்டிய இயற்கையான வேட்கையா? இல்லையே!

பின் எதற்காக மனிதன் புகைக்கவேண்டும்?

இந்தக்கேள்விக்கு ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரியாக மறுமொழி சொல்லக்கூடும், சிலர் சாப்பிட்டது செமிப்பதற்கு என்பார்கள். சிலர் குளிரைப் போக்குவதற்கு என்பார்கள், சிலர் சும்மா முசுப்பாத்திக்கு என்பார்கள், சிலர் பழக்கம் என்பார்கள்.

ஆனால், 'ஒரு தம் இழுத்தவுடனே நரம்புகள் எல்லாம் விறுவிறுப்படைந்து தேகத்திலே ஒரு உசார் உண்டாகிறது' என்பதே பெரும்பாலாருடைய தீர்ப்பு இதில் ஓரளவு உண்மையும் உண்டு.

எப்படி என்று பார்ப்போம்.

சிகரெட் புகையையோ பீடிப்புகையையோ நெஞ்சுக்குள் உறிஞ்சி இ... வுடனே நிக்கோட்டின் ... யொருதியதை, வை... சையானிக் அமிலம் ... பலவிதமான பொரு... தேகத்துடன் கலந்து ... களை கணநேரத்துக்கு ... விறுப்படையச் செய்... நாடித்துடிப்பும் இர... அமுக்கமும்அதிகரிக்கி... எல்லாவற்றிலும் ... மானதாக, இரத்தக் ... கள் சுருங்கிப்போகி... இதனால் தேகத்தில் ... ஏற்படுகிறது.

கணநேர விறுவிறுப்... பின் ஏற்படும் இந்த ... வெகு நேரத்துக்கு நீடி...

இயற்கையான அ... வாழ்க்கையில் சடு... பரபரப்பூட்டும் ச... ஒன்று நிகழ்ந்தவுடனே... மூச்சு கீழ்மூச்சு ... தேகம் படபடவெ... அடித்துக்கொள்ளுகி... லவா? நரம்புகள் ... புடைத்துக்கொண்டு ... கும். அந்த நேரத்தி... ரெட் புகையை இ... வுடனே அதுஇரத்த ... தைக் குறைத்து ... சொன்ன சோர்வையு... திலையும் உண்டுப... றது.

சிகரெட் புகைப்ப... புக் கோளாறுகளுக்... லது என்று நீங்கள் ... முடிவுகட்டிவிடுகிறீர்...

இவ்வளவோடு ... விட்டால் அது மிகவு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துல
ச்சி மகா
ல்லாத அந்
பசும் மக்கள்
ாரிஸ் நகரில்
அண்மையில்
இந்த மகா
ஆலவட்டம்
ான். மேளம்
ல் லைத்தான்.
வாண
ர்வலம் நடா
ர். ஆனால்
ட நோக்
னமாகப் பூர்
டியவகையில்
னிது முடிந்த
தடிமன்
நீங்கலாக
க்கும் மகிழ்ச்
டுக்கக்கூடிய

புலமையெ
ட்டார் அதை
செய்யவேண்
பாரதி. பார
நிறைவேறு
ந்துவிட்டது.
ண்டி தமி
கங்கும் ஒலிக்
அனைத்துலகத்
ச்சி மகா
த்த பாரிஸ்
வு செய்தது
தமானது.
தியாவை
லேயடுக்குச்
அல்லது
மூடுனை
ாண்டிச்சேரி
ஆகிய சிறு
ட பிரான்சி
ர் களாக
ர். இந்திய
ஆகியவற்றின்
ர் காட்டும்
பிடத்தக்கது,
தமிழாராய்
த்தினர்
நடாத்
மகாநாட்
யிலிருந்து
வித்தியானந்
க. கைலாச
ார். கலாநிதி
என்பது

சர்வதேச அரங்கில் தமிழ் எழுத்தாளன் புகழ் துலங்க

# தரமான தமிழ் இலக்கியங்கள் பிற மொழிகளில் பெயர்க்கப் பட வேண்டும்

கருத்து: கலாநிதி க. கைலாசபதி

பேட்டி கண்டவர்: மு. சின்னத்துரை

அண்மையில் பாரிசிலிருந்து திரும்பிய கலாநிதி கைலாசபதியைச் சந்தித்து நான் சுமார் ஒரு மணிநேரம் உரையாடினேன்.

தமிழ் உலகம் நவீன தமிழ் இலக்கியத்திற்கு திரு. கைலாசபதியிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கின்றது.

குறட்டைவிட்டுக்கொண்டிருந்த ஈழத்து இலக்கிய உலகில் இலககியச் சர்ச்சையைப் புகுத்தி புதிய இலக்கிய ஆர்வத்தை ஏற்படுத்திய அணியில் முன்னுக்கு நிற்பவர் கலாநிதி கைலாசபதி ஆவார்.

இவர் சிக்கலான விஷயங்களை எடுத்து வைத்து கத்திமேல் நடபபதுபோன்று மிக நுண்ணிதாக ஆராய்ந்து விமர்சனம் செய்யும் ஆற்றல் மிக்க சிறந்த விமர்சகர்.

விலகிச் செல்லும் வார்த்தைகளை இழுத்து மடக்கி வேகத்துடனும் அதேவேளையில் நாசுக்காக எழுத்துக்கும், லட்சியத்திற்கும் முரண்பாடின்றி எழுதும் சிறந்த எழுத்தாளர்.

மூன்றுவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு பற்றி ஏற்கனவே சில பிரச்னைகள் கிளப்பபப்பட்டிருப்பது தெரிந்ததே. இதுசம்பந்தமாகப் பலருடைய ஐயப்பாட்டையும் நிவர்த்தி செய்யு முகமாக எனதுமுதலாவது கேள்வியை கலாநிதி கைலாசபதியிடம் கேட்டேன்.

''இலங்கைப் பிரதிநிதிகளின் கட்டுரைகள் பாரிஸில் வாசிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது; காரணம் என்ன?''

இக்கேள்விக்கு அவர் அறிவித்த பதில் வருமாறு:-

''முதலில் மகாநாட்டின் நோக்கத்தை விளக்குகின்றேன். நவீன தமிழ் இலக்கியம், சங்க இலக்கியம் கடல் கடந்த தமிழர், தமிழர் கலாச்சார முயற்சி, தமிழும் வடமொழியும், தமிழர் வரலாறு என்ற ஆறுபிரிவாக மகாநாட்டின் நிகழ்ச்சிகள் பிரிக்கப்பட்டிருந்தன. இந்த ஆறு தலைப்புகளின் கீழ் ஒருவர் மதிப்பீட்டுக்கட்டுரைவாசிப்பார். ஏனையோர் அதுபற்றிய விவாதத்தில் கலந்துகொள்வதே மகாநாட்டின்நோக்கம். பாரிஸ் மகாநாட்டினது பொதுத்திட்டம் கருத்தரங்கில் பங்குகொள்வதேஅன்றி கட்டுரை வாசிப்பதல்ல.''

கேள்வி; தனிப்பட்டவரின் கட்டுரைகள் அங்குவாசிக்கப் படவில்லையா?

பதில்: மதிப்பீட்டுக்கட்டுரைக்குஉள்ளடங்கிய விஷயத்தைப்பற்றிய சிலகட்டுரைகள் மகாநாட்டில் நேரமிருந்தபோது வாசிக்கப்பட்டன.

நடந்தேறிய மூன்று மகாநாடுகளைஒப்பிட்டுக் கூறமுடியுமா என நான் கேட்டதற்கு.

''மலேஷியாவில் நடைபெற்ற மகாநாட்டில் நான் கலந்துகொள்ளவில்லை என்றாலும் நான் அறிந்தமட்டில் ஒப்பிட்டுக்கூற முடியும்.

அறிஞர் சார்பும், பொதுமக்கள் சார்பும் மலேஷிய மகாநாட்டில் சமபங்குவகித்ததையும், அறிஞர் சார்பிலும் பார்க்க பொதுமக்கள் சார்புமேம்பட்டு ஜனரஞ்சகத்தன்மை சென்னை மகாநாட்டில் முக்கியத்துவம் வகித்ததையும், அறிஞர் சார்பு பாரிஸ் மகாநாட்டில் மேலோங்கித் திகழ்ந்ததையும் கூறமுடியும் எனக்கலாநிதி பதிலளித்தார்.

நான்: பாரிஸ் மகாநாடு எவ்வளவு தூரம் பயனுள்ளதாகவும். புதிய ஆராய்ச்சிக்கு வழிவகுத்ததாகவும் கூறமுடியும்?

கைலாசபதி: பிறமொழி பேசும் மக்கள் வாழும் ஒரு நாட்டில்தமிழ்மகாநாட்டை இதனைவிட வெற்றிகரமாக நடாத்தமுடியாது. தமிழ் அறிந்த பிறமொழியாளர்களிடையே இம்மகாநாடு ஒரு கூட்டுறவை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது.

ஆராய்ச்சித் துறையைப் பொறுத்தவரை ஆச்சரியப்படக்கூடிய ஆராய்ச்சிகள் நடந்துள்ளன என்று கூறுவதற்கில்லை ஆனால் மலேசியா மகாநாட்டில் தொடங்கிய ஆராய்ச்சியைப்பலர் விரிவுபடுத்தியுள்ளார்கள்.

டென்மார்க் அறிஞர் அர்ஸ்கோ பார்ப்பொலவின் சிந்து நதிப் பள்ளத்தாக்கு களிமண் முத்திரைகளை வாசித்த கட்டுரை என்னைக் கவர்ந்தது. கம்யூட்டர் துணைகொண்டு வாசித்து தொன்மைத் திராவிட மொழியுடன் தொடர்பு கொண்டது எனவும் சிந்துநதிப் பள்ளத்தாக்கு மதத்துடன் இந்து மதம் தொடர்புகொண்டது எனவும் நிறுவ அவர்முற்பட்டார். இவருடைய ஆராய்ச்சி ஏற்கப்படின் இதுவரை ஆராயப்பட்ட பலரது ஆராய்ச்சிகள் கைவிட வேண்டிவரும்.

எனவே புதிய ஆராய்ச்சி என்னும்போதுகம்பியூட்டர் பாவித்து ஆராய்ச்சி செய்யப்பட்டதை இங்கு குறிப்பிடலாம்.

கேள்வி: தமிழாராய்ச்சி மகாநாட்டை மேலை நாடுகளில் நடாத்துவதினால் ஏற்படக்கூடிய நன்மைஎன்ன?

பதில்: 'உலகெல்லாம் தமிழ்முழக்கம்செய்யவேண்டும்' எனக் கனவு கண்டவர்களின் அவாவை ஒட்டி தமிழாராய்ச்சியை பரந்த உலகில் விரிந்துசெல்ல வழிவிட உதவும்.

இன்னொன்றுசொல்வேன். சர்வதேச ஆராய்ச்சியுடன் தமிழ்ஆய்வு சென்றுகலக்க உதவுகின்றது. தமிழில் ஆராய்வதற்கு விஷயங்கள் உண்டெனப் பிறநாட்டவருக்கு எடுத்துக்காட்டி அவர்களைத் தமிழ் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியில் ஈடுபடுத்த மேல்நாடுகளில் இம்மாதிரியான மகாநாடுகள் அவசியம் எனக்கருதுகின்றேன்.

கே: அனைத்துலகத்தமிழாராய்ச்சி மகாநாடு நடத்த எந்தவகையில் பாரிஸ் பொருத்தமானது?

ப: பிரான்சியர் தமிழின் மீது கொண்டுள்ள ஈடுபாட்டுக்கு மதிப்பளிப்பதாக இம்மகாநாடு அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பாரிஸ் மியூசியத்தில் தமிழகத்தில் கிடைக்காத பல சுவடிகளை வைத்திருக்கின்றார்கள். நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தின் ஒவ்வொரு சொல்லாக எடுத்து சொல்லை பிரான்சு மொழியில் தயாரித்துள்ளார்கள். அவர்களுடைய தமிழாராய்ச்சி முயற்சிகள் பலவற்றை நேரில் பார்க்க என்னால் முடிந்தது.

கே: சர்வதேச மொழி ஆராய்ச்சியுடன் தமிழ் ஆராய்ச்சி எவ்வளவு தூரம் இணைந்து வளர்ந்துள்ளது என்பதனைக் கூறமுடியுமா?

ப: நவீனஇலக்கியம்பற்றி மதிப்பீட்டுக் கட்டுரை வாசித்தவர், ஜெயகாந்தன், ராஜாராம் ஆகியோரின் சிறுகதைகள் சர்வதேச அரங்கில் சமன்நிற்கக்கூடியவைஎன்றுகூறினர். இதனை நான் ஏற்கின்றேனே அல்லது விடுகின்றேனேஎன்பது வேறுவிஷயம் தமிழ்வசன கவிதையின் வளர்ச்சி சர்வதேச அரங்கில் இடம்பெறக் கூடியது என்றும் மதிப்பீட்டுக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டது.

பொதுவாக தமிழ்நாட்டு வரலாற்று ஆராய்ச்சி, ஒப்பியல் பற்றிய ஆராய்ச்சி போதாது என்று பலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள். அதனை நானும் கூறிவைக்க விரும்புகின்றேன்.

கே: நீங்கள் மகாநாட்டில் வகித்த பங்கென்ன?

ப: நவீன இலக்கியம் பற்றிய கருத்தரங்கில் பங்குகொண்டேன். இலக்கியத்தை பண்புகளை அடிப்படையாக வைத்துப்பகுத்து ஆராயவேண்டும் என்பதை வலியுறுத்தினேன். பண்புகளை வைத்து ஆராயும்போது எல்லா இலக்கியத்திற்கும் உரியஇடம் கிடைப்பதுடன் இலக்கிய ஆய்வும் பூரணப்படுகின்றது பின்வரும் பண்புகளை வைத்து இலக்கியத்தை ஆராயலாம் என்பதைத் தெரிவித்தேன் பிரதேசத்தன்மை, மொழித்தன்மை, கோட்பாடுகள், ஒப்பியல், மதிப்பீட்டுக் கட்டுரைவாசித்த எசெல் என்பவர் இலங்கையைப் பற்றிக் குறிப்பிடுகையில் பேச்சு மொழியைக் கையாளுவதற்குப்பின்னிற்பதில்லை எனக் கூறியுள்ளார்.

கே: சர்வதேச தமிழாராய்ச்சி நிறுவன அமைப்பு வேலைகள் எந்தளவில் உள்ளன?

ப: இவ்வாராய்ச்சி நிறுவனம் நிறுவுவது பற்றிய தீர்மானத்தை அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுக் குழுவினர் நிறைவேற்றி யுனெஸ்கோநிறுவனத்திடம் கையளித்தபோது யுனெஸ்கோ இதற்கு உதவியளிப்பதாக வாக்குறுதியளித்தது. இதற்கான கட்டிடத்தை அமைக்க தமிழக அரசு 50 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி உள்ளது. பெரும்பாலான வேலைகள் 1973-ம் ஆண்டுக்கிடையில் முடிவடைந்து விடும் என்று கூறப்படுகின்றது.

கே: சர்வதேச அரங்கில் தமிழ்எழுத்தாளன் புகழ் பெறவில்லையென்கிறேன். தங்கள் கருத்தென்ன?

ப: அதற்குப் பலகாரணம் உண்டு தரமானஇலக்கியங்களை பிறமொழிகளில் பெயர்த்து தக்கமுறையில் பயன்படுத்தினால் சர்வதேச அரங்கில்தமிழ்எழுத்தாளன் பிரகாசிக்கமுடியும். உதாரணம் ஒன்றுகூறுவேன். சிலப்பதிகாரநாடகத்தை மொழிபெயர்த்து ருமேனிய வானொலியில் ஒலிபரப்பிய பின்னர் நேயர்களின் வேண்டுகோளுக்கிணங்கபல முறை அது ஒலிபரப்பப்பட்டதாம். தகுந்த மொழிபெயர்ப்பு தரமான தமிழ் இலக்கியத்திற்கு வேண்டும். இத்தகைய மகாநாடுகளை பிறமொழி பேசுவோர் வாழும்நாடடில் வைப்பதும் இதற்கு அனுசரணையாக இருக்கும்

## மீன்களின் குரல்கள்

பசிபிக் ஸால்மன்மீன்களினதும் கம்சட்கா நண்டுகளினதும் 'குரல்களை' பதிவு செய்யும் பரிசோதனை முயற்சியை சோவியத் மீனியலாளர்கள் மேற்கொண்டனர். இந்தப் பதிவு வேலைகள் பசிபிக்கில் நடைபெற்றன. ஸால்மன் மீன்களின் குரல் கைக்கடிகாரத்தின் 'டிக்டிக்' சத்தத்திற்கு ஒத்தவையாக உள்ளன நண்டுகளின் குரல் உடைதல் சத்தத்துடன் ஆரம்பித்துகரையோரத்தை மோதும் அலையின் பெரும் ஓசைபோல முடிகின்றன, இந்த குரல்கள் பதிவு செய்யப்பட்டமைஇந்த மீன்களும், நண்டுகளும் எங்கு பெருந்தொகையாக இருக்கின்றன என்பதையும், இவற்றின் இயக்கத்தையும் தெரிந்து கொள்ள உதவுகின்றன. இந்த 'குரலை'க் கொண்டு இவற்றின் அளவையும் அனுமானிக்க முடியும்.

கையிலேயின் பண்பு [3]

# இன்பம், ...ளையத்தனை துன்பம்

இழுத்த
ட்டின் கரி
ஹைட்ரோ
லம் என்று
பாருட்கள்
ந்து நரம்பு
ருக்கு விறு
செய்கிறது.
இரத்த
க்கின்றன.
ழக்கிய
தக் குழாய்
ாகின்றன.
ல் சோர்வு

றுப்புக்குப்
ந்த அசதி
நீடிக்கும்.
அன்றுட
சடுதியாக
சம்பவம்
னே மேல்
வாங்க
வென்று
ரு கிறதல்
விம்மிப்
டு நிற்
த்தில் சிக
இழுத்த
ந்த ஓட்டத்
மேலே
வயும் அச
டுபண்ணுகி

ப்பது நரம்
ளுக்கு நல்
ள் உடனே
றீர்கள்.
நின்று
கவும் நல்ல

காரியம். அதாவது உணர்ச்சிப் பதைப்பு ஏற்படும் போதுமட்டும் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டால் அதனல் பாதகமில்லை. ஆனல் அத்துடன் நிறுத்திவிடுகிறீர்களா?

ஒருநாளைக்கு சிலர் இருபது முப்பது சிகரெட்டுகள் பற்றவைக்கிறார்கள். சிலருக்கு ஒருகட்டு பீடி காணுது. இவ்வளவையும் புகைத்துத்தள்ளுவதற்குஅவ்வளவு பதைபதைப்பான உணர்ச்சிப் பெருக்குகள்தினமும் ஏற்படுகின்றனவா? இல்லை

— சுநாதன் —

உண்மையென்னவென்றால் சிகரெட்பழக்கம் உங்கள் உடம்போடு சேர்ந்து இரத்தத்தில் ஊறிவிட்டது. இரத்தோட்டத்தைக் குறைத்து உறுப்புகளில் சோர்வை உண்டாக்கும் அந்த அசதி நிலையை நினைத்து அடிக்கடி மனம் தவனம் கொள்ளுகிறது புகை இழுக்காவிட்டால் உடம்பெல்லாம் என்னவோ செய்கிறது. எதிலும் மனம் லயிக்க மறுக்கிறது. எரிச்சல் எரிச்சலா வருகிறது.

கணப்பொழுது இன்பத்திற்காக ஆசைப்பட்டு நாள் முழுவதும் துயரப்படுகிறீர்கள். பழக்கம் என்று ஏற்பட்டுவிட்டால், பின்பு அதை மறப்பது இலகுவான காரியமல்ல

புகைஊதும்ஆசை பெரும்பாலான ஆண்களுக்கு மிகச் சிறுவயதிலேயே ஏற்பட்டுவிடுகிறது. பெரியவர்கள் புகையை நெஞ்சுக்குள் இழுத்து வெளியே ஊதும்போது பார்த்துக்கொண்டு நிற்கும் சிறிசுகளுக்கு தாமும் அப்படிச் செய்துபார்த்தாலோ என்று ஆவல் பிறக்கும், சிகரெட்டோ, பீடியோ, சுருட்டோ அல்லது வெறும் காகிதச் சுருளோ எதையாவது கொழுத்தி புகை ஊதிப்பார்ப்பார்கள். தொண்டையும் நெஞ்சும் உலர்ந்து புகை புரைக்கேறியதும் இருமித் திக்குமுக்கோடி விட்டு விடுவார்கள் மீண்டும் புகைஊதும் ஆசை மிஞ்சியதும் புகைப்பார்கள். சிகரெட், பீடித்துண்டுகளைப் பொறுக்கித் திரிவார்கள். சிலருக்கு இப்படியே புகைக்கும் வழக்கம் உண்டாகி விடுகிறது. புத்தியுள்ளவர்கள் அது கெடுதியான வழக்கம் என்பதை உணர்ந்து முளையிலேயே கிள்ளிஎறிந்து விடுவார்கள்.

நமது இளைஞர்களில் பலருக்கு சிகரெட் பிடிப்பதில் மோகம் உண்டாவதற்கு வெள்ளையாயிருப்பதால் வெள்ளைக்காரர் உபயோகிப்பது வெள்ளைச் சுருட்டு ஆனபடியால் அது கொஞ்சம் 'உசத்தியானதாய்த்தான் இருக்க வேண்டும். கால் சட்டை, கோட், சப்பாத்து இவற்றுடன்சிகரெட்டும் ஒருவருடைய அந்தஸ்தைப் பிரகடனப்படுத்தும் சின்னமாகி விட்டது. இலங்கையிலே சிகரெட் புகைக்க மனமில்லாதவர்கள் சிலர் நலைந்துபேர் முன்னிலையில் தமது போலி அந்தஸ்தைக் காப்பாற்றுவதற்காக சிகரெட் புகையை உள்ளுக்கிழுத்து புரைக்கடித்து இருமித் [illegible] பரிதாபகரமான காட்சியை நான் பலதடவை கண்டிருக்கிறேன் [illegible]

((12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு மட்டும் போதாது நற்பழக்கமும் வேண்டும்

— செல்வி. எஸ் புஷ்பவள்ளி —


'அரிது அரிது மானிடராய்ப்பிறத்தல் அரிது' என ஆன்ரூேர் மானிடப் பிறவியை பெருமைப்படுத்திக் கூறியிருக்கிருர்கள். அதாவது ஜீவராசிகளிடம் ஐவகை அறிவுமாத்திரமே உண்டு. மனிதனுக்கோ இவற்ருேடு பகுத்தறிவு என்னும் ஆரும் அறிவும் உண்டு இஃதொன்று இருப்பதால் தான். அவன் மற்ற உயிர்களைப்போல ஒரே நிலையில் வாழ்ந்து வராமல் தன் முன்னேற்றத்திற்கு வேண்டியவாறெல்லாம் தன் நிலையை மாற்றிக்கொண்டு மேலும் மேலும் உயர்வடைந்து வருகிருன். ஆதலின், உயர்வகைகள் அனைத்துள்ளும் மனிதன் சிறந்தவன் எனக் கூறுவது முழுதும்பொருந்தும்.

இத்தகைய உயர்வு படைத்த மனிதன் தன் உயர் நிலைக்கேற்ப நடப்பது மிகவும் அவசியம். இல்லையேல் அவனுக்கும் விலங்குக்கும் அடிப்படையான வேற்றுமை யாதொன்றும் இராது 'விலங்கலேன், விலங்கலாதொழிந்தேனல்லேன் என்ற திருவாக்கு. மேல் நிலை நாடிச் செல்லுமொருவன் தன்னிடத்துள்ள மிருகத் தன்மையோடு போராடுவதைக்குறிக்கும். ஒவ்வொரு மனிதனும், தான் இவ்வுலகின்கண்தோன்றிய நோக்கத்தையறிந்து கொண்டு அதை நிறைவேற்றமுயலுவதே அறிவு படைத்தமைக்கு அழகாகும்.

'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என அப்பர் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியதற்கேற்ப, மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் தன் கடமையைச் செலுத்தும் அவசியத்தை உணர்ந்து, பணிசெய்வதே தகுதியாகும். மனிதன் இவ்வுலகில் செய்யவேண்டிய பணியாது? தன்னைப் பெற்று வளர்த்தெடுத்த தாய்-தந்தையர்கள் கடனை முதலிற் செலுத்தவேணடும். தனது நன்மைக்கெனப் பெரியோர் தொகுத்துவைத்துள்ள அறிவு செறிந்த நூல்களைக் கற்றுத் தன் அறிவைப் பெருக்க வேண்டும்; கற்ற வழி நிற்கவேண்டும் அறநெறியிற் பொருளீட்டி, அறநெறி வழியே இல்லறத்தை இனிது நடத்தவேண்டும். அதன் பின்னர், முன்னேர் தனக்கு உதவியது போல் தானுந்தன்பின்வருபவருக்கு வேண்டிய அறிவைத்தொகுத்து அளிக்கமுயலவேண்டும். உலகிலுள்ள மக்களனைவர்க்கும் தன்னாலியன்ற உதவி புரியவேண்டும்.

முதலாவது, நமக்கும் நம் குடும்பத்திற்கும் வேண்டிய உணவு தேட உடல் வலிமை அவசியமாகிறது நம் அறிவைப்பெருக்குதற்கும் ஆன்மஞான மடைவதற்கும் உடலைக்காக்கவேண்டும். உடல் நல்ல நிலையில் இராவிடின் அறிவு வளர்ச்சியும் தடைப்படும். பொதுநலத்திற்காக நாம் செய்யவேண்டிய கடனைச் செலுத்துவதற்கும் உடல்வலிமை அவசியமாகிறது. ஆகவேதான் "நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்", "உடம்பார் அழிந்தால் உயிரார் அழிவார்" "நோய்க்கிடங்கொடேல்" என்பன போன்ற பொன்மொழிகள் தோன்றி நிலவுகின்றன.

ஆகவேதான், அறிவுடைய பெற்ருேர்களும் ஆசிரியர்களும் தங்களிடம் வளரும் சிறுவர் சிறுமியர்களுக்கு நற்பழக்கங்களை இளமையிலேயே கற்பிக்கிருர்கள். சிறுவர்கள் அவர்களது நன்மொழிக்கும் இணங்கி நடந்து கொண்டு பெரும் பயனை அடைகிருர்கள்




# யாழ்ப்பாணத்துப் புண்ணிய தலங்கள்

கடந்த வாரம் விடுமுறையாதலால் தம்பி தங்கைகளெல்லாம் ஆடி அமாவாசைக்கு கீரிமலைக்குச்சென்று நன்ருக நீராடியிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

அன்றுதான்மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் தீர்த்தத் திருவிழாவுமாகும், கந்தன் தீர்த்தமாட அன்று இங்குதான் எழுந்தருளுவார். இறைவன் தீர்த்தமாடியபின்னர் மக்கள் எல்லோரும் கடலிலும் கேணியிலும் தீர்த்தமாடி தமது பாவங்களைப் போக்கிக் கொள்வர்.

கீரிமலை சிறந்த புண்ணிய தீர்த்த தலமாகும். மக்கள் இங்கு தீர்த்தமாடுவதனுல் பாவங்கள் நீங்குவதோடு பலகொடிய நோய்களும் நீங்குகின்றன. கொடியவியாதிகள் ஏற்பட்ட மக்கள் எத்தனையோ பேர் இங்கு சிறிது நாள் தங்கியிருந்து கடலில் தீர்த்தமாடி தங்கள் நோயைத் தீர்த்துள்ளனர். இது எவ்வளவு தூரம் உண்மையென்பதை இதன் வரலாற்றினுலேயே அறியலாம்.

இந்தஇடத்துக்கு 'கீரிமலை' என்ற பெயர் வரக்காரணம் என்ன என்று தெரியுமா? முன்னெரு காலத்திலே, கீரிமுகத்தையுடைய ஒரு பெண் இந்தப் புண்ணிய தீர்த்தத்திலே நீராடி கீரிமுகம் நீங்கப் பெற்ருள். இதனுல் இவ்விடத்துக்கு கீரிமலை என்ற பெயர் உண்டாயிற்று.

மக்களும் தங்கள் பாவங்களும், நோய்களும் தீர இப் புண்ணிய தீர்த்தத்திலே நீராடுகிருர்கள். இதனுல் இத்தலம் மிகப் பிரசித்தி பெற்றுவிளங்குகின்றது. இத்தலம் போலவே மாவிட்டபுரமும் இலங்கையில் பிரசித்தமாயுள்ளது. இக்கோவிலுக்குள் சென்று வழிபடத்தங்களுக்கு அனுமதி தரும்படி ஹரிஜனர்கள் கோருகின்றனர். கோவில் தர்மகர்த்தாக்களும், குருக்களும் சம்மதம்தெரிவிக்காமலிருக்கின்றனர்.

இக்கோவிலுக்கு புனித தீர்த்தமாக விளங்குவது கீரிமலை எனவேதான் தீர்த்தத் திருவிழாவுக்குகீரிமலைக்கு கந்தன் எழுந்தருளுகிருர்.

இவ்வாலயம சித்திர வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்டுள்ளது. கோவிலின் முன் புறத்தில் நவீன முறையில் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள கோயிற்கோபுரங்களில் இதுவே மிகஉயர்ந்ததாகும்

வருடாவருடம் 25 நாட்கள் இங்கு திருவிழா நடைபெறும். இவ்வாலயம் அமைக்கப்பட்ட வரலாற்றைப்பற்றிய கதை ஒன்றுண்டு.

இந்தியாவிலே உக்கிர சோழன் என்ற ஓர் அரசன் இருந்தான். அவனுடைய மகள் மாருதப்புரவீகவல்லி என்பவள் இவள் ஒரு நாள் பூந்தோட்டத்துக்குஉலாவச் சென்ருள் அப்போது அங்கே ஒரு முனிவர் தவஞ்செய்து கொண்டிருப்பதைக் கண்டாள். அவருடைய பெயர் கலைக்கோட்டு மாமுனிவர் என்பதாகும் அவர் மிக்க தவசிரேஷ்டராவார். அவர் சாபமிட்டால் அப்படியே பலித்துவிடும். முனிவரின் வடிவத்தைக்கண்டு அரசகுமாரி ஏளனஞ் செய்தாள் முனிவருக்கு அரசகுமாரியின் மேல் கோபம் வந்தது. "உன்னுடையமுகம் குதிரை முகமாக மாறுக" எனச் சாபமிட்டார். முனிவரது சாபப்படியே அரசகுமாரியின் முகம் குதிரைமுகமாக மாறியது இதனுல் கவலையடைந்த மாருதப்புரவீகவல்லி பல [illegible]

(14-ம் பக்கம் பார்க்க)

"லீடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ காலமேஸ் (Nylon & Cotton)
லீடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

# வேலை வேண்டுமா?

— 'எழிலி' —

வேலை வேலை என்றுகேட்டு
வீதி எல்லாம் அலைகின்ற
தோழர்களுக்கே ஒரு வார்த்தை
தோதாய் நானும் சொல்லிடுவேன்!

வேலை என்ருல் அரசாங்க
வேலை மட்டும் வேண்டுமென்று
நாளை வீணுய்ப் போக்கின்ற
நண்பர்க் கொன்று சொல்லிடுவேன்!

இந்த வேலை கிடைத்தால்தான்
ஏற்றுச் செய்வேன் என்றிடாமல்
எந்த வேலையானுலும்
இனிதாய் ஏற்றுச் செய்யவேண்டும்!

வேலைக்காகக் காத்திருந்து
வீணே நாளைக் கழிக்காமல்
வேலை ஒன்று உருவாக்கி
விரும்பி அதனைச் செய்யவேண்டும்!

என்னவேலை உருவாக்க
என்று கேட்டு விட்டாலே
நன்ருய் வேலை சிலவற்றை
நானும் சொல்லிக் காட்டிடுவேன்!

புத்தளத்திற்குச் சென்றங்கு
புதிதாய் தேங்காய் வாங்கிவந்து
மொத்தமாக வைத்திங்கு
விலைபோட்டு விற்றிடலாம்!

கச்சான் கொஞ்சம் வாங்கிவந்து
கச்சிதமாய் வறுத்து விற்ருல்
மிச்சம் இன்றி விற்றுப்போகும்
விரைவில் கையில்பணம்சேரும்!

வண்டி நிற்கும் இடத்திற்கு
வாளித் தண்ணீர் கொண்டுபோனுல்
வண்டி கழுவும் வேலை கிட்டும்
வயிற்றைக் கழுவ ஏதுவாகும்!

ஆற்றில் உள்ள மீன்பிடித்து
அருமையாக விற்றுவிட்டால்
சோற்றுப் பஞ்சம் தீர்த்திடலாம்
சுகமாய்க் காலம் கழித்திடலாம்!

பள்ளிக் கூடப் பிள்ளைகட்குப்
பாடம் சொல்லித் தந்துவிட்டால்
துள்ளிக் கொஞ்சம் வருவாயும்
துரிதமாய்க் கையில் கிடைத்துவிடும்!

மாடுவைத்து பிழைப்போர்க்கு
மாலை நேரம் புல்வெட்டி
விடுவந்து போட்டு விட்டால்
விரைவாய்க் கொஞ்சம் பொருள்சேரும்!

எடுத்துக் காட்டாய் இவற்றை யெல்லாம்
இங்கே நானும் கூறிவிட்டேன்
அடுத்து நீங்கள் துணிந்துவிட்டால்
அவனிபோற்றும் வாழ்வு கிட்டும்!

(—நன்றி தமிழ்நேசன்)

# நோபல் பரிசு

சுவீடன் தேசத்துப் பிரபல ரசாயன விஞ்ஞானி அல்பிரட் நோபல் 'டைனமைட்' என்ற வெடிமருந்தைக் கண்டுபிடித்தமைக்காக அவருக்குப் பெரும் பணம் கிடைத்தது. நோபல்இறக்கும் போது தான் விட்டுச்செல்லும் பணத்தை வருடாவருடம் ஒரு சில துறைகளில் முன்னணியில் இருப்போருக்கு வழங்கப்படவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். ஆதலால் இப்பரிசுக்கு 'நோபல் பரிசு' என்ற பெயர் சூட்டப்பட்டது.

நோபல் விட்டுச்சென்ற பணத்தொகை ஒன்பது கோடிடொலர். பௌதிகம், ரசாயனம், வைத்தியம், இலக்கியம். சமாதானம் ஆகிய துறைகளில் பிரசித்தி பெற்றவர்களுக்கு இப்பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இப்பரிசு வருடாவருடம் டிசம்பர் மாதம் 10-ந் திகதி வழங்கப்படுகிறது. காரணம் இத்திகதியில் தான் இவர் இப்பூவுலகை விட்டு மறைந்தார். இபப்ரிசு சுவீடன் தேசத்தில் உள்ள ஸ்ரொக்கோமில் வழங்கப்படுகிறது. முதலாவது நோபல் பரிசை 1901-ம் ஆண்டுகியூறி அம்மையார் பெற்ருர்.

# தெரிந்து கொள்ளுங்கள்!

குட்டித் திமிங்கிலம் பிறந்தவுடனேயே 6000 பவுண்ட் எடையும், ஒருடக்கோடா விமானத்தின் அளவு பெரியதாகவும் இருக்கும். இதன் எடை ஒரு நாளுக்கு 200 பவுண்ட் வீதம் அதிகமாகிறது. குட்டித்திமிங்கிலம் ஒருநாளுக்கு தன் தாயிடம் குடிக்கும் பாலின் அளவு சுமார் ஒரு டன்.

ஃ ஃ ஃ

செவ்வாய்க் கிரகம் 51 மில்லியன் மைல் தூரத்தில் உள்ளது. இதனையடைய 25,000 மைல்வேகத்தில் சென்ருல் மூன்று மாதங்களாகும்.

ஃ ஃ ஃ

ஒரு நட்சத்திரத்திற்கும் மற்ற நட்சத்திரத்திற்கும் இடையில் ஒரு மில்லியன் மைல் இடைவெளியுள்ளது.

ஃ ஃ ஃ

மிகப்பெரிய கிரகம் வியாழன். 400 மில்லியன் மைல் தூரத்தில் உள்ளது. இதனை அடைய 25,000 மைல் வேகத்தில் சென்ருல் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிடுமூஞ்சி'ச் சிறுமி தீட்டிய சித்திரத்தில் அவளின் மனோநிலை

'உன் அப்பா, அம்மா சகோதரிகள் ஆகியோரை ஏதேனும் பிராணிகளாகப் படம்போட்டுக் காண் பி' என்று ஒரு சிறுவனை மனோ தத்துவ நிபுணர் கேட்டார். 'அன்னம்' ஒன்றைச் சிறுவன் வரைந்தான்! இது தான் 'அம்மா' என்ருன். அப்பாவைச் சிங்கம் போலவும், இரு சகோதரிகளை நிமிர்ந்து நிற்கும் பாம்புகளாகவும் சிறுவன் படம் வரைந்து காட்டினுன். சிறிதுநேர சிந்தனைக்குப் பின்வர், தன்னையும் அங்கு சேர்த்து சித்தரித்தான். 'குட்டிப்பன்றி' யாகத் தன்னையே வரைந்து கொண்டான்.

இந்தப்படங்கள், சாதாரண மனிதர்களுக்கு விசித்திரமானதாகப் படலாம். ஆனல் இப்படங்கள் சிறுவனின் உள்ளத்தில் 'புதைந்து' கிடக்கும் ரகசியங்களை மனோதத்துவ நிபுணருக்கு உணர்த்துகின்றன. குடும்பப் பாதுகாப்பு போதுமான அளவில் சிறுவனுக்குக் கிட்டவில்லை அழகிய அம்மா, கெடுபிடியான அப்பா ஆகியோரைப்பொருத்து தாழ்வு மனப்பான்மை கொண்டிருக்கின்ற சிறுவன். சகோதரிகளை வெறுக்கிருன் என்பதே இச்சித்திரங்கள் தெரிவிக்கும் ரகசியம்! பெற்ரோர்களுடன் நிதானமாகப் பேசிப் பார்க்கும்போது உண்மை புலப்படுகிறது. கடைசிக்குழந்தைஎன்பதால் தெரிந்தோ தெரியாமலோ சிறுவனைப் பெற்ரேர்கள் சிரத்தையுடன் பராமரிக்காமல் உதாசீனப்படுத்தி வந்தார்கள். சகோதரிகளும், சிறுவனை அடிக்கடி சீண்டி வந்தனர்.

குழந்தைகளின் மனோநிலை குறித்து கடந்த 20 ஆண்டுகளாக ஜெர்மன் மனோதத்துவ பெண் நிபுணர் டாக்டர் கிராசர் ஆராய்ச்சி நடத்தி வருகிருர். ஆராய்ச்சி முடிவுகளை இப்போது தான் வெளியிட்டிருக்கிருர். 2000 குழந்தைகளிடம் தம் குடும்ப உறுப்பினர்களை பிராணிகளாக சித்திரம் தீட்டும்படி கேட்டுக்கொண் டார். 683 பாம்புகள் 682 பறவைகள், இவற்றில் இடம் பெற்றன. அடுத்ததாக முயல்கள், நாய்கள், குதிரைகள் யானைகள், மீன், பூனைகள் ஆகியவை இடம் பெற்றன. குடும்பத்தில் மிகுந்த அக்கறையுடன் செல்லமாக வளர்க்கப்படுகின்ற குழந்தைகள், தங்களை அழகிய பிராணிகளாக குறிப்பாக அன்னம், மயில், அழகிய பூனை போன்றவைகளாக சித்தரிக்கிருர்கள். குடும்பத்தில் உதாசீனப் படுத்தப்படுகிற குழந்தைகள் தங்களை புருக்கள், பன்றிகள், எலி, பூச்சி ஆகியவைகளாகச் சித்தரித்துக்கொள்கிருர்கள்.

குதிரை, நாய், பூனை போன்றவை சாதகமான சூழ்நிலையையும், பாம்பு, நத்தை, பூச்சி போன்றவை பாதகமான சூழ்நிலையையும் குறிப்பிடுகின்றன. இரண்டும் கலந்து இருந்தால் குடும்பத்தின குழப்பமான சூழ்நிலையைக் குறிக்கும். பிராணிகளின் அளவு, அதன் அமைப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டுதான், குழந்தைகளின் மனோநிலையை மதிப்பிடுகிருர்கள்.

## அம்மா அப்பாவை மிருகங்களாக வரையச் செய்த மனோதத்துவ நிபுணரின் சுவையான ஆய்வு

''சிடுமூஞ்சி''யான ஒரு சிறுமி வயது 13), மற்றவர்களுடன் நட்பு பாராட்டாமல் தனித்து இருந்தாள். அவள் தன்னை ஓர் ஆடாகவும், அப்பாவைச் சிங்கமாகவும், சகோதரனை குரங்காகவும், சகோதரியை பாம்பாகவும் சிந்தரித்தாள். ''அம்மாவை எப்படியும் வரையமுடியவில்லை'' என்று சிறுமி சொன்னுள். தன் கருத்தை வெளிப்படுத்த முடியாத அளவுக்கு இச்சிறுமி அம்மாவை அளவுக்கு மீறி நேசிக்கவேண்டும் அல்லது வெறுக்கவேண்டும் என்பதே இதன் பொருளாகும்.

# குழந்தை வளர்ப்பு

**கோபமும் பிடிவாதமும்**

தூக்கமின்மை, அஜீரணம், மார்பில்சளி, பசி, உடற் சோர்வு போன்றவற்ருல் குழந்தை பாதிக்கப்பட்டிருந்தால் அதனிடம் கோபமும் பிடிவாதமும் அதிகமாகக் காணப்படும்.

0

**சளி பிடிப்பது ஏன்?**

குழந்தைகளுக்கு அடிக்கடி சளி பிடிப்பதற்குக் காரணம் வைட்டமின் 'ஏ' பற்ருக்குறையாகும். எப்போதும் சட்டை போட்டு உடலை மூடிவைக்காமல் உடலில் நன்ருக சூரிய வெளிச்சமும் காற்றும் படும்படி இருக்க வேண்டும்.

0

**அதிக வெளிச்சம்**

குழந்தை பிறந்து இரண்டு மாதங்கள்வரை பிரகாசமான வெளிச்சம் உள்ள இடத்தில் படுக்க வைக்கக் கூடாது. ஏனெனில் அப்போது கண்களுக்கு வெளிச்சத்தைக் கிரகிக்கும் சக்தி ஏற்படுவது இல்லை.

0

**ஆரோக்கியப் பாதுகாப்பு**

குழந்தைகளுக்கு உடையுடுத்துவது அவர்களுடைய ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவேயாகும் ஆடம்பரத்துக்கல்ல. மெல்லிய துணிகள்தான் ஏற்றவை. இறுகமானதாக உடைகள் இருக்கக் கூடாது. மூன்று வயது வரை வெள்ளை நிற ஆடைகளே சிறந்தவை. பருத்தி ஆடைதான் நல்லது.

சரோ சங்கர்

# நீண்டநாள் வாழ உப்பை குறையுங்கள்

உப்பு உயிரையே சரப்பிடும் என்பதை இப்போது ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்துள்ளார்கள். உப்பு ருசியைத் தருகிறது என்பதைத்தவிர, வேறு எந்தஉபயோகத்தையும் தருவதில்லை. உப்பைக் குறைத்துக்கொண்டால் நீண்டநாள் வாழலாம்.

அலெக்ஸாண்ட் ஜி னெட்ஸின்ஸ்கி என்பவர் இப்போது ரஷ்யாவில் இருக்கும் பெரிய டாக்டர்களில் ஒருவர். இரத்த அழுத்த நோய்க்கு இந்த உப்புத்தான் மூலகாரணமென்பதை இவர் கண்டுபிடித்துள்ளார். மிகமிகக் குறைவாக உப்பைச் சேர்த்துக்கொள்பவர்கள்இரத்தஅழுத்த நோயால் பாதிக்கப்படுவது மிகமிகக் குறைவாகும். உப்பை அதிகம் சேர்த்துக்கொள்பவர்கள்இரத்த அழுத்தநோயால் பாதிக்கப்படுகின்றனர். ஆகையால் உப்பைக் குறைத்துக்கொள்வது என்பது ஓர் உபயோகமான காரியம்.

# குடும்பச் சுடர்

தயாரிப்பு: குணம்

## நாட்டின் வாழ்க்கையிலும் குடும்பவாழ்க்கையிலும் ரஷ்யமாதரின் பங்கு

தாயின் பாசம் பிரவாகிக்கும் கண்கள், திருட்டுச் சேஷ்டை வடியும் சிரிக்கும் குழந்தையின் கண்கள். இது தான் தாய்மை. சேய்க்கு தாய் காட்டும் அன்பும் பாசமும் சிரஞ்சீவித்துவம் வாய்ந்தது. இது நிரந்தரமான சௌந்தர்யம் வாய்ந்தது. சாசுவதமானது. ஆழமானது,

எங்கே சமுதாய அமைப்பு முன்னேற்றமானதாக எங்கேராஜ்ய கட்டுக்கோப்பு உன்னதமானதாக உயர்கிறதோ, அங்கே எல்லாம் சேய்மீதும் தாய்மீதும் காட்டும் கரிசனை பெருகும். ஆகவேதான் ருஷ்யாவில் ஆட்சிபலத்தைக் கைப்பற்றிய ஐந்தாம் தினத்திலேயே உலகின் முதல் சோஷலிஸ ராஜ்யம் தாய் – சேய் பாதுகாப்பு ஆணையைப் பிரகடனம் செய்தது.

...பிரசவ இல்லத்து வார்ட்டில் நாம் நால்வர் இருந்தோம். ஒருவர் செகண்டரிப் பள்ளி ஆசிரியை. ஒருவர் மரக்கறி சாப்புச் சிப்பந்தி. ஒருவர்மாஸ்கோ கந்தோரொன்றில் வேலைசெய்யும் காரியதரிசி. மற்றவர் ஒரு பத்திரிகையாளர். உண்மையைச் சொல்வதாயிருந்தால் அன்று நாம் சற்று மனச்சோர்வுற்றிருந்தோம். எம்முடைய இரத்த அமுக்கம் இத்தியாதிகள் பற்றி தமாஷ் பண்ணிக்கொண்டிருந்தோம். குழந்தை எப்போது பிரசவிக்கும் என்று காத்துக்கொண்டிருந்த தந்தையர்களே இவர்கள். துடியாய்த் துடித்துக் கொண்டிருந்த இவர்களைப் பார்த்து வயதுமுதிர்ந்த தாதியொருவர் கூறினர். 'வயல்வெளிகளில் உங்கள் பாட்டிமார்கள் எப்படிக் குழந்தைகளைப் பெற்றெடுத்தனர்' இது எமக்குப் பழைய கதை. நாம் கேட்டறிந்த செய்தி. தொழிலாளர் விவசாயி தாய்மார்களுக்கு 1917 புரட்சிக்கு முன்னர் எவ்வித பேறுகால வசதிகளும் இருந்ததில்லை. பேறுகாலத்திலும் நிலச்சுவான்தாருடைய தோட்டத்தில் தாய்மார்கள் வேலை செய்துகொண்டிருப்பது அன்று சர்வசாதாரணம்.

### —அதா பஸ்கின—

இன்ரே பிரசவத்தக்குப் பின்னர் முழு சம்பளத்துடன் தாய்மாருக்கு 112 நாள் விடுமுறை கிடைக்கிறது. இதில் மற்றும் லீவுகள் அடங்காது. பொதுவாக எம்நாட்டிலே குழந்தை பெறவிருக்கும் தாய்மார் பேறுகால லீவையும் வருடாந்த லீவையும் ஒன்ருக எடுக்கிருர்கள்.

அது மாத்திரமா? குழந்தை கிடைக்கவிருக்கிறதென்பதை அறிந்ததும் மருத்துவக் கவனிப்பும் தாய்மாருக்கு வழங்கப்படுகிறது. சில வேளைகளில் இக்கவனிப்பு பெரும் தொந்தரவாக இருக்கிறது. பிறந்த குழந்தைகளைக் கவனிப்பது பற்றிய ஆலோசனைகள் வழங்க தாதிமார் இல்லங்களைத் தரிசிக்கின்றனர். ஸ்தல—சிசு கவனிப்பு நிலையங்களிலிருந்து இல்லங்களைச் சேர்ந்த டாக்டர்கள் தரிசித்து வைத்தியம் செய்வது மாத்திரமல்ல, ஸ்தல ஆகார நிலையங்கள் குழந்தைகளுக்குப் போஷாக்கு நிறைந்த உணவுகளையும் விநியோகிக்கின்றன. இவையாவும் இலவசமாகவே கிடைக்கின்றன. இவ்வுதவிகள் கோராமலே வழங்கப்படுகின்றன.

பிரசவ லீவுக்குப்பின்னர் சிலர் மூன்று மாதத்தில் வேலைக்குத் திரும்புகின்றனர். மற்றும்சிலர் இல்ல ஜோலிகளைக் கவனித்துக் கொண்டு ஒருவருஷ காலம் வீட்டிலேயே தங்கிவிடுகின்றனர். ஆனல் அவர்களுடைய தொழில்கள் அப்படியே காலியாக வைக்கப்படுகின்றன. இதைச் சட்டம் உத்தரவாதம் செய்கிறது.

இன்று சோவியத் யூனியனின் 90 லட்சம் குழந்தைகளில் 100,000குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களுக்கும் பாலர் பாடசாலைகளுக்கும் செல்கின்றனர்.

ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் தரும் தகவலின்படி பள்ளி செல்லும் பருவமடைந்த 37.3 கோடி குழந்தைகளில் 11.5 கோடி பேர் மாத்திரமே உண்மையில் பள்ளிக்கூடம் செல்கின்றனர்.

சோவியத்நாட்டிலே செக்கண்டரிக் கல்வி விசேஷ தன்மைகளைப் பெற்றதாய் உள்ளது. விரிவான கல்வியை வழங்குவதுடன், பள்ளிப்பருவக் குழந்தைகளுக்கு பன்முக பயிற்சியையும் அது தருகிறது. நாட்டில் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு

(14-ம் பக்கம் பார்க்க)

## அழகு

அழகு என்பது ஒரு பொருள் அன்று. அது வெளித் தோற்றமே. அதற்கு இலக்கணங்கள் கூறஇயலாது.

—ஈ. வெ. ரா. பெரியார்.

0

அழகுக்குத் தொலைவு தான் ஆயுதம்.

—சி. என். அண்ணுதுரை

0

அழகுதான் உண்மை. உண்மைதான் அழகு.

—கீட்ஸ்.

உண்மையிலும், உண்மையின் மூலமாகவும் நான் அழகைக் காண்கிறேன்.

தாகூர்.

0


அழகு வழக்காடும்போது எல்லா பிரசங்கிகளும் ஊமையாகிவிடுகின்றனர்.

—ஷேக்ஸ்பியர்


**Modern Scientific School of Tailoring**

**நவீன தையற் கலாசாலை**

வெளிநாட்டில் பயிற்சி பெற்ற பிரபல தையற் கலை நிபுணர்களால் ஆண்களுக்கும், பெண்களுக்குமான எல்லா உடைகளையும் விஞ்ஞான முறையில் வெட்டுவதற்கும் தைப்பதற்கும் சிறந்த விளக்கப் படங்களுடன் தபால் மூலம் போதிக்கப்படுகிறது. கொழும்பில் இயங்கிக்கொண்டிருக்கும் இத்தையற் கலாசாலை இப்பொழுது யாழ் நகரில் இதன் கிளைக் காரியாலயத்தை ஆரம்பித்துள்ளது. ஏழு மாதங்களில நீங்களுமொரு சிறந்த தையற்கலை நிபுணராகி, 'டிப்ளோமா' பத்திரத்தையும் பெறலாம்.




விபரங்களுக்கு நேரில் விண்ணப்பியுங்கள் அல்லது எமக்கு எழுதுங்கள்.

இக்கலாசாலை அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பெற்றது.

மனேஜர்: M. S. T.
95/3, Stanley Road,
JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்மகனை - மகனின் வாழ்வைக் காணத்துடிக்கும் தாயன்பு அங்கே. பெற்றவளையே மறந்துவிட்டுப் பெண்ணொருத்தியைப் போற்றி வணங்கும் பேதைமனம் இங்கே.

இதுதான் 'பெற்றமனம் பித்து, பிள்ளைமனம் கல்லு' என்பதோ?

எத்தனை அழகுகளைக் காணுகிறோம்! அனுபவிக்கிறோம், பிரிந்து வந்துவிடுகிறோம்.

பெண்ணின் அழகில் ஈடுபடுகிறார்கள்; பிரியமுடியாது தவிக்கிறார்கள். அங்கேயே தங்கிவிடுகிறார்கள். இது ஏன்?

பூமிக்கு இயற்கை அழகுண்டு. அதனுலா நாம் பூமியைவிட்டுப் பிரியாது இருக்கிறோம். இல்லை அதன் மையக்கவர்ச்சி நம்மைப் பிரியவிடுகிறதில்லை.

பூமியிடம் உள்ள அந்த ஈர்ப்பு பெண்ணிடமும்இருக்கத்தான்வேண்டும். இல்லாவிட்டால் பெற்று வளர்த்ததை மறந்துவிட்டு நேற்றுவந்த ... பிடாரியிடம் இந்தமாதிரி மண்டிக் கிடப்பார்களா?

ஷீலாவின் கடைக்கண் பார்வை ஒன்று போதுமே என்று கிடக்கும் கைலாசம், தலைநிமிர்ந்து நடக்க முடியாத கேவல நிலைக்குள்ளானன்.

இனிமேல் மகன் வருவான் என்று நம்புவதிற் பயனில்லை என முடிவுகட்டிய தாய், சேர்த்துவைத்த பணத்துடன், ஏருவூர்ப் பெரியவரின் துணையுடனே மட்டக்களப்பு நோக்கிப் பயணமானுள்.

சும்மாவா புறப்பட்டாள். மகனின்தரம் மோசமானுலும் 'அரியதரம்' தேடினுள். முறுக்குத் தேடினுள். சிட்டைபோடக் கதைநீளும். பல, பலகாரங்கள் வரிசை ஏந்திக்கொண்டுதான் புறப்பட்டாள்.

தூரத்தே நின்று பெரியவர் காட்டிய குறிப்பின்படி போய்ச்சேர்ந்தாள். 'அப்பாடா! இந்தவீட்டுக்கு உரியவனுகவா எனது மகன் இருக்கிறுன். சிலவேளை வீடுமாறி வந்துவிட்டேனே' என்றெண்ணினுள்.

வீட்டில் வெளித் தூணில் தனது மகனின்பெயர் இருக்கவே மனதிற் கொப்புளித்து வந்த ஆவலையும் ஏந்தி உள்ளே போனுள். ஒரே நிசப்தம்.

தாயும் மகனும் ஒருவரை ஒருவர் கண்டுகொண்டார்கள். ஆனல் முற்றிலும் எதிர்பாராத சந்தர்ப்பத்திற் கண்டதும் வாயடைத்து நின்றுன். தாயும் அதேநிலையில் நிற்கவா வந்தாள்.

'ஏன் தம்பி எல்லாம் கேள்விப்பட்டேன், ஏன் எனக்கு எழுதியிருந்தால் நானென்ன மறுத்திருக்கப்போகிறேனு? புத்தியில்லாத பிள்ளை' என்று அடுக்கிக்கொண்டே வந்ததை அவிழ்த்து வைத்தாள்.

''அம்மா என் வாழ்வு சந்தோஷமாக இருப்பதைத்தானே விரும்புவீர்கள்- மகன் கேட்டான்.

''போடா மடைப்பயலே என்ன கேள்வி கேட்கிருய் நீ சந்தோசப்படவேண்டும் என்றுதானே கவலையைநான் தாங்கி வளர்த்தேன்'' என்றுள் தாய்,

''பழைய குப்பைகளைக் கிளறிப் புண்ணியமில்லை''- மகன்.

''என்னடாசொல்கிருய்''- தாய்.

''சொல்ல என்ன இருக்கிறது. நான் யாருமற்ற அனதை என்று சொல்லித் திருமணம் செய்துகொண்டேன். நீதான் எனது தாயென்று என் மனைவி— ஷீலா அறிந்தால் என்னையும் வெளியே விரட்டிவிடுவாள். ஆனபடியால்...''

''ஆனபடியால்...?'' தாய் அவனை உருட்டிவிழிக்கப் பார்த்துக் கேட்டாள்.

''என்றைக்குமே இங்கே வரவேண்டாம். அவள் இப்போது வீட்டுக்கு வரும்நேரமாகிறது முடியுமானுல் என்னையே மறந்துவிடவேண்டும்.''

''முடியக்கூடிய காரியமா இது தம்பி''

''முடியுமோ முடியாதோ என் நிலைமையை மாற்ற முடியாது.''

''போகச் சொல்கிருயா கைலாசம்'' பொருமி, விக்கி வெடித்தாள் தாய்.

அவன் அறையை நோக்கி உள்ளே போனபடி ''நான் சொல்லித்தான் செய்யவேண்டும் என்றிருக்காதே. கொண்டுவந்த குப்பைகளையும் கொண்டுபோய்விடு'' அயோக்கியத்தின் பிரதிநிதி, அரைவேக்காட்டு நாகரிக வாரிசு, துரோகத்தின் துள்ளுமறி வாயிலிருந்து வந்த வார்த்தைகள் இவை.

நெஞ்சம் சிதறிவிட்ட தாய்த்தெய்வம் கால்போன வழி போனுள். சிறிதுதூரம் சென்றபின் சிந்தைகலங்கி உணர்விழந்து நிலத்தில் வீழ்ந்தாள்.

கைலாசம் அங்கேபரப்பப்பட்ட பண்டங்களை எடுத்துக் குப்பைத்தொட்டியிற்போட்டான். அவற்றின் அருகே கிடந்த உறையைப் பிரித்தான். இரண்டாயிரம்ரூபாய் நோட்டுக்கள் கிடந்தன. அவற்றைமறைத்துக்கொண்டான்.

வழியிற் கிடந்த காமாட்சியை ஊரவர் ஆஸ்பத்திரியிற் சேர்த்துவிட்டார்கள் இரண்டாம்நாள் எதையோ இழக்கமுடியாத, இழக்க வேண்டாத ஒன்றை இழந்துவிட்ட ஏக்கம் முகத்திற் பிரதிபலிக்க வெளிவிருந்தையில் வந்தமர்ந்தவளுக்கு சற்றுத் தள்ளிநின்ற இருவரது கலந்துரையாடல் நெஞ்சைத் திடுக்கிடவைத்தது.

ஆஸ்பத்திரியைவிட்டே புறப்பட்டாள்.

கைலாசமும் ஷீலாவும் இரவு எட்டுமணியளவில் கூடத்தில் இருந்து ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். இளம் உள்ளங்கள் என்ன பேசியிருப்பார்கள் என்ற கதையேன் நமக்கு. அவர்களுக்கும் ஆயிரம் இருக்கும்.

இரண்டு உருவங்கள் இருட்டில் மெதுவாக நடந்து வந்தன. பதுங்கிப் பதுங்கி யன்னலைக் கிட்டிவிட்டன. காதற் பெருவெளியிற் கீதம் பாடும் சிட்டும் பெடையுமாக இருந்த இளம் உள்ளங்களுக்கு இரண்டாவது நினைப்பேது?

யன்னல் ஓரமாக நின்ற ஒருவர் துவக்கை நீட்டிக் குறிபார்த்தார். திடீரெனத் தோன்றிய ஓர் உருவம் துவக்கைப் பிடித்தது. சடார், படார் என்ற சத்தங்களும் தொடர்ந்து வெடிதீர்ந்த சத்தமும் அதைத் தொடர்ந்து ஐயோ என்ற அலறலும் மின்னிமறையுமுன் நடந்தன.

அதிர்ந்துபோன கைலாசமும் ஷீலாவும் ஓடிவந்தார்கள். குண்டுபட்டுத் துடிக்கும் காமாட்சி கீழே கிடக்கக் கண்டான் மகன். அதே நேரத்தில் இரண்டு உருவங்கள் மதிலேறிக் குதிப்பதையும் அவர்கள் அவதானிக்கத் தவறவில்லை

''அம்மா எப்படி இங்கே வந்தீர்கள், என்னம்மா நடந்தது, யார் அவர்கள்? ஐயோ தாயே'' என்று அழுதழுது ஷீலாவின் உதவியுடன் தூக்கிவந்து தாயைக் காரில் ஏற்றினுன். எல்லாம் ஒரே குழப்பமாக ஷீலாவுக்குத் தென்பட்டாலும் ஏதோ யந்திர ரீதியில் ஒத்துழைத்தாள். கார் ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தது,

''தம்பி, ஆஸ்பத்திரிக்குப் போய்ப் புண்ணியமில்லை. இங்கே வருவதற்கு முன்பும் ஆஸ்பத்திரியிற்தான் இருந்தேன். அங்கே இரண்டுபேர் பேசிய பேச்சு என்னை உலுப்பிவிட்டது. யாரோ யோசப், செல்வராஜ் என்ற இரண்டு பேராம்-கதையிற் புரிந்தது அவர்கள் பேசியதில் இருந்து கிரகித்தது, யோசப், ஷீலாவை நேசித்தானும். இடையிற் புகுந்த உன்னை இன்றிரவு......

வார்த்தையை முடிக்குமுன் வாயை மூடினுள். கண் திறந்தபடி ஆவி ஒடுங்கினுள்

அதற்குப்பிறகுதான் கைலாசத்துக்குக் கண்திறந்தது. பலபல நடந்தது. ஒன்றைமட்டும் சொல்லாமல் விடக்கூடாது.

''ஒன்றையும் விடாமற் சொல்லு கணேசு''- நான் கேட்டேன்.

கணேசு தொடர்ந்து,

'அவன் தாயின் நினைவாகக் கட்டிய பூசை அறைதான் இது. உள்ளே இருக்கும் படத்தில் தெரிவது அவனுடையதாய். அந்த அபாக்கியசாலியான துரோகி நானேதான்' என்றுன். இரண்டு சொட்டுக் கண்ணீர் துளிகள்நிலத்தில் விழுந்தன.

''அப்போ, இதையெல்லாம் கைலாசம் செய்தானென்றீரே. நீங்கள்தான் கணேசுவாயிற்றே''

''பெயர் முன்னுடியே தெரிந்து விட்டால்......''

''ஆமாம்தெரியக்கூடாது' என்று சொல்லிவிட்டுத் துண்டையும் உதறிப்போட்டுக்கொண்டு வெளியேறிவிட்டான்.

(யாவும் கற்பனை)

# நம்பிக்கை..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவானது, மக்கள் நோய்குணமடைய 'லூர்ட்ஸ் பிரான்ஸ்' ஸுக்குச்செல்கிறுர்கள் அங்கே அவர்கள் பலதேசத்து டாக்டர்களுக்கும் மனுச் செய்கிறுர்கள் அந்த டாக்டர்களின் கடமை என்னவெனில், மனுச்செய்தவர்களின் நோயைப் பதிவுசெய்தலும் பின்னர் அந்த இடத்துக்கு சென்றதனல் ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதுமாகும். புற்றுநோய் போன்ற அதிகமான நோய்கள் குணப்படுத்தப்பட்டுள்ளன

சில சந்தர்ப்பங்களில்இந்த அற்புதங்கள்தோல்வியடைந்திருக்கலாம். கடவுள் நம்பிக்கை வழிமுறை மனித அறிவுக்கு எட்டாத ஒன்று. சிலபல காரணங்களுக்காக குறிப்பிட்ட சிலமக்கள் அந்த நோயிலிருந்து நிவாரணம் பெறமுடியாமல், குறிப்பிட்ட வாழ்க்கை அந்த வகையிலேயே முடியவேண்டும் என்பதை இறைவன் நியமிக்கிறுர். இதற்குரிய காரணத்தை - இறைவன் திருவிளையாடலை எம்மால் புரிந்துசொள்ள முடிவதில்லை.

## பீஷ்மர்

பீஷ்மர், காயங்களோடு அம்புகள் அடுக்கிய படுக்கையில் கிடக்கிறுர். நிலையற்ற உடம்பிலிருந்து நிலையான ஆறுதல் பெறுவதற்காக அந்தநேரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறுர். அப்போது பாண்டவர் சகோதரர்களும், சிருஷ்ண பரமாத்மாவும் அவரைக் காணச்சென்றுர்கள். பீஷ்மருடைய கண்களில் கண்ணீர் துளிர்த்திருப்பதை நோக்கினுர்கள். அர்ச்சுனனுக்கு ஆத்திரமாக இருந்தது. வயதுபோன நேரத்தில் இறப்பு இயற்கையானதென்பதை உணராமல் இறப்பதற்கு பீஷ்மர் பயப்படுகிறுரே என்று நினைத்தான். பீஷ்மர் அர்ச்சுனனுடைய உள்ளத்தில் தோன்றிய எண்ணத்தை உணர்ந்துகொண்டு அவர் கிருஷ்ண பரமாத்மாவைப் பார்த்துச் சொன்னுர், ''என்னுடைய சாவைநினைத்து நான் கண்ணீர் விடவில்லை, என்னுடைய சாவுக்கு நான் பயப்படவுமில்லை. ஆனல், தாங்கள் தெய்வம்; உலகத்தை ஆக்கவும் அழிக்கவும் தங்களால் முடிகிறது. முடிவற்ற சக்தி தங்களிடம் உண்டு. இப்படிப்பட்ட வல்லமைபடைத்த தங்களோடு எந்தச் சந்தர்ப்பத்திலும், கூட்டாக பாண்டவர்கள் இருக்கிறுர்கள். அப்படியிருந்தும். தங்களை நண்பராசக் கொண்டும் அவர்கள் எந்த நேரமும்-முடிவில்லாமல் கஷ்டத்தையே அனுபவித்தக் கொண்டிருக்கிறுர்கள். தங்களுடைய மாயத்தை என்னல் அறிந்துகொள்ளமுடியவில்லை கண்ணு!'' என்றுர் பீஷ்மர்.

கிருஷ்ணபரமாத்மாவின் மாயசக்தியை பீஷ்மரால் கண்டுகொள்ள முடியவில்லை என்றுல் பீஷ்மரிலும் எவ்வளவோ அறிவுகுறைந்த எம்மால் எவ்வாறு கண்ணபிரானின் திருவிளையாடலை அறியமுடியும். எம்மை பீஷ்மரோடு ஒப்புநோக்கும் போது நாம் வெறும் எறும்புக்கு நிகராவோம்.

முக்கியமானது என்னவென்றுல் கபடமற்ற-உண்மையான நம்பிக்கையோடு. அந்த நம்பிக்கையிலும் சந்தேகத்தின் நிழல்படியாமல் உள்ளன்போடு இறைவனை வேண்டினுல் உன்னுடைய கஷ்டங்கள் ஒழியும்.

நான் செல்வத்தைச்சேர்க்கிறேன், நான் அதைச் செய்கிறேன், இதைச்செய்கிறேன் என்றெல்லாம் மனிதன் தன்னுடைய அகந்தையினுல் எண்ணுகிறுன்.

## டாக்டரின் அனுபவம்

கடந்த 31 வருடங்களாக நான் வைத்தியத்துறையில் கடமையாற்றிஇருக்கிறேன். ஆஸ்பத்திரியினும் வெளியிலுமாக பல ஆயிரக்கணக்கான அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டுள்ளன. ஏழை, பணக்காரர், குழந்தைகள், பெரியவர்கள் என்று பல தரப்பட்ட மக்களையும் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது ஒருமுறை சீரிய குணங்களையுடைய ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. நோய்வாய்ப்பட்டிருந்தார். விஞ்ஞான ரீதியானசகலவிதமானஆராய்ச்சிகளும் செய்துபார்த்தாகிவிட்டது. ஆனல் நோய் குணமாகவில்லை. கடைசி ''அப்பீல் கோர்ட்''டான திருத்தணிக்குச்சென்று முருகனுக்கு வழிபாடுசெய்துவிட்டுத் திருப்பிவந்தார். வழிபாட்டின்பின் அவருடைய நோய்க்குத் தீர்வு காணமுடிந்ததோடு அந்நோய் முற்றுகநீங்கிவிட்டது

கடவுள் இல்லை என்று பரிகாசம் பண்ணுவது -மிகச் சுலபம். ''அமெரிக்காவிலிருந்து ஒருவர் பாடினுல் இந்தியாவிலிருந்து கேடகலாம் அல்லது இந்தியாவிலிருந்து ஒருவர் பேசினுல் அமெரிக்காவிலிருந்து கேட்கலாம்'' என்று நூறு வருடங்களுக்கு முன்னர் நாம் கூறியிருந்தால் எம்மைமடையர் என்று பரிகசித்திருப்பார்கள். ஆனல் இன்று றேடியோ மூலம் நாம் இதை உணரமுடிகிறது. காற்றிலுள்ள அலை ஒலிகளை நாம் வசிக்கும் அறையில் நிரூபித்துக் காட்டு என்று ஒருவர் கேட்டால் அப்படி நிரூபித்துக் காட்டுவது சாத்தியமாகாது. பொருத்தமாக யேடியோவைஅலைஒலிகளைப் பிடிப்பது சாத்தியமாகும். ஒரு சின்ன ரான்சிஸ்டர் றேடியோவாகவிருந்தால் கிட்டவாகவுள்ள ஒலி அலைகளை இழுக்கும். ஆனல் அதிக சக்திவாய்ந்த றேடியோ என்றுல் அலை ஒலிகளை மிகத் தூர நிலையங்களிலிருந்தும் இழுக்கமுடியும். இவை றேடியோக்களின் சக்திக்கேற்ப இயங்குகின்றன. எதுவித பாரபட்சமுமில்லாமல் ஒலிபரப்புகள் இருக்கின்றன. ஆனல் ஒலி அலைகளை வாங்கும் சக்தியில்தான் இந்த வித்தியாசம் ஏற்படுகிறது.

இதுபோலவே, குற்றம் எம்மிடத்தில்தான் உண்டு. ஒருவர் பக்குவநிலையைஎய்திவிட்டால் ஆண்டவனுடைய திருவருட்காட்சியோடுமற்றவர்களால் பெறமுடியாதனவற்றை இறைவனிடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடிகிறது. இதுவே ''பக்குவ ஆன்மா'' என்று கூறப்படுவது இந்தப்பக்குவ ஆன்மாவுக்குக்கூட ஓர்எல்லையுண்டு. இவர்கள்கூட எல்லாநோய்களையும் காப்பாற்றமுடியாது.

(தொடரும்)

# தினையத்தனை இன்பம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ளைக் கடதாசி இல்லாமல் கறுப்புக்கடதாசியால் சிகரெட் சுற்றப்பட்டால் அதை இவர்கள் புகைப்பார்களோ என்பது சந்தேகம்!

மனேதத்துவ ரீதியாகவும் சிலர் புகைக்கும் வழக்கத்திற்கு காரணம் கூறுகிறுர்கள். 'தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ற பழமொழியின் அடிப்படையில் தான் இந்த நியாயம் கூறப்படுகிறது. பிறந்த உடனே சிசுவின் வாயகள் தன்னையறியாமல் தாயின் முலைகளை நாடுகின்றன. தாய்ப்பால் மறந்ததும் ரப்பர் சூப்பி எந் நேரமும் வாய்க்குள் இருக்கும். இந்தப் பழக்கத்தை மறைப்பித்தால் கைப்பெருவிரல் வாய்க்குள் போகும். இதுவும் மறந்த பின்பு ஐஸ்பழம் சூப்பும் பருவம் வரும். அதற்கப்புறம் சிகரெட், பீடி, சுருட்டு என்று கடைசியில் கட்டையில் ஏறும்வரை ஒரு பழம் சுங்கானுவது முரசு இடுக்குக்குள் எப்போதும் இருக்கும். வாய்க்குள் ஏதாவதொன்றை வைத்துக் கொண்டிருக்கும் தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் போகிறதாம்!

உண்மையில் புகைப்பதால் ஒருவருக்கு எந்தவிதமான நன்மையோ ஆனந்தமோ இருப்பதில்லை. இதைச் சோதிக்கவேண்டுமானுல் ஒருநாள் முழுவதும் புகைக்காமல் விட்டுவிட்டு அடுத்த நாள் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து இழுத்துப் பாருங்கள். இரண்டு இழுவைக்குப்பின் கண்கள் கலங்கும், தலைசுற்றும், கைகால்நடுங்கும், மயக்கம்உண்டாகும். முதல் முதல் சிகரெட் புகையை இழுக்கும் ஒருவரை அவதானித்துப்பாருங்கள். அவர் படும்பாடு.

புகைப்பதால் எந்தவிதமான இன்பமும் இல்லாவிட்டாலும் புகைக்கவேண்டுமே என்ற அசட்டு எண்ணத்தால் வில்லங்கமாகப் புகைத்துப் புகைத்து பழக்கப்பட்டவர்கள் அந்தப் பாதையைவிட்டுத் திரும்புவது கடினம்தான். ஆயினும் அது முடியாத காரியமல்ல. 'சங்கிலிப் புகையர்கள்' பலர் மனத்தை திடப்படுத்தி இந்தத் தீய வழக்கத்திலிருந்து தங்களை மீட்டுக்கொண்டிருக்கிறுர்கள்.

நினைத்தால் நீங்களும்இந்த ராட்சதனின் பிடியிலிருந்து விடுபடலாம். அதற்கு சிலபல சுலபமான, சூக்குமமான வழிவகைகள் இருக்கின்றன. அவற்றை ஒழுங்காகக் கடைப்பிடித்தால் புகைப் பிசாசை விரட்டியடிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலின் அருமை!

**['வெள்ளி மல்லிகை' என்ற புதிய அம்சம் இவ்வார முதல் ஆரம்பமாகிறது. இதைக் கோர்த்துத்தருபவர் பழம்பெரும் எழுத்தாளர் திரு. அ. செ. முருகானந்தன். சென்ற சில வருடங்களாக புனைபெயர்களிலேயே ஒழிந்துகொண்டிருந்த அவர் சொந்தப் பெயரிலேயே எழுதத் தொடங்குகிறார். வாசகர்களுக்கு இனி நல்விருந்து கிடைக்கலாம்.]**

எத்தனை புத்தகங்கள் இதில் ஒன்றைக்கூட மனிதன் தின்னமல் விட்டிருக்கிறானே என்று புத்தகப்புழு ஆச்சரியப்பட்டதாம். காகிதத்தின்சுவை அதற்குத் தெரியும். மனிதர்களுக்குத் தெரியுமா? புத்தகங்கள்வாழ்க்கைக்கு வழிகாட்டுவதால் அதனைச் சிறந்த நண்பர்கள் எனப் பலரும் கூறுவார்கள். புத்தகங்கள் வைத்திருப்பவர்களுக்கு நண்பர்கள் சேருவார்கள். பின் புத்தகப்பீரோ காலியாகிவிடும். 'என்னிடம் சொந்தமாக ஆயிரம் நூல்கள் இருந்தன. ஒரு சமயம் சிலகாலத்தின் பின் புத்தக அலமாரியைத் திறந்து ஒரு கண்ணோட்டம் விட்டேன். என் சொந்தப் புத்தகங்கள் ஒன்றையும் காணவில்லை அவற்றிற்குப் பதில் அலமாரியில் நிறைந்

**அ. செ. மு.**

திருந்ததெல்லாம் இரவல் புத்தகங்கள்' என்கிறார் ஓர் அனுபவஸ்தர். ஆதலால் புத்தகங்கள் இரவல் கொடுக்கும் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நல்ல நூல்களை குறிப்பாகக் கருத்துள்ள கதை, இலக்கிய நூல்களை வாசித்துமகிழும்போதுநம்மைப்போல பிற ரசிகர்களும் வாசித்து மகிழவேண்டும் என்றுமனம் எண்ணுவது இயல்பு. அப்படி எல்லோரும்எண்ணத் தொடங்கிவிடும்போது... புத்தகம் உரியவன் கைக்குத் திரும்பவும் கிட்டாமலே வெகுதூரம் சுற்றுயாத்திரை போய்விடுகிறது. அத்துடன் இதுமாதிரி இலவச படிப்பை புத்தக வியாபாரி நிச்சயம் ஆதரிக்கமாட்டான்.

## தினுசுகள் பல

வழியிலும் தெருவிலும் நாம் சந்திக்கும் எத்தனையோ மனிதர்களைப் போல புத்தகங்களிலும் பல தினுசு: ஒவ்வொன்றும் ஒவ்வொன்று சொல்லும்; நாம் அவற்றையெல்லாம் அவசியம் ஒப்புக்கொள்ளவேண்டும் என்றில்லைத்தான். ஆனல் எல்லாப் புத்தகங்களும் ஒருமுகமாக நம்மை ஒரே இடத்தில் இருத்திவைத்து விடுகின்றன அல்லவா? அதனல் அவை நமது உற்ற நண்பர்கள் ஆகின்றன. அதை ஒப்புக் கொள்ளுங்கள்.

சிறைச்சாலைக் கைதிகளிடம் கேட்கவேண்டும். புத்தகங்களின் அருமையை. பள்ளிக்கூடம் போய் நாலெழுத்துச் சிரமப்பட்டுக் கற்றுக்கொள்ள முடியாமற்போன துர்ப்பாக்கியத்தைச் சிறைக்கைதிகளே மற்றவர்களைக்காட்டிலும் அதிகமாக நினைத்துப்பார்த்து வருத்தப்படும் நிலைமை ஏற்படுகிறது படிக்க எழுதத் தெரிந்தவர்களையோ சிறைச்சாலைப் புத்தகசாலை பின்னுளில் புகழ்பெற்ற எழுத்தாளர்களாகவும் ஞானிகளாகவும் ஆக்கியிருக்கிறது: சிறைவாசத்தினல் புதுவாழ்வு பெற்றவர்கள் பலர்.

இங்கே ஒரு கைதி சில ஆண்டுகளுக்குமுன் பத்திரிகைக்கு எழுதிய சிறை அனுபவத்தில் ஒரு பகுதியைத் தெரிந்தெடுத்துத் தருகிறேன். தொழிலின் அருமையை வாழ்வின் அருமையைச் சிறைவாசத்தில் அவர் எப்படி உணரத் தொடங்கியிருக்கிறார், பாருங்கள்—நிழலின் அருமை வெய்யிலில் நின்றறிதல்போல.

## அந்தச்சுவர்

சிறைக்கைதிகள் ஒவ்வொருவரும் சிறைச்சாலையில் எவ்வாறு நடந்துகொள்கின்றனர். எப்படிப் பழகுகின்றனர். அவர்களுடைய நடவடிக்கை எப்படியிருக்கின்றது. அவர்கள் எத்தகைய நிலையில் உள்ளனர் என்றமுழு விபரங்களும் எந்தநேரமும் சிறைச்சாலையில் கண் காணித்து வரப்படும்.

இருபத்தைந்து ஏக்கர் விஸ்தீரணமுள்ள பரந்த நிலப்பரப்பில் உள்ளது அந்தச் சிறைச்சாலை. அதைச் சுற்றிவர மிக உயர்ந்த சுவர் அமைக்கப்பட்டிருக்கின்றது. நாங்கள் வாழ்ந்த உலகம் இதுதான் அந்த உலகத்தில் உள்ள மரங்கள் கொடிகள் செடிகள் கட்டிடங்கள் இவற்றையே மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு அவை திரைப்படமாக உள்ளத்தில் பதிந்து விடுகின்றனவெனில் வியப்பில்லையல்லவா? சிறைச்சாலை வாழ்வில் நாட்கள் செல்லச்செல்ல அடைபட்டிருக்கும் இடத்தில் இருக்கமுடியாத ஒரு மயக்கநிலை. — ஒரு வகை வியாதி (Claustrophobia) ஏற்படுகின்றது. எங்கள்உலகமான சிறைச்சாலையைச் சுற்றிவர நாங்கள் தங்கும் கட்டிடத்திற்கு மிகத்தூரத்தே அமைக்கப்பட்டுள்ள நெடிதுயர்ந்த மதிற்சுவர்கள் எங்களைநோக்கி மிக நெருங்கிவருவதுபோன்ற ஒருவகைப் பிரமை சூரிய வெளிச்சம் காற்று, ஆகாயம் இவற்றை மெல்ல மெல்ல அண்மித்து வரும் சுவர்கள் நம்மிடமிருந்து அபகரித்து விடுவதாக ஒரு புதுமையான எண்ணம் நமக்குத் தோன்றுகிறது.

சிறையில் அடைபட்டுக்கிடக்க முடியாத இத்தகைய மயக்க நிலை சில சிறைக்கைதிகளுக்கு மட்டுமல்லாமல் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் கூட ஏற்படுவதுண்டு. ஒரே இடத்தில் ஒரேமாதிரியான நிலையில் வெளியே ஒருவித தொடர்புமற்ற முறையில் ஒரு தனிஉலக வாழ்க்கையில் நாட்கள் கழியவேண்டுமென்றால் அது மிகக் கடினமானதே! இத்தகைய இக்கட்டான நிலையில்நமக்குஒருவிதஆறு

## வெள்ளிமல்லிகை

தலாக இருந்தது ஜோதிடம் கேட்டுக்கொள்வது தான். எங்கள் உணர்ச்சிக் கொந்தளிப்புகளுக்கு சோதிடம் ஓர் உன்னத மருந்தாக நமக்குத் தோன்றியது.

ஒருசமயம் மூன்று மாதங்களாகத் தொடர்ந்து நடைபெற்ற பொது வேலைநிறுத்தம் காரணமாகவும் எங்களுக்குச் சிறைச்சாலைக்கு வெளியே தொடர்புகொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது.

துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர் அல்லவா? அதனல் அங்கு கப்பல்களிலிருந்து பொருட்கள் இறக்குவதற்கு எம்மைப் பயன்படுத்தினர்கள். கப்பல்களில் கரிமூட்டைகள் இறக்கவேண்டிய பணியில் நாங்கள் ஈடுபட்டோம். இந்த வேலையில் தனித்தனி குழுவாகப் பிரிக்கப்பட்டு வேலை செய்தோம். இரவுபகல் முழுநேரமும் வேலை செய்ய வேண்டியிருந்தது. இப்படித் தொடர்ந்து மூன்றுமாதங்கள் நாம் இந்தவேலையில் அமர்த்தப்பட்டோம். இந்த வேலை மிக அழுக்கும் அருவருப்புமாகவே இருந்தது. கரிமூட்டை ஒன்றைத் தூக்கியவுடனே எங்கள் மேனி முழுவதும் கரித்தூள் தூசு அபிஷேகம்தான். அழுக்கு நிறைந்த வேலையென்ருலும் எங்களுக்கு மகிழ்ச்சி தரும் வேலையாக விருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கப்பல் வேலையில் ஈடுபட்ட நமக்கு முழுச் சுதந்திரம் கிடைத்தது. கப்பலில் வேலை செய்பவர்களுக்கு அளிக்கும் உணவே நமக்கும் அளிக்கப்பட்டது. சிறைச்சாலை உணவுடன் ஒப்பிடும்போது கப்பல் உணவு சிறந்ததென்றே கூறவேண்டும்.

மூன்று மாதங்களாக இரவும் பகலும் தொடர்ந்து வேலை செய்வதற்கு அமர்த்தப்பட்டோம். ஆயிரம் சிறைக்கைதிகள் இந்தவேலையில் அமர்த்தப்பட்டபோதிலும் ஒரு சிறைக்கைதிகூடத் தப்பி ஓடிவிடவில்லை. இன்னென்று துறைமுகத்தில் மூட்டை தூக்கும் பணியில் மூன்றுமாதங்களாக சிறைகைதிகள் ஈடுபட்டதன் பலனக நாற்பதாயிரம் ரூபா பணம் துறைமுகத் தொழில்தாபனம் மூலம் சிறைக்கூடப்பகுதி பெற்றது. இத்தொகை இலங்கையடங்கிலும் உள்ள சிறைச்சாலைக் கைதிகளின் செளகரியத்துக்காக ஒதுக்கப்பட்டது.

## உங்கள் இராசி பலன்

**மேடம்:**

வாழ்க்கையில் ஒரு வித சலிப்பு, இருப்பிலுள்ள பணம் விரயமாகிவிடும், படிப்பில் ஓரளவு முன்னேற்றம் கிட்டும், தனிமையில் இன்பம் காண்பீர், வளர்ப்பு மிருகங்கள் கொள்வனவு செய்வீர். இரும்பு கடினப் பொருள் வியாபாரிகட்கு உன்னத காலம்.

**இடபம்:**

இன்ப வாழ்வில் உச்சக் கட்டம். வியாபாரவகையில் நஷ்டம் காண்பீர், பலருக்கு விவாககாலமேயாகும் தொழில் கருதிப் பிரயாணம் மேற்கொள்ளலாம்.

**மிதுனம்:**

குருபகவானின் கிரணங்கள் சுமுகபான்மைகாட்டுவதாயுள்ளது. பெண்பால் உறவு வளர்வுகாணும். வியாபாரவகை இலாபமுண்டு. அதிர்ஷ்டம் காத்திருக்கிறது. அரசியல் ஆட்சியாளர் உதவி கிட்டும், பிரயாணம், யாத்திரை இவை நிகழும் கோள்கள் உன்னத நிலை காட்டுகின்றன.

**கடகம்**

தருமசிந்தைவேண்டும். கற்றோரால் போற்றப்படுவீர், பொதுப்பணி ஈடுபாடு உண்டு. பலருக்கு அரசியல் செல்வாக்குப் பெருகும். இருமல் சளிப்பிடிப்பு காய்ச்சல் ஆகிய நோய்களுண்டு. கடினப் பிரயாணம் தவிர்க்கவும்.

**சிங்கம்:**

வார நடுப்பகுதிவரை உல்லாசத்திற்குக் குறைவு இல்லை. உற்றார் உறவு காண்பீர். மாணவர் பலர்க்கு ஏமாற்றம் எதிர் நோக்கும். பெண்களால் உதவி கிட்டும். சக ஊழியரின் அன்பு கிட்டும்.

**கன்னி**

பெண்பால் நாட்டம் உண்டு, பயிர்வகை விருத்தி உண்டு, சில விஷயங்கள் தீர்வு பெறுது சிக்கல் நிலை காணும். காணிக்கொள்வனவு பலருக்கு உண்டு. வயது முதிர்ந்தார்க்கு மதிப்புக் கொடுக்கவும், கலைத்துறை ஈடுபாடு காண்பீர்.

**துலாம்:**

அதிர்ஷ்டம் உங்கள் பக்கம்தான். பணப்பெருக்கு உண்டு. ஆடம்பரவகைச் செலவும் கூடுதலாக இருக்கும். மங்கல விஷயங்கட்குக் குறைவில்லை. புத்திரர்களால் மனமகிழ்ச்சி காணலாம். யாத்திரை போகும் அறிகுறிகள் காணப்படுகின்றன.

**விருச்சிகம்:**

வாழ்க்கைப் பாதையில் இன்னல் விளைத்த எதிரிகள் வலுக்குன்றுவர். குடும்பத்தில் சல்லாப நிலை உண்டு. ஒரு சிலருக்குப் புத்திர சோகமும் சிறிது தலைகாட்டும். வியாபாரிகட்கு மந்தமான காலமேயாகும்.

**தனு:**

செலவிற்குப் பணம் தானகவே வந்துசேரும். சொத்து

(14ம் பக்கம் பார்க்க)


# இரு மலிவு விற்பனை

## பொருமால்ஸ் ரொலறம்ஸ்

உங்களுக்குத் தேவையான சகல ஜவுளிகளின் விலைகளும் மிகமிகக் குறைக்கப்பட்டுள்ளன.

| சேட்பகுதி | U.P | S.P | சூட்பகுதி | சேலைப்பகுதி | UP | S.P |
|---|---|---|---|---|---|---|
| வின்ரன் | 37-50 | 35-00 | | வொயில்சாறி | 21-50 | 19-50 |
| கப்ஸ்ரன் | 27-50 | 24-50 | விலை மிக மிக | மணிப்புரி | 225-00 | 145-00 |
| டயாடேர்பி | 22-50 | 19-00 | | நைலக்ஸ் | 60-00 | 54-00 |
| ஒக்ஸ்போட் | 26-50 | 24-50 | குறைக்கப்பட்டுள்ளது | கைத்தறி | 32-00 | 28-00 |
| ஸ்கைவே | 23-50 | 22-00 | | பிறின்றெட் நைலக்ஸ் | 60-00 | 53-00 |
| டியூரோ | 27-50 | 17-00 | | | | |

அத்துடன்

லினின் றெடிமேட் களிசான்கள் ரூபா 30/- தொடக்கம் ரூபா 80/ வரையும்

# ரொலறம்ஸ்

46, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7099


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதிஷமணி மேல்காரவை காவ. சிவப்பிரகாசன்

# நாட்டின் வாழ்க்கை..

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரம் இயங்கி வரும் இளம் பயனியர் மாளிகைகள், நாமே - செய்வோம் நிலயங்கள், உடற்பயிற்சி நிலயங்கள், கிளப்கள், விசேஷ விளையாட்டு நிலயங்கள், பள்ளிக்கூடங்கள் குழந்தைகளுக்கு பரிபூரணமான கல்விபுகட்ட ஏதுவாய் உள்ளன.

ஆகவே, சிறுவர் பராமரிப்பு நிலயங்கள், கிண்டர் கார்டன்கள், பள்ளிக்கூடங்கள்', பள்ளிதவிர மற்றும் கல்வி ஸ்தாபனங்கள் அனைத்தும் சிறுவர்களைச் சிறப்பாக பயிற்சியளித்து உருவாக்கும் கல்வி அமைப்பின் அம்சங்களாகத் திகழ்கின்றன. இதற்காக அரசாங்கம் வருஷத்துக்கு3 1/2லட்சம்கோடி ரூபா செலவு செய்கிறது. இதேபோல ஆயிரக் கணக்கான ஒய்வு நிலயங்களுக்கும், ஆரோக்கிய நிலயங்களுக்கும் அரசாங்கம் செலவிடுகிறது. மேலும் எம் நாட்டில் 'வன பள்ளிக்கூடங்களும்' உள்ளன, இங்கே ஆரோக்கியக் குறைவான குழந்தைகளுக்குக் கல்வியூட்டப்படுகிறது.

எம்நாடு தாய்மையைப் பெரிதும் போற்றும் நாடாகும். அதன் பிரஜையாக இருப்பதில் நாம் பெருமையடைகிறோம். குழந்தைக்கு உண்ண உணவும், இருக்க வாசஸ்தலமும், உடுக்கஉடையும் கொடுப்பது என்பது அல்ல எம்நாட்டுத் தாயின் பிரச்சினை. குழந்தையின் ஆன்மீக வளர்ச்சியை எப்படிச் செழுமைப் படுத்துவதென்பதே அவர்களின் கவனத்தைக் கவரும் விஷயமாகும். பொருளாதார வசதிகள் உயர்ந்துவிட்டதை மாத்திரமல்ல இது காட்டுகின்றது. சோவியத்காற்று மாதர்களின் ஆத்மீக வாழ்க்கையின் மாற்றத்துக்கும்இது சான்றாகும்.

இன்று சோவியத் மாதர்கள் சகலதுறைகளிலும் ஆடவர்களுடன் சரிநிகர் சமானமாகநாட்டுக்குப் பணியாற்றி வருகின்றனர்.

புரட்சி வெடிப்பதற்குச் சற்று முன்னர் லெனின் கூறினார்: 'உழைக்கும் ஆடவர்களுடன் உழைக்கும் மாதர் சமதையாக இருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். இதைச் சட்டத்தின் முன்னிலையில் மாத்திரமன்றி நடைமுறையிலும் நிலைநிறுத்த விரும்புகிறோம்,' எம்நாட்டில் ஒரே வேலைக்கு ஒரே சம்பளம் என்ற நியதி மாற்றமின்றி அமுல் நடத்தப்படுகின்றது. இது சோஷலிஷ நியதியாகும்.

50 ஆண்டுகளுக்குமுன்னர் 88 சதவிகிதம் மாதர் கல்வி வாசனையற்றிருந்தனர். இன்று 45 000 மாதர் பேராசிரியர். பேரவை உறுப்பினர், கலாநிதி பட்டம் பெற்றுத் திகழ்கின்றனர். அன்று ஐந்தில் நாலுபகுதி உழைக்கும்மாதர் வீடுகளில் வேலை செய்பவர்களாய் இருந்தனர். இன்று நாட்டின் ஆசிரியர், என்ஜினியர், டாக்டர்களில் 75 சத விகிதத்தினர் பெண்களாவர். அன்று 33 வருஷங்களாக இருந்த ஆயுள்காலம் இன்று 70 ஆக உயர்ந்துள்ளது.

இன்று நாட்டின் வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் மாதர் பெரும் பங்காற்றுகின்றனர்.

## யாழ்ப்பாணத்து..

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

பயனளிக்கவில்லை. கடைசியில் ஒரு முனிவரின் கட்டளைப்படி யாழ்ப்பாணம்வந்து கீரிமலையில் தீர்த்தமாடினுள். பின் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலையடைந்து இறைவனிடம்தன் குறையைத் தீர்த்தருள வேண்டினுள். இறைவன் அருளினுலே அவளுடைய குதிரை முகம்மாறி பழைய முகம் தோன்றியது. அன்று முதல் இவ்விடத்துக்கு 'மாவிட்டபுரம்' என்ற பெயர் ஏற்பட்டது.

சுயமுகம்பெற்ற அரசகுமாரி மிக்க மகிழ்ச்சியடைந்து, கந்தசுவாமியாரை மனமாரப் பூசிந்து அவருக்கு அவ்விடத்தில் ஓர் ஆலயம் எழுப்பவிரும்பினுள். நடந்த செய்தியைத் தந்தைக்கு அறிவித்து அங்கிருந்து கந்தசுவாமியார், வள்ளியம்மை, தெய்வயானை ஆகிய விக்கிரகங்களை அனுப்பும்படி வேண்டினுள்.

உக்கிரசிம்மனும் மன மகிழ்ச்சியோடு இவ்விக்கிரகங்களைசோழநாட்டிலிருந்து அனுப்பிவைத்தான். அவைகள் காங்கேசன்துறையில் கொண்டுவந்து இறக்கப்பட்டன.

மாருதப்புரவீகவல்லி இவ் விக்கிரகங்களை வைத்து மாவிட்டபுரத்தில்இப்போது பிரசித்தமாக விளங்கும் இந்தக் கோவிலைக் கட்டுவித்தாள்.

மாருதப்புரவீகவல்லி பல காலம் இவ்விடத்திலேயே தங்கியிருந்து முருகனை வழிபட்டாள். இவள் தங்கியிருந்த இடம் குமாரத்திபள்ளம் எனக் கூறப்படுகிறது. இப்பொழுதும் இப்பெயர் வழங்கிவருகிறது.

## வயலின் பேசுகிறது

(7-ம் பக்கத் தொடர்ச்சி

இசைநிகழ்ச்சிகளில் பங்கு பற்றியதுண்டா?

ப: 1967-ம் ஆண்டு கதாப் பிரசங்கமணி திரு. தா, பொன்னம்பலத்துடன் மலாயா சென்றேன். அங்கு பல இசை நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருக்கின்றேன். கோலாலம்பூரில் ஸ்கொட்ரேட் கந்தசுவாமிகோவில், விவேகானந்த ஆசிரம ஜெயந்தி விழா, பெட்டாலிங் ஜாயா சித்திவிநாயகராலயம், மலாயன் சைவசித்தாந்த சங்கம், சுங்கைபூலோ ஆகிய இடங்களில் நிகழ்ச்சிகளில்பங்குகொண்டுவயலின் வாசித்துள்ளேன்.

### பிடித்தவர்கள்

கே: தங்களுக்குப் பிடித்தமான இந்திய வயலின் வித்வான்கள் யார்?

ப: காலஞ்சென்ற கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை, லால்குடி ஜெயராமன், எம். எஸ். கோபாலகிருஷ்ணன், ரி. என். கிருஷ்ணன் ஆகியோர் எனக்கு நன்கு பிடித்தமான வயலின் வித்வான்கள்.

இந்தியப் பாடகர்களுக்கு யாழ்ப்பாணத்திலும் கூட பக்கவாத்தியம் வாசித்துப் பாராட்டுக்களைப் பெற்ற இவர் தன்னை அறிமுகப்படுத்திய புல்லாங்குழல் ஆர், மூர்த்திஐயர், பல கதாப்பிரசங்கங்களுக்குப் பக்கவாத்தியம் வாசிப்பித்து ஆசீர்வதித்த திருமுருக கிருபானந்தவாரியார் என்போரை என்றும் மறக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

இவருடைய இசையாற்றல், திறமை, ஈழத்திற்குப் பெரும்புகழ் தேடித்தரும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

அவரின் இசைப் பணி வளர்க!

# ஏரினும் நன்றாய்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு உடனடியாகப் பலனைக் கொடுக்கும். எமது நாட்டில் நிலங்களின் கரிசல் பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு மூலாதார எருக்களான இயற்கை உரங்களும், உடனடியாகப் பயிருணவை தருவதற்கு ரசாயன உரங்களும் தேவை. ரசாயன உரங்களில் காலகச் சத்து நிறைந்துள்ள அமோனியம் சல்பேட், சோடியம் நைட்ரேட், கல்சியம் சைனமைட், அமோனியம் பொஸ்பேட், அமோனியம் நைட்ரேட் ஆகியவை சிறந்தவை. இவற்றினுள்ளும் அமோனியம் சல்பேற்தான் முக்கியமானது.

### பொஸ்பேட் உரம்

தாவர வளர்ச்சிக்கு இன்றியமையாத உணவுச் சத்துகளில் ஒன்று பொஸ்பேட். நமது பயிர் நிலங்களில் பெரும்பாலும் இயற்கையான பொஸ்பேட் சத்து குறைவாகவே காணப்படுகிறது. சுப்பர் பொஸ்பேட் அல்லது ஹைப்பர் பொஸ்பேட் இடுவதால், அது பயிரின் வேர்களை நன்கு வளரச் செய்து, பயிரைத் தக்க தருணத்தில் முதிர்ச்சியடையவும் செய்கிறது. தானிய விளைச்சலையும் அதிகரிக்கிறது.

### எரு உபயோகம்

ரசாயன உரங்களை இடுவதால் நிலம் கெட்டுப்போகிறதென்ற ஒரு தவருன அபிப்பிராயம் சில கமக்காரர்களிடத்தில் நிலவுகிறது. சரியான முறையில் அவற்றை உபயோகித்தால் அவ்விதம் நேராதென்பது நிச்சயம். இயற்கையான உரங்களில் காணப்படும் பயிருணவுச் சத்துகளே செயற்கை உரங்களின் மூலம் ஊட்டப்படுகின்றன.

அடிக்கடி தொடர்ச்சியாக அமோனியம் சல்பேட்டை உபயோகிப்பதால் நிலவளம் குறைந்துவிடுகிறதென்று சிலர் சந்தேகிக்கிருர்கள். இது தவறு. சரிவர சுண்ணும்புச் சத்து உபயோகிக்கப்படாத நிலங்களில் அமோனியம் சல்பேட் முழுப்பலன் தராது என்பது உண்மை. சுண்ணும்புச்சத்து குறைந்த நிலங்களிலும்.

அடிக்கடி அமோனியம் சல்பேட் உபயோகிக்கப்படும் நிலங்களிலும் இரண்டு மூன்று வருடங்களுக்கொரு முறையாவது சுண்ணும்புப் பொடி (கல்சியம் கார்பனேட்) தூவிவிடுவது மிகவும் நல்லது.

இயற்கை உரங்களையும் செயற்கை உரங்களையும் நிலத்துக்கும் பயிருக்கும் ஏற்றவாறு கலந்து சமமாக இடவேண்டும். நினைத்தவுடனே அகப்பட்ட உரத்தை நிலத்தில் போடுவது புத்தியானதல்ல.

— 'கலைப்பை'

## உள்நாட்டு..

( 3-ம் பக்கத் தொடர்ச்சி )

பிரதேசத் தேயிலையும் 26 வீத தாழ்ந்த பிரதேசத் தேயிலையும் இடம்பெறுகின்றன. உயர்பிரதேசB.O.P.-B.O.P.F. தேயிலைவகைகள் ஐரோப்பிய சந்தைக்கு அனுப்பப்படுகின்றன.

மத்திய கிழக்கு சந்தைக்கு மத்திய பிரதேச தாழ்ந்தபிரதேசத் தேயிலை அனுப்பப்படுகின்றது.

அண்மைக்காலப்புள்ளிவிபரங்கள் மத்திய கிழக்கில் இலங்கையின் தேயிலைக்கு சந்தை விரிவடைந்துள்ளது என்பதனை எடுத்துக்காட்டுகின்றது.

அதேபோல அண்மையில் ஐரோப்பாவில்எடுத்த புள்ளி விபரங்கள்ஐரோப்பிய குடும்பப் பெண்கள் கடின சாயத் தேயிலையை(Strong Tea) உபயோகிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

படிப்பனைக் கதை [ வி என். பி. ]

# அத்திரிநாதன் பட்ட அவமானம்

கீரிவனம் என்னும் அடர்ந்த காட்டிலே சிங்கம், புலி, கரடி, யானை முதலிய மிருகங்களுடன் அத்திரி வேந்தன் என்ற கழுதையும் வசித்து வந்தது. மற்ற மிருகங்கள் வாயைத் திறந்து கத்தும்போது ஏகசுருதியில் தான் தொனி பிறக்கும், ஆனுல் கழுதையோ தனது சாரீர வளத்தைக் காட்ட நினைக்கும்போது நாலைந்து சுருதிகளில் சத்தம் பிறக்கும். இது காளவாய்க்கு கடவுளால் கொடுக்கப்பட்ட ஒரு வரப்பிரசாதம் என்று மற்ற மிருகங்கள் நினைத்தன. ஆனுல் கழுதைக்குத் தலைவீக்கம் வந்துவிட்டால் என்று நினைத்து அதன்மீது தாங்கள் கொண்டிருக்கும் மதிப்பை கழுதையிடம் வெளியிடவில்லை.

கழுதையும் தன் குரலைக் காட்டவேண்டிய சந்தர்ப்பம் எதுவும் கிட்டாதபடியால் வெகுநாளும்மௌனமாகவே புல்லை மேய்ந்து கொண்டு திரிந்தது.

ஒருநாள்இரவு நல்ல நிலவு எறித்துக்கொண்டிருந்த போது காளவாய் தன் கடவாயைக் கிழிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது. நெடுங்காலமாக பிரிந்திருந்த அத்திரிவேந்தன் காதலி அன்று திடீரென்று தோற்றப்பட்டு விட்டாள். கழுதைக்குச் சொல்லமுடியாத இன்பமும் எழுச்சியும் உண்டாகின. பின்னங்கால் இரண்டையும் உதறி விசுக்கி ஒரு துள்ளுத் துள்ளி விட்டு தன் காதலிக்கு முன்னிலையில் ஒரு 'ரெளண்ட்' அடித்தது. காதல் அதை கவனித்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

கழுதை மேலும் உணர்ச்சி வசப்பட்டது உடனே இவ்வளவுநாளும் மூடிவைத்திருந்த தன் அருமையான வாயைத்திறந்து நாலைந்து சுருதிகளில் இசைமீட்டித் தனது ஆனந்தப்பெருக்கை வெளியிட்டது பலகாலம் கேட்டிராதஇந்த ஓசையைக் கேட்டதும் காட்டு மிருகங்கள் எல்லாம் அரைத்தூக்கத்திலிருந்து விழித்து என்ன காரணமோ என்று ஆச்சரியப்பட்டன.

பக்கத்திலே ஒரு புளிய மரத்தின் உச்சியில் உறங்கிக் கொண்டிருந்த ஒரு பேயின் காதுகளுக்கும் இத்தொனி எட்டியது. 'ஆகா, இதுபோன்ற சுவையான நாதத்தை நான் இதுவரை கேட்டிலனே' என்று நினைத்துக்கொண்டு புளியமரத்தை விட்டுக் கீழே இறங்கிவந்து கழுதைக்குமுன்னுல் பரவசக்கூத்து ஆடத் தொடங்கியது. இக்காட்சியைக் கண்ட காட்டு மிருகங்கள் எல்லாம் 'ஆம், நினைத்தது சரியாத்விட்டது. பேயே இறங்கிவந்து ஆனந்தக்கூத்தி ஆடும்போது கழுதையிம் ஏதோ விசேஷம் இருக்கத்தான் வேண்டும்' என்று தீர்மானித்து பலவித சைகை சமிக்ஞைகளால் தங்கள் ஆமோதிப்பைத் தெரிவித்துக் கொண்டன.

அன்றுமுதல் கழுதையின் பாட்டுக்குப் பேய் நடனமாடுவது அந்தக் காட்டில் தினசரிக் காட்சியாகி விட்டது.

திடீரென்று ஒருநாள்காளவாயின் காதலி எங்கேயோ ஓடிவிட்டாள். காதலன் பிரிவாற்ருது இசை முழக்கிக் கொண்டு காட்டின் எல்லையைத்தாண்டி நாட்டிற்குள் நெருங்கினுன். பின்னுலே ஆடிக்கொண்டு வந்தபேய் விடிந்துவிட்டதால் சட்டென ஓடிப்போய் புளியமரத்தில் ஏறிக்கொண்டது.

கழுதை பேரிரைச்சல் போட்டுக்கொண்டு நாட்டிற்குள் நுழைந்ததும்வயல்வெளிகளில் மேய்ந்து கொண்டு நின்ற பெரிய காளைகள் அந்த அவலத்தைக் கேட்டு சகிக்கமுடியாமல், எல்லாமாக ஒரேசமயத்தில்கழுதையைத் துரத்தித் தாக்க ஆரம்பித்தன. சற்றும் எதிர்பாராத இந்த வரவேற்பைக் கண்டு மிகவும் ஆச்சரியமடைந்த கழுதை மோட்டுப் பயல்கள், அஞ்ஞானிகள் என்று திட்டிக்கொண்டே காட்டுக்குள் ஓடி மறைந்து விட்டது.

படிப்பனை : ஊமையன்கள் ஊரில் உளறுவாயன் பெரியவன்'

## உங்கள் இராசி...

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

சேரக்கூடிய நிலை, தென்படுகின்றது. பலர் வீடு கட்டும் முயற்சியிலீடுபடுவர். நினைத்தவற்றைச் சாதித்து முடிப்பீர். இரத்தாசயம் சம்பந்தப்பட்ட நோய்கள் உண்டாகும்.

**மகரம்:**

மிகவும் விறுவிறுப்பான காலம். தொழில்பலிதமுண்டு. புத்திரர்வகைச் செலவும் உண்டு. கடின பிரயாணம் தவிர்க்கவும்.

**கும்பம்:**

மனதில் தூய்மை உண்டு. பண விஷயம் சீரடையும், கஷ்டங்கள் குறைவுபடும். சக ஊழியரின் உதவி கிட்டாது மறைமுகமாக எதிரிகளின் தாக்குதலும் உண்டு. பிரயாணங்கள் தடைப்படலாம். பெண்வழி சுகம் கிட்டும்.

**மீனம்:**

பலருக்கு உதவிபுரிவீர், அப்படியிருந்தும் பலரின் வெறுப்பையும் தேடிக் கொள்வீர், செல்வம் சொத்து நிலைப்படாது, பணம் பொன் மறைய இடமுண்டு, தொழில் முன்னேற்ற முண்டு, உத்தியோக மாற்றம் காரணமாய் திடீர் பிரயாணமுண்டு. இருதய வியாதிகள் பலருக்கு இன்னல் கொடுக்கும்.

## உள்ள...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிணக்கின்றி சமரசமாய் அந்த காக்கக் கடவிய பூக்கும் கடம்பனை வழிபட்டு ஈடேறவும், அவனருளையே, மெய்த்துணையாக வேண்டி நிற்போமாக!

''உருவாய் அருவாய்
உளதாய் இலதாய்
மருவாய் மலராய்
மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்
கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய்
அருள்வாய் குகனே''.
(கந்தரனுபூதி)

என்பதனைக் காட்டுகின்றது. இத்தகைய வெளிநாட்டு நிலைமையை கவனத்தில் கொள்வதுடன் உள்நாட்டிலும் மாற்றத்தைக்கொண்டு வருவதில் உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்த கட்டுரையில் வெளிநாட்டுச் சந்தையில் நிலவும் விலைகளின் கட்டுப்பாடுபற்றியும், இலங்கைத் தேயிலை வர்த்தகத்தில் செய்யவேண்டிய சீர்திருத்தம்பற்றியும் ஆராய்வோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
போயா, பிரிபோயா 2-30
தாயைக் காத்த தனயன்
நடித்த
எம்.ஜி.ஆர். சரோஜாதேவி

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 945-P.M.
Poya, Pre poya 4 Shows
Walter Matthau &
Anne Jackson
in
THE SECRET LIFE
OF AN
AMERICAN WIFE
(Adults only)

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
என். எஸ். கிருஷ்ணன் ரி. ஏ. மதுரம் - டெய்ஸி ராணி நடித்த
67-ல் என்.எஸ்.கிருஷ்ணன்
(எஸ், ரி. ஆர். பிலிம்ஸ்)
அமரர் அண்ணு, தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி, திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.
பிலிம் (f) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.

வின்ஸர் (யாழ்ப்பாணம்) 2-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
* ராஜம் * புவனேந்திரம் நடித்த
வெண்சங்கு

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ் — ஜெயந்தி நடித்த
இரு கோடுகள்

2வது வாரம் வெஸ்லி மானிப்பாய்
தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-00 மணி
சத்தியன், ஷீலா, மது நடித்த
செம்மீன்
(ஈஸ்ட்மன் கலர் - மலையாளம்)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை
வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்
தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'
துணைவன்
கதை வசனம் பாலமுருகன்
சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணத்தில் வீடு, காணி, வயல்கள் தேவை. பணம் உடனே கொடுப்போம் எழுதுங்கள்; வெஸ்டன் றேட்ஸ், தபால் பெட்டி 54, யாழ்ப்பாணம். 3011

### விற்பனைக்கு

உடுவில் சங்குவேலி, கந்தரோடை றோட்டுக்கு அருகாமையில் உள்ள 6 பரப்புக் கொண்ட குடியிருப்புச் சற்சதுரகாணி உளது. வாங்க விரும்புவோர் கீழ்க் கண்ட விலாசத்துக்கு வந்து காணவும். என். குமாரசுந்தரம், 46/4, 1-ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 3038

ஆறு பரப்புக்காணி குடியிருக்கும் வீடு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு. வை. நாகராசா, 15/5 குமாரசாமி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். 3042

ஆதனம்:
யாழ்ப்பாணம் மாநகரசபை 9-ம் வட்டாரம் கனகரத்தினம் வீதி அருகில் உள்ளதும் திருமகள் றோட், சாஸ்திரியார் ஒழுங்கை இரு வழியிலும் பாதை உள்ள 8 பரப்பு குடியிருக்கும் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: சி. சிவஞானசுந்தரம், 50, ஆரியர்வீதி அல்லது 489, நாவலர்றோட், யாழ்ப்பாணம். 3043

யாழ்ப்பாணம் நாவற்குழியில் மத்திய வகுப்பினர் வீடு கட்டுவதற்கேற்ற பதினைந்து துண்டுக் காணிகள் உடன் விற்பனைக்குண்டு, நல்ல தண்ணீர், மின்சாரம் போக்கு வரத்து வசதிகள் உள. புகையிரத நிலையத்திற்கும் யாழ்ப்பாணம்— கண்டிவீதிக்கும் அண்மையில் காணித் துண்டுகள் நான்கு தொடக்கம் ஆறு நிலப்பரப்புவரை. பெரியகடையிலிருந்து பஸ் கூலி பதினைந்து சதம். நிலப் பரப்பு விலை ரூபா 500/- மாத்திரம். நல்ல சாதனம். நேரில் மனுச்செய்க. லான்ட் இன்வெஸ்ட்மென்ட். 6, பிரதானவீதி. யாழ்ப்பாணம். 3047

வருத்தலை விளான் கட்டுவன் எல்லையில் 'சாத்தனுவத்தை' என்னும் தோட்டம் 7 1/2 பரப்பு விற்பனைக்குண்டு. விரும்புவோர் கீழ்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். திருமதி சபாரத்தினம், C/o பரமேஸ்வரன். 98A, பலாலி றோட், கந்தர்மடம். 3048

### கல்வி

29-8-70ல் ஆரம்பமாகவிருக்கும் மோட்டார் டிராக்டர் டீசல் முழு நேரப் பயிற்சி வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் நேரடியாகவோ அல்லது கடித மூலமோ தொடர்பு கொள்ளவும். அதிபர், ஸ்ரீராஜ் ஒட்டோ மொபைல் என்ஜினியரிங் நிறுவனம், மொமம்சாக் மாளிகை, மேல் மாடி. 11/A & 11/B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3034

MANOHARA
JAFFNA
Daily 4-30, 7-00 & 9-45 p.m.
Poya days 10-30 A.M.
Shakespear's
ROMEO
and
JULIET
(Is no ordinary
Love Story)
Starring- 15 years old
OLIVIA HUSSEY (Girl)
17 years old LEONARD
WHITING (Boy)

# இந்திய பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தக் கோரிமகஜர்

## பிரதமரிடம் கையளிப்பு

கோட்டை, வெள்ளி

இலங்கை மக்களின் கலை கலாசாரங்களுக்கு ஊறுவிளைவிக்கும் இந்திய பிரசுரங்கள் இறக்குமதி செய்யப்படுவதைத் தடைசெய்யுமாறு கோரும் அறிக்கையொன்றை இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் பிரதம மந்திரியிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்தச் சங்கத்தின் சார்பில் திருவாளர்கள் தர்மசிறி ஜெயக்கொடியும், எச் எம். பி. முகைதீனும் மகஜரைப் பிரதம மந்திரியிடம் கையளித்திருக்கிறார்கள்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 64 பத்திரிகைகளில் 13 பத்திரிகைகள் மாத்திரம் திராவிட முன்னேற்றக் கழகப்பிரசார ஏடுகளாகவிருக்கின்றனவென்று இவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பத்திரிகைகள் இலங்கை கலைகளுக்கும் கலாசாரத்துக்கும் ஊறுவிளைவிக்கும் சஞ்சிகைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்என்று இலங்கையிலுள்ள எழுத்தாளர்களும், பத்திரிகைகளும் குரல் எழுப்பிவந்துள்ளார்கள் என்றும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புதிய அரசியல் அமைப்பில்..

[2ம் பக்கத் தொடர்ச்சி!

அமுல் நடத்தும் முறை பற்றி இந்தியப் பிரதமர் இந்திராவுடன் பேச இருப்பதாகத் தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தப்படி, இந்திய பிரஜைகளானவர்கள், தாய் நாடு திரும்பினால்தான், அப்படித் திரும்பியவர்களின் எண்ணிக்கை விதாசாரப்படி, இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப்படுமென்பது இலங்கைப் பிரதமரின் கட்சி. அதாவது நாடற்றவர்கள் இந்திய பிரஜையாகப் பதிவு செய்தால்மட்டும்போதாது. இந்தியப் பிரஜையாகி தாய் நாட்டுக்குத் திரும்பியவர்களைக் கணக்கிட்டு. அதன்படி 7 பேர் திரும்பினால், 4 நாடற்றவரை இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்யலாமென்று இலங்கைப் பிரதமர் வற்புறுத்துவார்.

புதிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததும் இலங்கைப் பிரஜைப் பதிவு வேலை அதிக துரிதமாக நடந்து வந்துள்ளது. இவ்வேலை தொடர்ந்து தடையில்லாமல் நடைபெற, இலங்கைப் பிரதமரின் கருத்தை இந்தியப் பிரதமர் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கும். இன்றேல் மீண்டும் பெரிய முட்டுக்கட்டை ஏற்பட்டு, பிரஜைப்பதிவு வேலை தடைபடக்கூடும்.

இரு பெண் பிரதமர்களும் நேரில் சந்திக்கையில், வேறு பல முக்கிய விஷயங்களிலும் அவர்கள் கலந்தாலோசிக்கலாம். இதுவரை அநேகமாக இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கையையே இலங்கையும் பின்பற்றி வந்தது. ஆனால் சமீபகாலமாக, புதிய அரசாங்கம் இலங்கையில் பதவி ஏற்றதும் இலங்கை புதிய வழியைப் பின்பற்றுகின்றது. உதாரணமாக இஸ்ரேலுடன் அரசியல் உறவுகளைத் துண்டித்தது, தெற்கு வியட்னுமிலுள்ள தற்காலிக புரட்சி அரசாங்கத்தை அங்கீகரித்தது முதலியவற்றைக்குறிப்பிடலாம், தெற்கு வியட்னும் புரட்சி அரசாங்கத்தின் வெளியுறவு அமைச்சர் மாடேம் பின் இந்தியா, இலங்கை இவ்விரு நாடுகளுக்கும் முதல்முறையாக விஜயம் செய்தார். இந்தியாவில் கணிசமான எதிர்ப்பு இருந்தது. இலங்கையில் எதிர்ப்பே இல்லை. தற்காலிக புரட்சி அரசாங்கத்தை இலங்கை அங்கீகரித்துள்ளது. இலங்கையின் இப்புதிய வழியை இந்தியா பின்பற்றுமா? பின்பற்றமுடியுமா? இதைப்பற்றியும் இரு பிரதமர்களும் பரஸ்பரம் கலந்து பேசக்கூடும்.

அத்துடன் இந்தியாவுக்குப் பெரிய மண்டையிடி அளிப்பது பாகிஸ்தான், சீனாக்குதலாகும். ஏற்கெனவே இந்திய-சீன எல்லைப் போரை, இலங்கை தலையிட்டு நிறுத்தியதுடன், சீனர்கள் பிடித்த இடத்திலிருந்து பெரிதும்பின்வாங்கியுள்ளனர். புதுசீனத்துடன் உள்ள எல்லைத்தகராறுகளை மீண்டும் இலங்கையின்உதவியால் சுமுகமாகத் தீர்க்க முடியாதா? இலங்கைப் பிரதமர் இவ்வகையில் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி ஓரளவு வெற்றிபெற்றுலும் அது இந்தியாவுக்குப் பெரிய கஷ்ட நிவாரணமாவதுடன், தென்கிழக்கு ஆசிய அமைதியை பலப்படுத்தவும், இலங்கையின் மதிப்பு உலகில் பெரிதும் உயரவும் முடியும். முன்னுள் பிரதமர் (பெரிய) பண்டாரநாயகா இலங்கை ஆசியாவின் ஸ்விட்ஸர்லந்தாகவிளங்கவேண்டுமென்று கனவு கண்டார் அந்தக் கனவை நனவாக்கக்கூடிய வாய்ப்பு அவரது மனைவியாரான ஸ்ரீமாவோவுக்கு பெரிதும் கிடைத்திருக்கிறது.

---

# சுவாசக்குழாய் ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நமைச்சலை ஏற்படுத்திப் படிப்படியாக அதன் தொற்றுந் தன்மை விருத்தியடைந்து கொண்டிருக்கிறது. இவ்வகையான நோயை நாங்கள் சுவாசக்குழாய்த் தாபிதம் (Bronchitis) என்றுசொல்கிறோம், இதை நீர் துப்புரவாக மாற்றவேண்டுமாயின் புகை பிடித்தலை அறவே நீக்கவேண்டும் இதில் இரண்டு வகையுண்டு. ஒன்று தீவிர நிலையானது, மற்றது நாட்பட்டது. இதேமாதிரி முன்பும் உமக்கு இடைக்கிடை வந்திருந்தால் அதையே நாட்பட்டது என்று கூறுகிறோம்.

உமக்கு முன்பு வரவில்லையென்று கூறுகிறபடியால் இந்த முறையோடு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது உமது கையில்தானுண்டு. அத்தோடு இப்போது கொடுக்கும் மருந்துகளையும் ஒழுங்கு முறைதவருது பாவிக்கவும். இப்பால்திருப்தியுடன் வெளியேறினேன். மீண்டும் அழைப்பு மணியை அழுத்தினார் டாக்டர்.

# வரவேற்பு

[பூநகரிநிருபர்]

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் பூநகரி கோட்டைமைதானத்தில் இன்று பொது வரவேற்பு அளிக்கப்பட விருக்கிறது.

பல்லவராயன்கட்டுகிராம சபைத்தலைவர் திரு சி. இரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவுக்கு முன்னதாக சங்குப் பிட்டியிலிருந்தும் பூநகரிநல்லூரிலிருந்தும் தமிழரசுத் தலைவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிமொழி!

தீங்கிழைத்தவரிடத்திலும் அன்பு காட்டல் மனிதன் ஒருவனுக்குத்தான் சாத்தியமாகும். ஒருவன் நமக்குத் தீங்கிழைக்கும்பொழுது, அவன் நமக்குச் சகோதரன்தானென்றும், அறியாமையால்தான் அவன் அவ்விதம் செய்கிறுன் என்றும், அவனும் நாமும் வெகு சீக்கிரத்தில் இறந்து ஒழிவோம் என்றும், அவன் தீங்கிழைத்தும் நம் ஆன்மாவிற்கு யாதொரு பங்கமும் ஏற்படவில்லையென்றும் நாம் கருதினுல், உடனே அவன்பால் நமக்கு அன்பு பிறக்கும்.

—மார்க்கஸ் ஔரேலியஸ்


மில்க்வைற்சோப்

விற்பனையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

மில்க்வைற் சோப் 72 கட்டிகள் பார்சல் செய்து வரும் 25 ரூப்பர் தாள்களுக்கு ஒரு அழகிய துவாய் அல்லது ஒரு டொக்கிமென்ட் பாக் கொடுக்கப்படும்.

மில்க்வைற்சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்


தொழிலாளர் பிரச்னை தீர

# தோட்டங்கள் தேசியமயமாகவேண்டும்!

## டாக்டர் என். எம். கூறுகிறுர்

நாவலப்பிட்டி, சனி

"தோட்டத் தொழிலாளரின் குறைகளைத் தீர்க்க லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன்மூலம் ஆரம்பகாலந்தொட்டு பாடுபட்ட நாம் தொடர்ந்தும் அவ்வித சேவையைச் செய்வோம். தோட்டத் தொழிலாளர் பிரச்னைகளை அறிந்த ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தோட்டத் தொழில் அமைச்சை பொறுப்பேற்றுள்ளது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

இவ்வாறுநிதிஅமைச்சரும் சமசமாஜ கட்சித் தலைவருமான டாகடர் என் எம். பெரேரா நாகஸ்தனையில் இடம்பெற்ற வரவேற்பு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியன் நாவலப்பிட்டிப் பிரதிநிதி திரு. யூ. நவரட்ணு தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது

தொடர்ந்து நிதி அமைச்சர் பேசுகையில், 'தோட்டங்களை முழுதும் தேசியமயம் ஆக்கினுல் ஒழிய தொழிலாளர்களின் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது. தொழிலாளர்கள் ஒரே தொழிற்சங்கமான லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனில் சேர்ந்து யூனியனைப் பலப்படுத்தினுல் தொழிலாளர் பிரச்னைகளை வெகுவிரைவில் தீர்க்கமுடியும்'' என்றுர்.

### இடமாற்றம்

வாழைச்சேனை, வெள்ளி

மன்னுர் முருங்கன் மகாவித்தியாலயத்திலிருந்து திரு. எஸ். எஸ். மனேகரன் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## 10 பஸ்களில் 3மட்டும் சேவை

புதுக்குடியிருப்பு, வெள்ளி

முல்லைத்தீவு பஸ்டிப்போவில் உள்ள பத்து பஸ்களில் மூன்று பஸ் மட்டுமேசேவையில் ஈடுபட்டுள்ளதால் இப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். உத்தியோகஸ்தர்கள் நேரத்துக்கு தங்கள் வேலைக்கு போகமுடியாமல் இருக்கிறதாம்.

### நியமனங்கள்

ஊரதிவு, ஞாயிறு

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக திரு என் கிருஷ்ணசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

0 0

தீவுப்பகுதி மாவட்ட, மலேரியாத் தடுப்பு இயக்க அதிகாரியாக திரு க. கனகசபை நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஊர்காவற்றுறை சுகாதார அதிகாரியாகக் கடமையாற்றியவராவர்

0 0

அல்லைப்பிட்டி சுகாதாரப் பரிசோதகர் திரு. விஸ்வலிங்கம், ஊர்காவற்றுறைப் பகுதிச் சுகாதார பரிசோதகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஈழநாடு

சாதாரண வருடம் ஆடி மாதம் 24-ந் திகதி [9-8-70]

## அவர் காட்டிய வழி

சுந்தரமூர்த்திசுவாமிகளின் குருபூசையாகிய இன்று சைவர்கள் அவரது புராணத்தைப் படித்து, வழிபாடாற்றி, மகேஸ்வரபூசைகள் நடத்துவர்.

சம்பிரதாய பூர்வமாக இவற்றைச் செய்வதுடன் நிறுத்திவிடாமல் அந்தச் சுவாமிகள் வாழ்க்கையும் அவர் பாடியுள்ள தேவாரச் செல்வங்களும் நமது இன்றைய பிரச்னைகளைத் தீர்க்க என்னவழி காட்டுகின்றன? என்பதை ஆராய்ந்து, அதன்படி நடக்க முற்பட்டாலே தக்கபயன் ஏற்பட முடியும்.

'வழிபாடு' என்றுலே, அவர் காட்டிய வழியில் நடப்பது என்பதே உண்மைப் பொருள். தூபதீபம் காட்டிக் கும்பிடுவது மட்டும் பூரண வழிபாடு ஆகிவிடாது. அப்படிப் பார்க்கும்போது சுவாமிகள் சைவ சமூகத்துக்குக் காட்டிய வழியென்ன என்பதை சற்றே ஆராயவேண்டியிருக்கும். அந்தண மரபில் பிறந்த அவர் "சாதி உணர்ச்சியுடனே 'அந்தணர் மற்ருேர் அந்தணருக்கு அடிமையாவதில்லை' என்று கிழவர் வடிவத்தில் வந்த இறைவனுடன் வாதித்து, 'பித்தா' என்றும் கடிந்தார். அவரை இறைவன் தடுத்தாட்கொண்டதும் சாதி உணர்ச்சிகளை எல்லாம் அறவே விட்டார். அந்தணர்களுக்கு மட்டுமன்றி, குயவர் முதலிய பலசாதி அடியவர்களுக்கும் 'அடியேன், அடியேன்' என்று திருத்தொண்டத்தொகையில் பாடியுள்ளார். சிவனடியார் யாராயினும் சரி. அவர்களிடையே சாதி வேற்றுமை பார்க்கப்படாதென்பதையே அவரதுவாழ்க்கையும் வாக்கும் காட்டுவதாயுள்ளன.

இன்று சைவசமூகத்திலே சமயசம்பந்தமாக சாதிப் பிரச்னையே தலைதூக்கி பெரும்பாடு படுத்துகின்றது.

இதற்குச் சுமுகமான தீர்வு என்ன என்று தெரியாமல் பலரும் திகைக்கிருேம். இந்தச் சமயத்திலே சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூசை வருவது தற்செயலன்று. நமக்கு இன்று ஏற்பட்டுள்ள பெரிய சிக்கலைத் தீர்க்க அக்குரவர் காட்டிய வழியை நினைவு கூர்ந்து விருப்பு வெறுப்புகளின்றி சிந்தித்தோமாயின் தெளிவான சரியான பதில் கிடைப்பதாக இருக்கும். சிந்தித்து அவ்வழி வழிபடாவிடில் நஷ்டம் யாருக்கு? பட்டதெல்லாம் போதும் போதும். நமக்கு நல்லறிவு தர இறைவன் அருள் செய்வாராக!

### சாதியை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எந்த வீடுகளிலும் திடீர் சோதனையிட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**பழைய சம்பவங்கள் வேண்டாம்**

1967—1968 ஆண்டில் சங்கானை, கொடிகாமம், அச்சுவேலிப் பகுதிகளில் நடந்த சாதிக்கலவரத்தையும் அதனுல், ஏற்பட்டஉயிர்ப்பலிகளையும், இரத்தக்களரியையும் அவைகளைக் கட்டுப்படுத்தி நிலைமையைப் பழைய நிலைக்குக் கொண்டுவர தாங்கள் எடுத்த நடவடிக்கைகளையும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் நினைவு கூர்ந்துள்ளார். இப்படியான நிலைமை மீண்டுமொரு தடவை ஏற்படாமலிருக்க வேண்டுமென்றும் அதற்காக மேற்கண்ட கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் கூறுகிறுர்.

**எசசரிக்கை**

இப்படியான பசம்வங்கள் நடைபெறுவதாகக் கூறப்படும் இடங்களில் பொலிசார் ரோந்து சுற்றி பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கையொன்றையும் விடுத்தனர்.

அசம்பாவிதச் சம்பவங்களுக்கு காரணமாக இருக்காதீர்கள். கடுந்தண்டனைக்குள்ளாவீர்கள் என்ற தொனியில் அந்த எச்சரிக்கை அமைந்திருந்தது.

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சமாசத்துக்கு சொந்தமான

## சேலைகளை கையாடினுர்களாம் இருவா மீது வழக்குத் தாக்கல்

(சங்கானை நிருபர்)

வலி-மேற்கு ப.நோ கூ.ச. சமாசத்தின் கீழ் இயங்கிவரும் மின்தறி நெசவாலையில் இருந்துவிலைமதிப்புள்ள சேலைகள் கடத்திச்செல்லப்பட்டதைத் தொடர்ந்து சமாசத்தலைவர் திரு. வி. இராசசுந்தரம் பொலிசாருக்குக் கொடுத்த தகவலின் பிரகாரம் சங்கானை பொலிசார் இளவாலையில் தையல்கடை எனக்கூறப்படும் வீடொன்றைச் சோதனையிட்டு ரூபா1728பெறுமதிவாய்ந்த 22 பட்டுச் சேலைகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் சங்கானை மின்தறி நிலையத்தில் நெசவாசிரியராகக் கடமையாற்றிய ஒருவரையும் அவரது மனைவியையும் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்செய்தனர்.

நிர்வாகத்தாருக்குத் தெரியாமல் சேலைகள் கையாடல் செய்யப்பட்டதென குற்றம் சாட்டப்பட்டுள்ள இவ் வழக்கு இம்மாதம் 10-ம் திகதி விசாரணைக்குஎடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

### புதிய பஸ் சேவை

பருத்தித்துறை, வெள்ளி

இம்மாதம் 15ம் திகதி வரை நடைபெற்றுவரும் மடுப் பெருநாளை முன்னிட்டு யாத்திரீகரின் போக்குவரத்து வசதிக்காக பருத்தித்துறையிலிருந்து தினமும் மூன்று [illegible] பஸ் வண்டிகள் கொடிகாமம்ஊடாக சேவையில் ஈடுபட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து தினம் நான்கு பஸ்வண்டிகள் மடுப் பகுதிக்குப் போய்வருகின்றன

### முதலமைச்சருக்கு வாழ்த்து

ஊரதீவு, ஞாயிறு

மூன்றுவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் பங்கு கொண்டு, அரிய ஆலோசனைகள் கூறி தமிழகம் திரும்பியிருக்கும் முதலமைச்சர் திரு. மு. கருணநிதிக்கு ஊரதீவுமக்கள் சார்பில் ஊரதீவு இளந்தமிழ் மன்றத்தினர் வாழ்த்துச் செய்தி ஒன்றுஅனுப்பிவைத்துள்ளனர்.

## இன்று

(நமது நிருபர்)

இன்று வட்டுக்கோட்டை மேற்கு மூன்ரும்பனை வைரவகோயில் முன்றலில் சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசை விழா நடைபெறுகின்றது.

இவ்விழாவிற்கு பண்டித வி நவரத்தினம் தலைமை வகிக்கின்றுர். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளது 'நாவலூர் நம்பி' என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் 'சிவனை ஏவல் கொண்ட செம்மலார்' என்ற தலையங்கத்தில் புலவர் கா வேல்முருகனின் சொற்பொழிவும் இடம் பெறுகிறது'

0 0 0

பண்டத்தரிப்பு, ஞாயிறு

பண்டத்தரிப்பு திருக்குறள் சனசமூக நிலையத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழா இன்று பண்டத்தரிப்பு சந்தைக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நடைபெறுகின்றது.

இவ்விழாவிற்கு மேற்படி சங்கத்தலைவர் திரு. எஸ்' மாணிக்கம் தலைமை வகிப்பார்.

0 0 0

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசையாகிய இன்று காலை 7 மணிக்கு விசேட அபிடேகமும் பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூஜையும் மாலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை திரு. ஸி. நல்லையா அவர்களின் கதாப்பிரசங்கமும் இரவு 7 மணிக்கு பூஜையும் உற்சவமும் நிகழும்.

### வீதிதிருத்த நடவடிக்கை

ஊரைதீவு, ஞாயிறு

ஊரைதீவு மின்னியம் வாய்க்கால் வீதி, புங்குடுதீவு பிள்ளையார் வீதி ஆகியவற்றைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளைப் புங்குடுதீவு கிராமசபை எடுத்துள்ளது

## மரண அறிவித்தல்

ஞானம்பிகை

சுழிபுரம் மேற்கு தம்பு இரத்தினம் (பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி ஆசிரியர்) அவர்களின் மனைவி ஞானம்பிகை காலமானுர் திருச்செந்தூர் (மலேயன் பென்சனர்) அவர்களின் மகளும், குமாரசூரியர் (ஆனைப்பந்தி உயர் கல்லூரி), பங்கையற் செல்வி (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி), செல்வராணி, சூரியகுமார், சந்திரகுமார், ஜெயரத்தினம், சரோஜினிதேவி (சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி) ஞானேஸ்வரி ஆகியோரின் தாயாரும், வயித்திலிங்கம், மகேஸ்வரி ஜெகதீசன் (அரசினர் வைத்தியசாலை குருநாகல்), குணதீசன், புவனேசன், சிவநேசன், உருக்குமணி ஆகியோரின் சகோதரியுமாவர். அன்னுரின் ஈமைக்கிரிகைகள் இன்று காலை திருவடிநிலை மயானத்தில் நடைபெறும். 2135

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org